தி.க. பொதுச் செயலாளர்

வீரமணி தலைமையிலிருந்து விலகியது ஏன்?

இலக்கியப்பே
நாள் ....
சென்னை-33

கொள்கை துரோகத்தை அம்பலமாக்கும் ஆதாரங்கள்

தி.க. பொதுச் செயலாளர்

வீரமணி தலைமையிலிருந்து விலகியது ஏன்?

இலக்குவனார் இலக்கியப் பேரவை
நாள் 26/6/2008
அம்பத்தூர், சென்னை-53



ஒருங்கிணைப்பாளர்
இலக்குவனார் இலக்கியப்பேரவை
அம்பத்தூர், சென்னை-600053.

கொள்கை துரோகத்தை

அம்பலமாக்கும் ஆதாரங்கள்....

முதல் பதிப்பு : 30 சூலை 1996

வெளியீடு : பெரியார் திராவிடர் கழகம்

விலை : ரூ.10/-

தொடர்புக்கு : மு. பாலகுரு
65, வி.எம். தெரு,
இராயப்பேட்டை,
சென்னை 600 014.

இது ஒரு வரலாற்றுக் கடமை

கி.வீரமணி தலைமையில் உள்ள திராவிடர்கழகம், பெரியார் லட்சியத்திலிருந்து வெகுதூரம் விலகிப்போய்விட்டது. பெரியார் லட்சியத்தைப் பரப்புவதற்கு வேறு எந்த இயக்கமும் இல்லையே என்ற ஒரே காரணத்தால்தான், தலைமையின் பல்வேறு ''சறுக்கல்''களையும் சகித்துக்கொண்டு, இந்த இயக்கத்தில் நாங்கள் பல ஆண்டுகளாக உழைத்துவந்தோம். கடந்த 5 ஆண்டுகளில் பார்ப்பன எதிர்ப்புக்கொள்கை படிப் படியாக மழுங்கடிக்கப்பட்டே வந்து, தேர்தலுக்கு முன்பு அது பகிங்கரமாக்கப்பட்டு விட்டது. பார்ப்பன ஜெயலலிதா தலைமையிலான ஆட்சி மீண்டும் தமிழகத்தில் உருவாவதற்கு ஓட்டளிக்கலாம் என்று திராவிடர் கழக மத்தியக் கமிட்டி தீர்மானமே நிறைவேற்றி கொள்கை துரோகத்தை அதிகாரப் பூர்வமாக பிரகடனப்படுத்தி விட்டபிறகு இனியும் பொறுப் பதில்லை என நாங்கள் பொங்கி எழுந்தோம். எவ்வளவோ லட்சிய எதிர்பார்ப்புகளுடன் இந்தக் கழகத்துக்கு வந்த எங்களுக்கு ஏமாற்றமே எஞ்சியது. பெரியார் கொள்கைக்கு எதிரான பார்ப்பனியப் போக்குகள் - இயக்கத் தலைமையில் படிப்படியாக மேலோங்கி வளர்ந்தது. பெரியார் நூல்களை வெளியிடுவதும் நின்றுபோய், பெரியார் நடத்திய இதழ்கள் பாதுகாக்கப்படாமல் அழியும்நிலை உருவாகிவிட்டது. லட்சியத்துக்கான இயக்கம், தனிமனிதருக்கான கட்சியாக மாறும் போக்குகள் அதிகரித்துக்கொண்டே போய் கொள்கைகளும் அணுகுமுறைகளும், தடுமாற்றத்துக்கு உள்ளாகிக்கொண்டே வந்தன. கடைசியில் லட்சியத்துக்கு எதிரான போக்குகளே தலைதூக்கிவிட்டன.

பெரியார் லட்சியத்தைக் காப்பாற்ற கட்சிக்குள்ளேயே ஒரு கொள்கைப் போராட்டத்தை நடத்தினோம். அதனால் வெளியேற்றப்பட்டோம். கட்சியின் பொறுப்பாளர்களுக்கு,

தமிழகம் தழுவிய அளவில் கொள்கையின் அடிப்படையில் நாங்கள் அனுப்பிய சுற்றறிக்கைகளை அதன் பின்னணியோடு இந்தத் தொகுப்பில் இணைத்துள்ளோம். பெரியார் கொள்கைக்கு பகிரங்க துரோகம் செய்யத் தயாராகிவிட்ட திராவிடர்கழகப் பொதுச்செயலாளர் கி.வீரமணி கடந்த காலங்களில் வெறும் அறிவிப்புகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இயக்கத்தை நடத்திவந்ததையும் ஆதாரங்களோடு எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

பெரியார் லட்சியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றால் கொள்கை துரோகத்தையும் அம்பலமாக்கவேண்டியது அவசியமாகிறது. வீரமணி என்ற தனிமனிதரை எதிர்க்க வேண்டும் என்பது எங்கள் நோக்கமல்ல. இதிலே விவாதிக்கப் பட்டிருப்பது தனிமனிதப் பிரச்சனைகளும் அல்ல. ஆனால் பெரியார் உருவாக்கிய இயக்கத்தின் பொதுச்செயலாளராக இருப்பவர் பெரியார் கொள்கைகளை கூர்மழுங்கடித்து அந்த இயக்கச் செயல்பாடுகளையும் படிப்படியாக முடக்கிவருவது வரலாற்றுத்துரோகம் என்பதால் அவைகளை அம்பலப்படுத்த வேண்டியதும் பெரியாரியலுக்கு ஆற்றவேண்டிய கடமையாகிறது என்று நாங்கள் உணர்கிறோம். அதுவே இந்த வெளியீட்டைக் கொண்டு வருவதற்கு அடிப்படையான காரணம் ஆகும்.

பெரியாரியல்வாதிகள் ஒவ்வொருவரும் இந்நூலை வாங்கி மக்களிடையே பரப்ப வேண்டும் என்பதே எங்களின் பணிவான வேண்டுகோள்.

"பெரியார் பணிமுடிப்போம்"

– பெரியார் திராவிடர் கழகம்

30–7–1996

தேர்தலில் திராவிடர்கழகம் யாரை ஆதரிப்பது என்பது பற்றி முடிவு செய்ய, திருச்சியில் திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழு 13-4-96 அன்று கூட்டப்பட்டது. அதற்கு முன்னதாக அமெரிக்காவில் இருந்த திராவிடர் கழகப் பொதுச்செயலாளருக்கு - திராவிடர் கழகப் பொறுப் பாளர்கள் பலரும் தங்களது கருத்துகளை தொலைவரி (FAX) மூலம் அனுப்பி வைத்தார்கள். அதனடிப்படையில் தென்சென்னை திராவிடர் கழக இளைஞரணி பொறுப்பாளர்கள் - கட்டுப்பாடு மிக்க தொண்டர்கள் என்ற உணர்வோடும், கழகத் தலைமை தவறான முடிவை எடுத்துவிடக் கூடாது என்ற கவலையோடும், பொறுப்போடும் 6-4-96 அன்று அமெரிக் காவில் இருந்த திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி அவர்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கை.

கழகப் பொதுச்செயலாளரின் பார்வைக்கு

வர இருக்கும் தேர்தலில் நமது கழகத்தின் ஆதரவு எப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்ற அடிப்படையில் தென் சென்னை திராவிடர் கழக இளைஞரணி தோழர்களின் உணர்வுகளை பணிவுடன் தெரிவிக்க விரும்புகிறோம். கழகம் எடுக்கும் எந்த முடிவையும் ஏற்றுப் பின்பற்றத் தயாராக உள்ள கட்டுப்பாடு கொண்ட இயக்கத் தொண்டர்கள் நாங்கள் என்ற உறுதியோடு இந்த உணர்வுகளை முன் வைக்கிறோம்.

1. எந்த ஒரு ஆட்சியும் இட ஒதுக்கீடு பிரச்சினையில் எப்படி செயல்படுகிறது என்பதை முதன்மையாக வைத்து கடந்த காலங்களில் நமது இயக்கம் ஒரு ஆட்சிக்கு ஆதரவு எதிர்ப்பு என்ற தெளிவான அணுகுமுறையை மேற்கொண்டு செயல்பட்டு வந்திருக்கிறது. அந்த வகையில் நாம் விரும்பாமலேயே தமிழ்நாட்டில் ஜெயலலிதா என்ற பார்ப்பன அம்மையாரின் ஆட்சி வந்து விட்ட நிலையில் இந்த ஆட்சியை அய்ந்தாண்டு காலத்துக்கு எதிரிகளான பார்ப்பனர்கள் பயன்படுத்திக் கொண்டு விடக்கூடாது என்ற கண்ணோட்டத்தில் நாம் செயல்பட்டு வந்ததோம். அதன் காரணமாக 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு ஆபத்து வந்தபோது நமது பொதுச் செயலாளர் தந்த ஆலோசனைப்படி (31)சி சட்டத்தின்கீழ் 69 சதவித இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தபோது அதை நாம் உறுதியாக ஆதரித்து நின்றதோடு அதற்கு எதிர்ப்புகள் கிளப்பியவர்களுக்கு நாமே எதைப்பற்றியும் கவலைப்படாமல் பதிலடி தந்து அரசின் நடவடிக்கைகளுக்கு உண்மையான ஈடுபாட்டோடு உறுதியான ஆதரவைத் தந்தோம். இதன் காரணமாக நமது பொதுச் செயலாளர் மீதும் இயக்கத்தினர் மீதும் சேறுவாரி இரைக்கும் அவதூறுப் பிரச்சாரங்கள் தீவிரமாக முடுக்கி விடப்பட்ட நிலையிலும் லட்சியத்துக்காக மான அவமானங்களைப் பற்றிக் கவலைப்படாமல், பெரியார் இயக்கத்துக்குரிய கடமை உணர்வோடு உறுதியாக செயல்

பட்டோம்; ஆனால் நாம் உண்மையோடு மான அவமானம் பாராமல் இந்தப் பிரச்சினையில் உறுதியாக நின்றது போல் தமிழக முதலமைச்சர் செயல்பட்டாரா என்றால், இல்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. உச்ச நீதிமன்றம் கூறும் நீதிமன்ற அவமதிப்பு என்ற பூச்சாண்டிக்கு இந்த ஆட்சி பயப்படக்கூடாது என்றும் இந்த வழக்கில் திறமையான வழக்கறிஞர்களைக் கொண்டு உறுதியுடன் வாதாட வேண்டும் என்றும் இடைக்காலத் தடையை அகற்றுவதற்கு வழக்குத் தொடர வேண்டும் என்றும் இந்த அரசுக்கு நமது பொதுச் செலயாளர் எடுத்துச் சொன்ன யோசனைகளை இந்த அரசு காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. அதன் காரணமாக உச்சநீதிமன்றத்தின் தடை ஆணையை எரித்து அதன் சாம்பலை நாமே உச்சநீதிமன்ற நீதிபதிகளோடு தமிழக முதலமைச்சருக்கும் சேர்த்து அனுப்பி வைக்கும் நிலைமை உருவானது. இதன் காரணமாக இப்போது பொறியியல் கல்லூரி நீங்கலாக ஏனைய தொழில் கல்லூரிகளில் கொள்கை ரீதியாக 50 சதவீத இடஒதுக்கீடே அமுலில் இருக்கும் நிலை ஏற்பட்டு விட்டது; (பொறியில் கல்லூரிகள் ஏராளமாகி அதிலே சேருவதற்கு ஆட்களே இல்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டதால் பார்ப்பனர்கள் பொறியியல் கல்லூரியில் 69 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்து வழக்கு தொடராமல் விட்டு விட்டனர். இல்லையேல் இதற்கும் வழக்கு தொடர்ந்து 50 சதவீதமாக்கியிருப்பார்கள்).

உ.பி.யில் முலாயம் சிங் முதலமைச்சர் ஆக இருந்தபோது மாநில தொழில் கொள்கை ஒன்றை உருவாக்கி அதில் தனியார் துறையிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு செய்வதை உறுதி செய்தது போல் தமிழ் நாடு அரசும் செய்யலாம் என்று நாம் பலமுறை வற்புறுத்தியதையும் இந்த அரசு காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. கடைசியாக மருத்துவ மேல்பட்டப் படிப்பு வகுப்பில் இட ஒதுக்கீடே தேவை இல்லை என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது அதன் அடிப்படையில் இப்போது அரசின் முடிவை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கே வந்திருக்கிறது.

பச்சையப்பன் கல்லூரி முதல்வராக - ஒரு பார்ப்பனர் முறைகேடாக வந்து உட்கார்ந்தபோது அதை நாம் சுட்டிக்காட்டியவுடன் உடனே அந்த பார்ப்பனர் அகற்றப்பட்டு வேறு ஒரு பிற்படுத்தப்பட்டவரை அப்பதவியில் இந்த அரசு அமர்த்தியபோது நாம் அதைப் பாராட்டி மகிழ்ந்தோம். ஆனால், இதே ஆட்சி, மீண்டும் அந்தப் பதவியில் ஒரு பார்ப்பனரைக் கொண்டு வந்து அமர்த்திய போது நாம் விளக்கம் சொல்ல முடியாத சங்கடத்துக்கு உள்ளாகி விட்டோம். 69 சதவீத இட ஒதுக்கீட்டை சட்டத்தில் மட்டும் வைத்துக் கொண்டு செயல் முறையில் 50 சதவீத இட ஒதுக்கீட்டையே - நீதிமன்றத் தீர்ப்பைக் காரணம் காட்டி அமுல்படுத்திக் கொண்டிருந்தால் பார்ப்பனர்கள்- சமூக நீதி

ஆதரவாளர்கள் ஆகிய இரு தரப்பினரையும் திருப்தி செய்து விடலாம் என்ற நோக்கத்தோடு இந்த அரசு செயல்பட்டு வந்திருக்கிறது. எனவே சமூக நீதி பிரச்சினையில் நாம் மான அவமானம் பாராது இந்த அரசிடம் உண்மையாக இருந்ததுபோல் அவர்கள் உண்மையாக நடந்து கொள்ளவில்லை என்றே நாங்கள் கருதுகிறோம்.

2. இந்த ஆட்சியில், கோயில் பராமரிப்புகளும் - கும்பாபிஷேகங்களும் வேறு எந்த ஆட்சி காலத்திலும் இல்லாத அளவுக்கு மிகவும் முக்கியத்துவம் பெற்று அதற்கு பல கோடி ரூபாய் பணம் தாராளமாக செலவிடப்பட்டிருக்கிறது. பக்தவச்சலம் முதலமைச்சராக இருந்த காலத்தில் நடந்ததைப் போல் பல மடங்கு அதிகமாகவே இந்த ஆட்சியில் இவைகள் நடந்துள்ளன. திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிராக வினாயக சதுர்த்தி தீபாவளிப் பண்டிகைகளுக்கு இந்த முதலமைச்சர் வாழ்த்துக்களைக் கூறி வருகிறார். (ஏற்கெனவே இருந்த திராவிட இயக்க முதலமைச்சர்கள் எவரும் வினாயகர் சதுர்த்திக்கு வாழ்த்துக் கூறியது இல்லை).

ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணியினர் நடத்தும் கூட்டங்களுக்கும் வினாயகன் ஊர்வலத்துக்கும் பதட்டமான சூழ்நிலைகள் இருப்பதையும் மீறி கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அனுமதி தந்து வந்த இந்த ஆட்சி அதே நேரத்தில் கழகப் பிரச்சார நிகழ்ச்சிகளுக்கு நெருக்கடிகளையும் தடைகளையும் ஏற்படுத்தி வந்திருக்கிறது. சங்கராச்சாரியை முதலில் எதிர்த்து பிறகு ஆர்.வெங்கட்ராமன் தலையீட்டால் - சங்கராச்சாரியோடு சமரசம் செய்து கொண்டு விட்டார் முதலமைச்சர். இப்போது இந்த ஆட்சியில் நடக்கும் கோயில் கும்பாபிஷேகப் பணிகளை காஞ்சிபுரம் சங்கராச்சாரியே மனம் திறந்து பாராட்டுகிறார்.

3. அதோடு இந்த ஆட்சியில் அமைச்சர்களே காவடி தூக்குவது, மண் சோறு சாப்பிடுவது தரையில் உருளுவது, வேப்பிலை ஆடை கட்டுவது போன்ற மூடத்தனங்களை வெட்கமில்லாமல் செய்து கொண்டிருந்தார்கள்.

4. தமிழக முதலமைச்சர் பதவி ஏற்றவுடன் ஒரு முறை பெரியார் திடலுக்கு வந்ததோடு சரி; அதற்குப் பிறகு தந்தை பெரியார் பிறந்த நாளிலோ, நினைவு நாளிலோ அவர் தந்தை பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவிப்பது இல்லை.

5. அகதிகளாக வந்த ஈழத் தமிழர்களுக்கு தமிழ் நாட்டில் கல்விக் கூடங்களில் படிக்கும் உரிமைகளை இந்த அரசு மறுத்து விட்டதோடு; கழகத் தோழர்கள்மீது பொய்யான வழக்குகளைப் போட்டு வந்திருக்கிறது. "தடா" சட்டத்தை நீக்க வேண்டும் என்று நாம் தொடர்ந்து போராடி வந்த நிலையில் பல்வேறு மாநில அரசுகள் "தடா" சட்டத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தாலும் அந்த சட்டம் தொடர்ந்து நீடிக்க

வேண்டும் என்ற ஆதரவுக் குரல் கொடுத்தது அ.தி.மு.க. அரசு. இந்தியாவி லேயே "தடா"வை அதிகார பூர்வமாக ஆதரித்த ஒரு சில மாநில அரசுகளிலே தமிழக அரசும் ஒன்றாகும். பல காங்கிரஸ் தலைவர்களே "தடா"வை எதிர்த்தபோது இந்த அரசு அதை ஆதரித்து நின்றது. ஈழத்தில் தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து அழுத்தமான கண்டனக் குரலை வெளியிடாததோடு தமிழகத்தில் அடைக்கலம் தேடி வந்த விடுதலைப்புலி கள் மீது பொய் வழக்குகளைப் போட்டு அவர்களை சிறையில் தள்ளியது இந்த அரசு. ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழின உணர்வு இல்லா விட்டாலும்கூட மனிதாபிமான உணர்வுகூட இல்லாமலேயே இந்த அரசு செயல்பட்டு வந்திருக்கிறது.

எல்லாவற்றையும்விட தமிழக முதல்வர் பிறப்பால் ஒரு பார்ப்பனர். அவர் முதலமைச்சராக வந்து விட்ட காரணத்தால் நாம் பயன்படுத்திக் கொள்ள முயன்றோம். அவரே எதிர்காலத்திலும் முதலமைச்சராக வர வேண்டும் என்று நாம் முடிவெடுத்து விட்டால் எதிர்கால வரலாற்றில் தவறான வழிகாட்டுதலுக்கு வித்தூன்றியதாகி விடும் என்று அஞ்சுவ தோடு நமது உயிர் மூச்சான பார்ப்பன எதிர்ப்புக் கொள்கையை நீர்த்துப் போகச் செய்துவிடும் என்றே கருதுகிறோம்.

எனவே வரும் தேர்தலில் அ்.இ.அ.தி.மு.கவையோ அதன் தோழமைக் கட்சிகளையோ நாம் ஆதரிக்கத் தேவை இல்லை என்பதே எங்களின் உணர்வாகவும் கருத்தாகவும் இருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலே கூறப்பட்டுள்ளவைகள் மட்டுமல்லாத வேறு பல தீங்குகளும் இந்த ஆட்சியில் நடந்துள்ளன. (மக்கள் பணத்தைக் கொள்ளை அடித்தல், பார்ப்பன காங்கிரசுடன் கூட்டு சேருதல் இன்னும் பல... பல...)

நாம் ஒருவரை ஆதரிப்பதும் எதிர்ப்பதும் நம் இனத்துக்கும் கொள்கைக்கும் எந்த அளவுக்கு அவர் சாதகமாகவும் பாதகமாகவும் செயல்படுவார் என்பதைப் பொறுத்துத்தான்.

அந்த அடிப்படையில் பார்க்கும்போது சென்ற தேர்தலின்போது பார்ப்பன ஜெயலலிதாவுக்கு ஓட்டு போடாதீர் என்று அறிவித்ததை மீண்டும் அப்படியே அறிவிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களே மேலோங்கி நிற்கின்றன என்றே நாங்கள் உறுதியாக கருதுகிறோம்.

மற்றபடி கழகத்தலைமை எடுக்கும் எந்த முடிவையும் கட்டுப்பாடு கருதி ஏற்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

13-4-96 அன்று திருச்சியில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக்குழுவில் கருத்து தெரிவித்துப் பேசிய 95 தோழர்களில் 45 பேர் அ.இ.அ.தி.மு.க-வை ஆதரிக்கக்கூடாது என்றும் 36 பேர் நடுநிலை வகித்தும் பேசினார்கள். 14 பேர் மட்டுமே அ.இ.அ.தி.மு.க-வை ஆதரிக்க வேண்டும் என்று பேசியவர்கள். அ.இ.அ.தி.மு.க.வையே ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று தி.க. பொதுச்செயலாளர் கி.வீரமணி, துணைப்பொதுச் செயலாளர் திரு. சாமிதுரை மூலம் மேற் கொண்ட முயற்சிகள் வெற்றி பெறாததால் தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க ஆகிய 3 கட்சிகளில் எந்தக் கட்சிக்கு வேண்டுமானாலும் ஓட்டுப் போடலாம் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தலில், இந்த மூன்று கட்சிகளும் தங்களுக்குள் கூட்டணி வைத்துக் கொள்ளலாம் என்று ஏற்கனவே திரு. கி.வீரமணி தெரிவித்த யோசனையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்பட்டது. திரு. கி.வீரமணியே இந்த யோசனையை கூறியது நாடாளு மன்றத் தேர்தலுக்குத் தானே தவிர சட்டசபை தேர்தலுக்கு அல்ல; ஆனாலும் ஆதரிக்கிற கட்சிகளில் அ.இ.அ.தி.மு.க கட்டாயம் இடம் பெற்றாக வேண்டும் என்ற நோக்கத்தோடு, பார்ப்பனத் தலைமையில் இயங்கும் ஒரு கட்சி மீண்டும் ஆட்சிக்கு வர பச்சைக்கொடி காட்டும் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து 18-4-96 அன்று தென் சென்னை திராவிடர் கழக இளைஞரணி சார்பில் அதன் தலைவர் மு.பாலகுரு 18-4-96 அன்று அமெரிக்காவில் இருந்த திரு. கி.வீரமணி அவர்களுக்கு தொலைவரி (FAX) மூலம் அனுப்பிய அறிக்கை இது.

சென்னை
18-4-1996

மதிப்பிற்குரிய கழகப் பொதுச் செயலாளர் அவர்களுக்கு,

வணக்கம்,

13-4-1996 மத்திய நிர்வாகக் குழுவிலும், அதைத் தொடர்ந்து 16ம் தேதியிட்ட விடுதலையில் தங்கள் அறிக்கையின் மூலமும் எடுத்த முடிவு என்பது - அ.தி.மு.க என்னும் திராவிட [illegible] முகமுடி அணிந்துள்ள பார்ப்பனத் தலைமையை ஆதரிக்கும் போக்கு எங்களுக்கு [illegible] மிகுந்த சங்கடத்தையும், பெருத்த வருத்தத்தையும் அளிக்கிறது. இட ஒதுக்கீ[illegible] மூடநம்பிக்கை ஒழிப்பு, தமிழின உணர்வு, ஈழத் தமிழர் பிரச்சினை, காவிரி நீர்ப்பிரச்சினை போன்ற பிரச்சினைகளிலும், அவை அனைத்திற்கு மேலாக தமிழ்நாட்டை பல துறைகளிலும், வஞ்சித்து வரும் மத்திய பார்ப்பன காங்கிரசுடன் கூட்டு வைத்திருந்தும், வர்ணாசிரமத்தை பரப்பும் திருப்பணியை மேற்கொண்டுவரும் சங்கராச்சாரியோடு சமரசம் ஏற்படுத்திக் கொண்டு இருக்கும் இந்தச் சூழ்நிலையில் நாம் பொத்தாம்

பொதுவில் திராவிட இயக்கக் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும் என்று தாங்களும் மத்திய நிர்வாகக் குழுவும் எடுத்திருக்கும் முடிவு எதிர் காலத்தில் பெரியாரியலை தோற்கடிக்கும் முடிவு என நாங்கள் எண்ணு கிறோம்.

புத்தரது அறிவியக்கத்தைப் பார்ப்பனர்கள் உள்ளே புகுந்து அழித்தது போல் திராவிடர் கழகத்தையும் பார்ப்பனர்கள் அழித்துவிட வேண்டும் என்ற எண்ணம் செயல்படும் காலம் வந்துவிட்டதென்றே கருதுகின்றோம். மத்திய நிர்வாகக் குழுவில் நடந்த கேலிக்கூத்துகளால் திராவிடர் கழகத்தில் பார்ப்பனீயம் தன் அழித்தல் வேலையை ஆரம்பித்து விட்டது என்றே நாங்கள் கருதுகின்றோம். திராவிட இயக்கதில் பார்ப்பனர்களை சேர்த்ததே தவறு என்று இதுவரை நாம் கூறிவந்தோம். தி.மு.க. அப்படி பார்ப்பனர்களை சேர அனுமதித்ததால் தான், இப்போது ஜெயலலிதா முதல்வராக நேர்ந்திருக்கிறது என்றும், இந்தக் குற்றத்துக்கு நாமா காரணம் என்று தி.மு.க.வைப் பார்த்து கேட்டு வந்தோம்.

இப்போது பார்ப்பனர்களை திராவிட இயக்கத்துக்குள் அனுமதித்தது சரிதான் என்பதற்கு ஜெயலலிதாவை திராவிட கட்சியின் தலைவராக அங்கீகரித்து ஒப்புதல் வழங்கி விட்டோம்.

அதே போல் பார்ப்பனர்களில் நல்ல பார்ப்பனர், கெட்ட பார்ப்பனர் என்று பிரித்து பேசுவது தவறு என்று கூறி வந்தோம். இப்போது நாமே திராவிட இயக்க உணர்வு உள்ள முற்போக்கு பார்ப்பனராக ஜெயலலிதாவை அங்கீகரித்து விட்டோம். ஆட்சிக்கு வந்த பார்ப்பனர்களைப் பயன்படுத்திக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை என்றே நாங்கள் கருதி இருந்தோம். ஆனால் பார்ப்பனத் தலைமையே மீண்டும் ஆட்சிக்கு வர எந்த எதிர்ப்பும் இல்லை என்று நமது கமிட்டியின் தீர்மானம் பச்சைக் கொடி காட்டியது கண்டு அதிர்ந்து போய் நிற்கிறோம்.

நாட்டிலேயே பார்ப்பனர் எதிர்ப்பில் சமரசம் செய்து கொள்ளாத ஒரே இயக்கமாக இருந்த நமது இயக்கம் இப்போது அதிலிருந்து பின்வாங்கி வரலாற்றுத் துரோகத்தை இழைத்து விட்டது. தாங்கள் அடிக்கடிச் சுட்டிக் காட்டும் "மோகினி அவதாரங்கள்" கதைதான் மிகச் சரியாக நினைவுக்கு வருகிறது.

கழகப் பொருளாளர் குப்புசாமியும், துணைப் பொதுச்செயலாளர் சாமிதுரையும் அறிவாசான் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் எந்தக் காலத்திலும் சொல்லிச் செல்லாத கருத்துக்களை தோழர்கள் மத்தியில் விஷமத்தனமாகப் பரப்பி பார்ப்பனர்களை, பார்ப்பனத் தலைமையை அய்யா ஆதரித்தார் என்று படுகேவலமாக அய்யாவின் எழுபதாண்டு காலத் தொண்டை கொச்சைப் படுத்தி பார்ப்பனர்களின் மித்திர பேதத்திற்குத் துணை போய் அசிங்கப்பட்டு, இயக்கத்தையும் அசிங்கப்

படுத்திவிட்டார்கள். பார்ப்பனர் சங்கம், சங்கர மடம், இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். வகையறாக்கள் பாரதீய ஜனதாவுக்கு அடுத்து அ.தி.மு.க.வை ஆதரிக்கிறார்கள். ஏனென்றால் அ.தி.மு.கவிற்கு பார்ப்பன இனத்தைச் சேர்ந்த ஜெயலலிதா தலைமை ஏற்றிருக்கிறார் என்பதற்காக - நாமும் இவர்களுடன் சேர்ந்து ஜெயலலிதாவை ஆதரிப்பது என்பது பார்ப்பன எதிர்ப்பில் திராவிடர் கழகம் நீர்த்துப் போய்விட்டது என்று பார்ப்பனர் கள் பூணூலைப் பிடித்துக் கொண்டு குதியாட்டம் போடும் அளவிற்கு அமைந்து விட்டது. தலைவர் பெரியார் கொள்கையை கொச்சைப் படுத்தும் உரிமை யாருக்கும் இல்லை. மத்திய நிர்வாகக்குழுவில் கருத்துக் கூறிய 95க்கு மேற்பட்டவர்கள் கூறிய கருத்தில் 14 பேர்களைத் தவிர 36 பேர் நடுநிலைமை வகித்தும் 45 பேர் அதிமுகவை எதிர்த்தும் கூறினார்கள். கருத்துக்கள் பெரும்பான்மையாக அதிமுக பார்ப்பனத் தலைமைய எதிர்த்திருந்தும், நாம் அ.தி.மு.க.வை ஆதரிப்பது சரியா? மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர்களின் கருத்தைக் கேட்டு அதன்படி முடிவு எடுக்கப்படும் என்று கூறிவிட்டு, பெரும்பான்மை முடிவுக்கு எதிர்ப்பாக ஜெயலலிதா என்னும் பார்ப்பனப் பெண்ணை ஆதரிப்பது நிர்வாகக் குழு உறுப்பினர்களின் கருத்தை உதாசீனப்படுத்துவதாகும்.

1991ம் வருடத்தில் செப்படம்பரில் நடந்த பெரியார் பிறந்த தின விழாவில் ரூ.5 லட்சத்தை ஜெயலலிதா கொடுக்க நாம் பெற்றுக் கொண்ட போது நம்மை கொச்சைப்படுத்தியவர்களுக்கு ஆணித்தரமான பதிலை அதே வருடத்தில் நெய்வேலியில் நடந்த மத்திய நிர்வாகக் குழுவில் மிகக் கடுமையாக கண்டித்தும், பார்ப்பனத் தலைமையை ஒருக்காலும் ஏற்பதில்லை என்றும் நாம் தீர்மானம் போட்டோம். அந்தத் தீர்மானத்தை நாமே தற்போது மீறிவிட்டோம். 1991ம் வருடத் தேர்தலில் **"சூத்திரர் - பிராமணர்"** பிரச்சினை என்பது இன்னும் தொடர்கிறது. ஜெயலலிதா ஒன்றும் தற்போது சூத்திரச்சியாகிவிடவில்லை. சங்கர மடத்து நெருக்கமும், பார்ப்பனர்களின் சேர்க்கையும் ஜெயலலிதாவை மேலும் புடம் போட்ட பார்ப்பனராகவே தான் காட்டுகிறது.

ஈழத் தமிழர் படுகொலை கண்டன மாநாட்டில் தாங்கள் பேசும் போது **"எதிர்வரும் தேர்தலில் ஈழத்தமிழர் பிரச்சினையை மையப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கே ஆதரவு"** என்பது தற்போது அ.தி.மு.கவை ஆதரிப்பதன் மூலம் அடிபட்டு விட்டது.

அதே போல் மத்தியில் பார்ப்பன ராவ் காங்கிரசை ஆதரிக்கும் எந்தக் கட்சிக்கும் ஆதரவு இல்லை என்று அறிவித்து விட்டு, தற்போது அதே காங்கிரசோடு **"புனித"** உறவு கொண்டுள்ள ஜெயலலிதாவை ஆதரிப்பது என்பதும் அருவருப்பையும் வேதனையையும் தருகிறது.

அறிவாசான் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் பச்சைத் தமிழரான காமராசரின் தலைமை வலுப்பட, உறுதியாய் நின்றிட,

பார்ப்பன வேட்பாளர்களை ஆதரித்தது என்பதும், பார்ப்பன ஜெயலலிதா தலைமை ஏற்றிட தமிழின வேட்பாளர்களை ஆதரிப்பது என்பதும் வேறு. இந்த அடிப்படையை மறைத்து விட்டது வேதனைக் குரிய ஒன்றாகும்.

1952 முதல் 1954 ஏப்ரல் வரை கொல்லைப்புற தமிழக முதல்வராக இருந்த பச்சைப் பார்ப்பனர் ஆச்சாரியாரை முதல்வராக வரவேண்டும் என்றோ அல்லது முதல்வராக தொடர வேண்டும் என்றோ ஒருபோதும் சொன்னதில்லை அய்யா அவர்கள். சில பிரச்சினைகளில் மட்டுமே ஆதரித்தார் (ரேஷன், பஞ்சாயத்து போர்டு போன்றவைகள்). ஆனால் இதை வசதியாக மறைத்து விட்டு ஆச்சாரியார் ஆட்சியை அய்யர் ஆதரித்தார் என்று, கழகத் தோழர்களை திசை திருப்பும் துணைப் பொதுச் செயலாளர் சாமிதுரையின் பேச்சு தற்போது எழுந்துள்ள சந்தர்ப்பவாத முடிவுக்கு சப்பைக்கட்டு கட்டுவது போல் உள்ளது. அது மட்டுமல்லாமல் இது போன்ற அய்யாவின் கருத்துக்களை கொச்சைப் படுத்தும் போக்கு ஆர்.எஸ்.எஸ். காரர்களே மேற்கொண்டிராத ஒரு அணுகுமுறையாகும். திராவிடர் கழகத்தின் நிறுவனத் தலைவரது கொள்கையை திராவிடர் கழகத் துணைப் பொதுச்செயலாளரே திரித்து தி.க.தோழர்களை குழப்புவது என்பது காலத்தின் சூழலா அல்லது அறிவு நாணயத்தின் முழுக்கேடா என்று தெரியவில்லை. இது போன்று கழகத்தை நம்பி வந்த இளைஞர்களை திசை திருப்பி அவர்களது எண்ணங்களை பாழாக்குவதும், சிந்தனையை சிதறடிப்பதும், அவர்களை உண்மையான பெரியாரியலை, அய்யாவின் கொள்கையை தெரிந்து கொள்ளாமல் தலையாட்டும் பொம்மைகளாக வைத்திருக்கச் செய்யும் திருப்பணியேயாகும்.

ஒரு பார்ப்பனரான ஜெயலலிதாவை தற்போது ஆதரித்ததன் மூலம் தங்களது காலத்தில் பெரியாரியல் என்பது பார்ப்பனரின் சூழ்ச்சியின் மூலம் தோல்வியடைந்து பார்ப்பனீயம் வெற்றியடைந்தது என்ற "**வரலாற்றுக் கறை**" படியக் காரணமாகிவிட்டது.

வணக்கம்!

பார்ப்பனர் தலைமையிலான ஒரு கட்சி மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்று திராவிடர் கழகம் எடுத்த - பெரியார் லட்சியத்துக்கு எதிரான முடிவை எப்படியாவது தடுத்து நிறுத்தி பெரியார் கொள்கையைக் காப்பாற்ற வேண்டும் என்ற கவலையோடு தொடர்ந்து தென்சென்னை திராவிடர் கழக இளைஞரணி முயற்சிகளை மேற்கொண்டது. அடுத்த ஒரு வாரத்தில் 23-4-96 அன்று சென்னையில் உள்ள பெரியார் திடலி லேயே - திராவிடர் கழக துணைப்பொதுச் செயலாளர் திரு. சாமிதுரை தலைமையிலும், தலைமை நிலையச் செயலாளர்கள் கலி.பூங்குன்றன், ஆனூர் ஜெகதீசன் முன்னிலையிலும் தென்சென்னை திராவிடர் கழக இளைஞரணி கூட்டத்தைக் கூட்டியது.

கழகத்தை விட்டு வெளியே சென்று கூட்டம் போட்டு பேசாமல், கழகப் பொறுப்பாளர்களை அழைத்து தலைமைக் கழகத்துக்குள்ளேயே கமிட்டியைக் கூட்டி - கொள்கை விளக்கம் கேட்ட இந்த நிகழ்ச்சி வரலாற்றில் இடம் பெறத்தக்கது. தோழர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு சரியான விளக்கம் தரமுடியாத நிலையில் - இறுதியில் திராவிடர் கழக இளைஞரணி கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

23-4-96 அன்று சென்னை பெரியார் திடலில் நடந்த தென்சென்னை மாவட்ட திராவிடர் கழகம் மற்றும் திராவிடர் கழக இளைஞரணி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. திருச்சியில் 13-4-96 அன்று கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழு வர இருக்கும் தேர்தலில் தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., ம.தி.மு.க. ஆகிய திராவிடக்கட்சிகளில் திராவிடர் கழகத்தோழர்கள் - விரும்புகிற கட்சிக்கு வாக்களிக்கலாம் என்று தீர்மானம் நிறைவேற்றியதையொட்டி தென்சென்னை மாவட்டக் கழகம் தி.மு.க.வுக்கு வாக்களிப்பது என்று முடிவு செய்கிறது.

2. திராவிடர் இயக்கம் என்பது அடிப்படையில் பார்ப்பன ரல்லாதார் இயக்கம் என்பதால் - பார்ப்பன அம்மையாரான செல்வி ஜெயலலிதா தலைமை ஏற்றுள்ள அ.இ.அ.தி.மு.க.வை திராவிடக் கட்சியாகக் கருதக்கூடாது, அதை பார்ப்பனர் சங்கத்தின் ஒரு கிளைச் சங்கமாகவே கருத வேண்டுமென இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

3. ஆட்சிக்கு வந்தவர்களை - சமுதாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்வது தந்தை பெரியார் காட்டிச் சென்ற அணுகுமுறை. ஆனால் மீண்டும் யார் ஆட்சியில் அமரவேண்டும் என்று தீர்மானிப்பது

கொள்கைப் பிரச்சனை; **அணுகுமுறை என்பது வேறு, கொள்கை என்பது வேறு**. எனவே கொள்கை அடிப்படையில் மீண்டும் பார்ப்பனத் தலைமை கொண்ட ஒரு கட்சி ஆட்சிக்கு வரக்கூடாது என இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

4. பார்ப்பனத் தலைமையிலான அ.இ.அ.தி.மு.க.வை திராவிடக் கட்சியாக அங்கீகரித்து திருச்சியில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுவில் நிறைவேற்றிய தீர்மானத்தை கழகத்தின் பொதுச் செயலாளர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இக் கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

5. வேட்பாளர்களாக பார்ப்பனரை நிறுத்தாத கட்சி தி.மு.க.வாகவே இருக்கிறது. அ.இ.அ.தி.மு.க சார்பில் நமக்குத் தெரிந்த வரை சட்டமன்ற வேட்பாளர்களாக **3 பார்ப்பனர்களும் ஒரு மார்வாடியும், நாடாளுமன்ற வேட்பாளராக ஒரு மார்வாடியும் நிறுத்தப் பட்டுள்ளனர்**. பார்ப்பனர் தலைமையிலான ஒரு ஆட்சியை மீண்டும் வரவிடாமல் தடுக்கக்கூடிய சக்தியாக தி.மு.க.வே இருக்கிறது. மத்தியில் நரசிம்மராவ் வருவதற்கு ஆதரவு தர மாட்டோம் என்று தி.மு.க. தலைமை திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது. திராவிடர் இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை நீரோட்டத்தில் ஏனைய கட்சிகளைவிட ஓரளவு நெருங்கி இருக்கக்கூடிய கட்சியாக தி.மு.க.வே இருக்கிறது. எனவே தி.மு.க.வை ஆதரித்து வாக்களிப்பதே தந்தை பெரியார் லட்சியக் கண்ணோட்டத்தில் சரியான அணுகுமுறையாக இருக்கும் என்று இந்தக் கமிட்டி கருதுகிறது.

6. முதல்வர் ஜெயலலிதா அவர்கள் இயக்கத்துக்கு ரூ.5 லட்சம் நன்கொடை வழங்கிய பிறகு, நெய்வேலியில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுவில் பார்ப்பன எதிர்ப்புதான் திராவிடர் கழகத்தின் உயிர் மூச்சான அடிப்படைக் கொள்கை என்று தீர்மானம் நிறைவேற்றி நாட்டு மக்களுக்கு பிரகடனப்படுத்தியதையும், அதனடிப்படையில் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் பழனி, ராணிப்பேட்டையில் நடந்த இடைத்தேர்தல்களில் கூட தி.மு.க. வேட்பாளர்களையே திராவிடர் கழகம் ஆதரித்ததையும் இக்கமிட்டி சுட்டிக்காட்டுகிறது.

1989-ம் ஆண்டு தேர்தலில் யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதைவிட, யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்ற அடிப்படையில் ஜெயலலிதா பார்ப்பனர் தலைமையிலான ஆட்சி வந்துவிடக் கூடாது. கலைஞர் தலைமையிலான ஆட்சி அமைய வேண்டும் என்ற கண்ணோட்டத்திலேயே கழகம் முடிவெடுத்தது. 1991ம் ஆண்டு தேர்தலிலும் தி.மு.கவுக்கே திராவிடர் கழகம் ஆதரவு அளித்தது. அதோடு நரசிம்மராவின் காங்கிரஸ் கட்சியோடு கூட்டணி சேரும் எந்தக் கட்சியையும் திராவிடர் கழகம் ஆதரவளிக்காது என்று கழகப்

பொதுச்செயலாளர் பிரகடனப்படுத்தி இருக்கிறார். கடந்த காலங்களில் தந்தை பெரியார் லட்சியக் கண்ணோட்டத்தில் கழகத் தலைமை காட்டிய அதே வழியைப் பின்பற்றி நடப்பது என்று இக்கமிட்டி உறுதியாகத் தீர்மானிக்கிறது.

7. தந்தை பெரியாரின் லட்சியங்களை அவர் போட்டுத் தந்த பாதையில் எவ்வித சபலங்களுக்கும் ஆளாகாமல் செய்து முடிப்போம் என்ற உறுதியோடு தந்தை பெரியார் லட்சியங்கள் ஒரு காலத்திலும் நீர்த்துப் போய்விடாதுஎன்று இன எதிரியான பார்ப்பனர்களை எச்சரித்து அந்த எச்சரிக்கையை இத்தீர்மானங்களின் வாயிலாக இக் கமிட்டி வரலாற்றுப் பதிவு செய்யவிரும்புகிறது.

✪ ✪ ✪

23-4-96 அன்று சென்னையில் உள்ள பெரியார் திடலில் திராவிடர் கழக இளைஞர் அணி மேற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது. இந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் அன்று இரவே அமெரிக்காவில் இருந்த திரு. கி.வீரமணி அவர்களுடன் திரு. சாமிதுரை தொடர்பு கொண்டு பேசி, இளைஞரணி தலைவர் பாலகுருவை கட்சியிலிருந்து நீக்க முடிவு செய்தனர். அடுத்த நாளே திரு. பாலகுரு நீக்கப்பட்ட செய்தி முதல் பக்கத்தில் "விடுதலை" நாளேட்டில் வெளியிடப்பட்டது.

அதே நாளில் தென்சென்னை தி.க.இளைஞரணி கூட்டத்தில், மத்திய கமிட்டி தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டதாக உண்மைக்கு மாறான ஒரு செய்தியும் 'விடுதலை'யில் வெளியிடப்பட்டது. ஒருமனதான மத்திய கமிட்டி தீர்மானம் ஏற்கப்பட்டிருந்தால் பாலகுருவை நீக்க வேண்டிய அவசியம் ஏன் வந்தது என்ற கேள்வி எவருக்குமே எழவே செய்யும்.

தான் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து தலைமைக் கழக செயலாளர்களான கலி.பூங்குன்றன், ஆனூர் ஜெகதீசன் ஆகியோரிடம் விளக்கம் கேட்டு பாலகுரு ஒரு கடிதத்தை 26-4-96 அன்று நேரில் அளித்தார். அந்தக் கடிதம் இது.

26-4-96

பெறுநர்:

தி.க.தலைமை நிலைய செயலாளர்கள்

கழகக் கட்டுப்பாட்டை நான் மீறியதாகக் கூறி, இயக்கத்தை விட்டு, பொதுச் செயலாளர் திரும்பி வரும்வரை நீக்கி வைத்துள்ளதாக அறிவித்துள்ளீர்கள். தந்தை பெரியார் கொள்கையை ஏற்றுக்கொண்ட அவரது லட்சியத்துக்காக இந்த இயக்கத்தில் என்னை இணைத்துக் கொண்டிருக்கும் ஒரு தொண்டன் நான் தந்தை பெரியாரின் அடிப்படையான - உயிர்மூச்சு லட்சியமான பார்ப்பன எதிர்ப்பு லட்சியத்திலிருந்தே இயக்கம் விலகிச் செல்கிறதோ என்ற அய்யத்தில் நானும், கழகத் தோழர்களும், பொறுப்பாளர்களிடம் உரிய விளக்கத்தினைப் பெறவே இளைஞர் அணி கமிட்டியை கழகப் பொறுப்பாளர்களின் முன்னிலையில் கூட்டினோம்.

பார்ப்பன ஜெயலலிதா தலைமையில் செயல்படும் அ.இ.அ.தி.மு.க.வை திராவிட கட்சியாக அங்கீகரித்து அந்தக் கட்சிக்கும் ஆதரவு தரலாம் என்ற மத்திய கமிட்டியின் தீர்மானம் இதுவரை நாம் எடுத்து வந்த முடிவுக்கு முரண்பாடானதாகவும் - தந்தை பெரியார் கொள்கைக்கு எதிரானதாகவும் இருக்கிறதே என்பதற்கு - நாங்கள் விளக்கம் கேட்கவே விரும்பினோம்.

ஆனால் திராவிடர் கழகத் துணைப்பொதுச் செயல்ாளர் தந்தை பெரியாரே பார்ப்பனரை ஆதரித்து வந்தார் என்றுகூறி ஆதாரங்களை அடுக்கிக் காட்டியதைத்தான் எங்களால் ஏற்கமுடியவில்லை. பெரியார் கொள்கைக்கு எதிரிகள் கூறும் குற்றச்சாட்டுகளை, தந்தை பெரியார் இயக்கத்தின் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஒருவர் தந்தை பெரியார் மீதே அதுவும் திராவிடர் கழகத் தோழர்களிடத்திலேயே சுமத்திப் பேசுவது இயக்கத்தின் அடிப்படைக்கே எதிரானது என்று நாங்கள் கருதுகிறோம். பார்ப்பன எதிர்ப்பு என்ற லட்சியத்தில் பெரியாரே ஊசலாட்டமாக இருந்தார் என்பதற்கு சான்றுகள் ஏராளம் இருக்கிறது என்று நமது பொறுப்பாளர்களே பட்டியல் போட்டுக் காட்டினால் அந்தக் கொள்கைக்காகவே இந்த இயக்கத்தில் இருக்கும் எங்களைப் போன்ற இளைஞர்கள் அதை கேள்விக்கு உட்படுத்தாமல் எப்படி இருக்க முடியும்?

"பார்ப்பன எதிர்ப்பு என்பதெல்லாம் மாயை, பெரியாரே பார்ப்பன எதிர்ப்பிலிருந்து மாறி பார்ப்பனர்களை ஆதரித்துள்ளதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு" என்று நம்மைப்பார்த்து மற்ற கட்சியினர் திருப்பிக் கேட்டால், நமது நிலை என்னாகும் என்பது தான் நாங்கள் கேட்க விரும்பும் கேள்வி என்வே, தந்தை பெரியார் இயக்கதில் இருந்து கொண்டு பார்ப்பன எதிர்ப்பிலிருந்து பெரியார் தடம் மாறியதற்கு ஆதாரங்கள்

உண்டு என்று கூறுகிறவர்கள் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டிய வர்களா? அப்படிக் கூறுவதை பெரியார் தொண்டர்களால் ஏற்க முடியாது என்று கூறுபவர்கள் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டி யவர்களா என்பது தான் எனது கேள்வி.

23-4-96 அன்று விளக்கம் கேட்பதற்காக நடந்த கமிட்டி கூட்டத்தில் கழகத்தின் பெரும்பாலான நிகழ்ச்சிகளுக்கு வராத வழக்கறிஞர் வீரசேகரன் வந்து கலந்து கொண்டு கலவரத்தையும், பதட்டத்தையும் உருவாக்கும் நோக்கதில் எனது கரங்களில் இருந்த தாள்களைப் பலவந்தமாகப் பிடுங்க முயற்சித்தது கட்டுப்பாட்டை மீறிய செயலா? அதை நாங்கள் அனுமதிக்க மறுத்தது கட்டுப்பாட்டை மீறிய செயலா?

1991ம் ஆண்டு நம்மால் பார்ப்பனராக அடையாளம் காட்டப்பட்ட ஜெயலலிதா, 1996ம் ஆண்டு எப்படி "சூத்திரர்"ஆனார் என்று நாங்கள் கேட்டது கட்டுப்பாட்டை மீறிய செயலா?

காங்கிரஸ் கட்சியுடன் தமிழ்நாட்டில் கூட்டு சேரும் எந்தக் கட்சிக் கும் ஓட்டுப் போடக்கூடாது என்று பிப்ரவரி மாதம் கழகப் பொதுச் செயலாளர் அறிவித்த பிறகு, அடுத்த மாதத்தில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழு காங்கிரசுடன் கூட்டு சேர்ந்துள்ள அ.இ.அ.தி.மு.க.வுக்கும் வாக்களிக்கலாம் என்று தீர்மானம் போட்டது சரியா என்று கேட்பது கட்டுப்பாடு மீறிய செயலா?

தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., ம.தி.மு.க. ஆகிய் கட்சிகளில் கழகத் தோழர்கள் எந்தக் கட்சிக்கு வேண்டுமானாலும் ஓட்டு போடலாம் என்று தீர்மானித்து விட்டு, அடுத்த இரண்டு நாளில் தி.மு.க.தலைவரை மட்டும் கேலி, கிண்டல் செய்து கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் கட்டுரை எழுதியது, மத்திய கமிட்டித் தீர்மானத்துக்கும் எதிரானது அல்லவா என்று நாங்கள் விளக்கம் கேட்டது கட்டுப்பாட்டை மீறிய செயலா?

1989ம் ஆண்டு தேர்தலில் பார்ப்பன ஜெயலலிதா முதலமைச்ச ராவதைத் தடுக்கும் நோக்கத்தோடு தி.மு.க. - ஜானகி அணியில் வெற்றி பெறும் வாய்ப்புள்ள சட்டமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்து கழகப் பொதுச்செயலாளர் அறிவித்ததை திசை திருப்பி, பார்ப்பனர் ஜானகியை பொதுச் செயலாளர் ஆதரித்தார் என்று துணைப் பொதுச்செயலாளர் போன்ற நிலையில் இருப்பவர்களே கூறுவது சரிதானா என்று விளக்கம் கேட்டது கட்டுப்பாட்டை மீறிய செயலா?

தந்தை பெரியார் இயக்கத்தில் உள்ளவர்களே தந்தை பெரியார் உறுதியான கொள்கைபிடிப்புடன் இருந்தது இல்லை என்று ஆதாரங் களை அடுக்கிக் காட்டிப் பேசுவதை பெரியார் தொண்டனாக இந்த இயக்கத்தில் ஒப்படைத்துக் கொண்ட என்னால் ஒருபோதும் ஏற்றுக்

கொள்ள முடியாது என்பது கழகத்துக்கும், கழகக் கட்டுப்பாட்டுக்கும் எதிரானது என்று கழகம் தீர்மானிக்கிறதா- இதற்கான விளக்கத்தை அருள்கூர்ந்து எனக்குத் தருவீர்களேயானால் பிறகு கழகப் பொதுச் செயலாளரிடம் எனது நிலையை விளக்குவதற்கு உதவியாக இருக்கும்.

விரைவாக தங்களின் பதிலை எதிர் நோக்கிக் காத்திருக்கிறேன்.

✪ ✪ ✪

தென்சென்னை திராவிடர் கழகத் தலைவர் தோழர் பாலகுரு மட்டுமே நீக்கப்பட்டாரே தவிர, தென் சென்னை தி.க. இளைஞரணி அமைப்பு கலைக்கப்படாமலே இருந்தது. அடுத்து இரண்டு நாளில் 28-4-96 அன்று திராவிடர் கழகத் தலைமை நிலையமான பெரியார் திடலில் தென் சென்னை திராவிடர் கழக இளைஞரணி செயலாளர் து. கலைச் செல்வன், இளைஞரணி கூட்டத்தைக் கூட்டினார். தோழர் பாலகுரு நீக்கப்பட்ட அடுத்தநாளில் மற்றொரு அதிர்ச்சியான தகவல் தலைமைக் கழக செயலாளர்களுக்குக் கிடைத்தது. மத்திய கமிட்டி தீர்மானத்துக்குப் பிறகு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி அமெரிக்காவிலிருந்து நேரடியாக தஞ்சை மாவட்டம் ஒரத்தநாட்டில் உள்ள தி.க. இளைஞரணி மாநிலச் செயலாளரிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு ஒரு உத்தரவைப் போட்டிருந்தார். மத்திய கமிட்டி தீர்மானம் 3 கட்சிகளுக்கு ஓட்டுப் போடலாம் என்று இருந்தாலும் அ.இ.அ.தி.மு.க-வுக்கு வாக்களிக்க வேண்டும் என்பதே தனது முடிவு என்பதை திரு. கி.வீரமணி, ஒரத்தநாடு குணசேகரனிடம் தெளிவுபடுத்தி, அந்த செய்தியைத் தமிழகம் முழுவதும் உள்ள திராவிடர் கழகத் தோழர்களிடம் சுற்றுப் பயணம்செய்து நேரில் தெரிவிக்க ஆணை யிட்டிருந்தார் என்பதே அந்த அதிர்ச்சியான செய்தி. தலைமை நிலையச் செயலாளர்களான கலி.பூங்குன்றன், ஆனூர் ஜெகதீசன் போன்றவர் களுக்கே தெரிவிக்காமல் இது நடந்தது. நிலைமை மிக மோசமாகிவிடவே 28-4-96 அன்று பெரியார்திடலில் கூடிய தென் சென்னை திராவிடர் கழக இளைஞரணி தனது கொள்கை ரீதியான எதிர்ப்பை மீண்டும் பதிவு செய்தது. இத்தீர்மானத்தை அமெரிக்காவில் உள்ள திராவிடர் கழகப் பொதுச்செயலாளருக்கும் தமிழகம் முழுவதும் உள்ள 496 கழகப் பொறுப் பாளர்களுக்கும் அதன் நகல்களை அனுப்ப வேண்டிய நிலை உள்ளானது. கொள்கைக்கும், மத்திய கமிட்டி தீர்மானத்திற்கும் எதிராகவே தலைமை செயல்படும் போக்கை கழகத் தோழர்களின் கவனத் துக்குக் கொண்டு செல்லும் நோக்கத்தோடு, வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட்ட தீர்மானங்கள் இது; இதுவும், திராவிடர் கழகப்

பொறுப்பாளர்களுக்கு மட்டுமே அனுப்பப்பட்டதே தவிர, வெளியார் எவருக்கும் அல்ல; இந்தத் தீர்மானத்தை ஆதரித்து இளைஞரணி கமிட்டியில் பங்கேற்ற 160 உறுப்பினர்களும் கையெழுத்திட்டிருந்தனர்.

சென்னை
28-4-96

தோழமைகொண்ட மானமிகு கழகத் தோழர்களுக்கு, வணக்கம்!

இத்துடன் தென்சென்னை மாவட்ட திராவிடர் கழக இளைஞரணி 28-4-96 அன்று பெரியார் திடலில் கூடி - ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானங்களை தங்களின் மேலான பார்வைக்கு இணைத்துள்ளோம்.

இது ஏதோ, தென்சென்னை இளைஞரணி தலைவராக இருந்த தோழர் பாலகுருவுக்கு எதிராக, அவர் கட்சிக் கட்டுப்பாட்டை "மீறியதற்காக" எடுக்கப்பட்ட நடவடிக்கைதானே என்று கருதிவிடாதீர்கள். அப்படி உங்களிடம் யாராவது திரித்துக் கூறுவார்களேயானால் தயவு செய்து உங்களது கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே எங்களின் வேண்டுகோள்.

இப்போது எழுந்துள்ள பிரச்னை, பெரியார் இயக்கத்தின் உயிர் மூச்சான பார்ப்பன எதிர்ப்பு பற்றிய கொள்கைப் பிரச்சனை.

நாம் இராணுவக் கட்டுப்பாட்டுடன் - நமது கழகப் பொதுச் செயலாளர் தலைமையில் இந்த இயக்கத்தில் ஒப்படைத்துக் கொண்டதற்குக் காரணமே தந்தை பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு, பகுத்தறிவு லட்சியங்களுக்காகத்தான்!

மீண்டும் பார்ப்பன முதல்வரே, தமிழ்நாட்டுக்கு முதலமைச்சராக வரலாம் என்று அங்கீகரித்து வாக்களிக்க முடிவு எடுத்ததன் மூலம் - பார்ப்பன எதிர்ப்பு கொள்கை காற்றில் பறந்து விட்டதே!

இதே நிலையில்-

பெரியாரின் கொள்கையை புதைகுழிக்கு அனுப்புவதற்கும் - கட்டுப்பாட்டுடன் அனுப்பி விட்டோம் என்று கூறிக்கொண்டு, நாம் வாய்மூடிக் கிடப்பது பெரியாருக்கு செய்யும் துரோகம் ஆகாதா? இதைத்தான் கமிட்டியில் கழகத் தோழர்கள் எழுப்பி, விளக்கம் கேட்டார்கள்.

"பெரியார் பார்ப்பனரை ஆதரித்திருக்கிறார். பார்ப்பனர்களிலே கூட விபிஷனர்கள் உண்டு. நாம் பார்ப்பனரைக் கண்ணை மூடிக் கொண்டு எதிர்க்க வேண்டியது இல்லை" என்று கழகத்தின் துணைப்பொதுச் செயலாளர் - பட்டியல் போட்டு காட்டிப் பேசுகிறாரே, பெரியார் தொண்டர்களாகிய நம்மால் - பெரியாரையே கொச்சைப்படுத்துவதை

எப்படி சகித்துக் கொள்ள முடியும்? இதை சுட்டிக் காட்டி விளக்கம் கேட்பது கட்டுப்பாட்டுக்கு எதிரானதா?

பெரியார் கொள்கைக்காக - கருப்பு மெழுகுவர்த்திகளாக ஒப்படைத்துக் கொண்டு இயக்கத்திடமிருந்து கொள்கையைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்காமல் உழைத்து வந்த எங்களின் உள்ளத்தைக் குடையும் கேள்வி!

தோழர்களே! கொள்கை அடிப்படையில் சிந்தித்து, தீர்ப்புக் கூறுங்கள்.

பெரியார் கொள்கை நமது காலத்திலேயே கூர்மழுங்கச் செய்யப்பட்டுவிட்டது என்ற வரலாற்றுப் பழிக்கு ஆளாகி விடக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு, நீங்கள் சிந்திக்க வேண்டும் என்பதே எங்களின் தாழ்மையாக வேண்டுகோள்.

நன்றி, வணக்கம்.

✪ ✪ ✪

தீர்மானங்கள்:

சிங்கள இனவெறி அரசால் நாளும் நடைபெறும் தமிழினப் படுகொலையை கண்டிக்கும் வகையில் 30-4-96 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும் "மனித சங்கிலி" போராட்டத்தில் பெருவாரியாக கலந்து கொள்வதென இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

"அரசியல் கட்சிகள் நமக்கு ஒருபோதும் எஜமானர்களாகிவிட முடியாது அவர்களுக்கு முகவர்களாக எவரும் நமது கழகத்தில் செயல்பட இடமும் இல்லை" என்றும் "இராணுவக் கட்டுப்பாட்டை விட ஒரு படி மேலானது நமது கழகக் கட்டுப்பாடு" என்பதை சுட்டிக் காட்டியும் கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையை இந்தக் கமிட்டி பாராட்டி வரவேற்கிறது.

13-4-96 அன்றைக்கு திருச்சியில் மத்திய கமிட்டி கூடி தேர்தல் சம்பந்தமாக ஒரு தெளிவான முடிவு எடுத்ததற்குப் பிறகு கழக இளைஞரணிச் செயலாளர் ஒரத்தநாடு குணசேகரன் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று முக்கிய பொறுப்பாளர்களைப் பார்த்தும் கழகப் பொதுச்செயலாளர் அனுப்பினார் என்று கூறியும், கழகப் பொதுச்செயலாளரின் தனிப்பட்ட முடிவுப்படி தேர்தலில் அ.தி.மு.கவிற்குத் தான் நம்முடைய ஆதரவு இருக்க வேண்டுமென்றும் அதையே பொதுச்செயலாளர் விரும்புவதாகவும், எனவே மத்தியக் கமிட்டியின் முடிவுப்படி நடக்க வேண்டாம் என்றும் கூறி வந்துள்ளார். கழகப் பொதுச்செயலாளர், அது போன்று நாணயக்குறைவாக மத்தியக் கமிட்டியின் முடிவுக்கெதிராக பிரச்சாரம் செய்வார் என நிச்சயமாக நாம்

நம்பாத நிலையில் பொதுச்செயலாளர் மீது கெட்ட பெயர் வரவேண்டுமென்பதற்காக கழகத் கட்டுப்பாட்டிற்கெதிராக இப்படிப் பொய் பிரச்சாரத்தில் ஈடுபட்ட ஒரத்தநாடு குணசேகரனையும், அவருக்கு பக்க பலமாக இருந்து இது போன்ற தவறான பிரச்சாரம் செய்யத் தூண்டியவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், 26-4-96 ஆம் தேதி பொதுச்செயலாளரின் அறிக்கையின் படி ஏதோ ஒரு அரசியல் கட்சியின் ஏவுகணையாக இப்படி இந்த சதியில் ஈடுபட்டு உள்ளனர் என்றும் இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

தென்சென்னை மாவட்ட இளைஞரணித் தலைவர் மு. பாலகுரு அவர்களை 24-4-96தேதியன்று கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர்கள் தற்காலிகமாக கழகத்தை விட்டு நீக்கி வைத்திருப்பதை கீழ்கண்ட காரணங்களுக்காக மறுபரிசீலனை செய்யுமாறு இக்கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

1. 23-4-96ஆம் தேதியன்று நடந்த கமிட்டியில் கழகத்தின் எந்த நிகழ்ச்சிக்கும் இதுவரை வராத வக்கீல் வீரசேகரன் அநாகரிகமாக நடந்து கொண்டும், கலவரத்தில் ஈடுபட்டும், கைகலப்பிற்கு ஆயத்தமாகவும் நடந்து கொண்டது கழக கட்டுப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதாக இருக்கும் பொழுது, அதற்கு எதிராக எந்தச் செயலும் செய்யாமல் கட்டுப்பாடோடு கொள்கை அடிப்படையில் வெறும் வாக்குவாதம் மட்டும் செய்த தோழர் பாலகுரு எந்தக் கட்டுப்பாட்டையும் மீறவில்லை.

2. கழகத் தோழர்கள் மத்தியிலேயே துணைப் பொதுச்செயலாளர் பேசும்போது பெரியாரைக் கேவலப்படுத்தியும், கழகத்தின் அடிப்படைக் கொள்கைக்கு மாறுபாடாகவும் பெரியார் என்றைக்கும் பார்ப்பனரை எதிர்க்கவில்லை என்றும் ராஜாஜியையே ஆதரித்தார் என்றும் 1989-லேயே நாம் பார்ப்பனர் வி.என்.ஜானகியை ஆதரித்தோம் எனவே பார்ப்பனர் ஜெயலலிதாவை ஆதரிப்பது கொள்கைக்கு விரோதம் அல்ல என்றும் - ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட்டால் பெரியாரின் எல்லா கொள்கையும் அடுத்த 5 ஆண்டில் முடிந்து விடும், அதற்குப் பிறகு நம்கட்சிக்கு வேலையே இருக்காதென்றும் திரிபுவாதம் பேசியது தான் கழகக் கட்டுப்பாட்டை மீறியதாகுமென்றும் அதற்கு விளக்கம் கேட்டது கட்டுப்பாட்டை மீறியதாகாதென்றும் இக்கமிட்டி கருதுகிறது.

தோழர் பாலகுரு கேட்ட விளக்கமெல்லாம் இதுதான்:

பெரியாரின் கொள்கை பார்ப்பனர் எதிர்ப்பா அல்லது சந்தர்ப்பவாதமா?

1989 மற்றும் 1991ல் பார்ப்பனராகவும் நமக்கு எதிரியாகவும் இருந்த ஜெயலலிதா எப்படி திடீரென சூத்திரர் ஆனார்?

சங்கராச்சாரியாரின் காலில் விழுந்தும் சங்கராச்சாரியாரின் எண்ணங்களை நிறைவேற்றுவேன் என்றும் கூறுகின்ற ஜெயலலிதாவை எப்படி ஏற்றுக் கொள்வது?

பார்ப்பனர் தலைமை ஏற்றுள்ள எந்த இயக்கத்தையும் ஏற்றுக் கொள்ளக்கூடாதெ்தென கூறிவிட்டு பார்ப்பனர் தலைமையிலான அ.தி.மு.க.வை எப்படி ஆதரிப்பது?

பிப்ரவரி மாதம் கழகப் பொதுச்செயலாளர் பேசும்போது காங்கிரசுடன் கூட்டு சேரும் எந்தக் கட்சிக்கும் நமது ஆதரவு இல்லை என்று கூறிவிட்டு இரண்டே மாதத்தில் அதற்கு எதிரான முடிவு செய்தால் அது சந்தர்ப்பவாதமாகாதா?

கல்வி நிறுவனங்களுக்கு கிடைக்கும் சில சலுகைக்களுக்காக கழகத்தின் செயல்பாட்டை விட்டுக்கொடுக்கலாமா?

கழகக் கட்டுப்பாடு என்பது கொள்கைக் கட்டுப்பாடே அல்லாமல் தனிமனிதத் துதிபாடல் அல்ல.

பார்ப்பனர்களில் முற்போக்கு, பிற்போக்கு பார்ப்பனர்கள் எல்லாம் கிடையாது, என்றும் பார்ப்பனர்கள் ஒட்டுமொத்தமான எதிரிதான்.

தோழர் பாலகுரு எழுப்பிய பிரச்சனை இதுதான்.

ஆனால் ஒரு விருது கொடுத்து விட்டதையே கழகத்திற்குக் கிடைத்த பெரும்பேறு எனக்கருதி - கழகத்தையே அடமானம் வைக்க முற்படுவது சரியாக இருக்காது, இதற்கு எல்லாம் விளக்கம் கேட்ட தோழர் பாலகுரு - சிலரின் சொந்தக் கருத்துக்கு எதிராக இருக்கிறார் என்பதால் கழகக் கட்டுப்பாட்டுக்கு எதிராக இருக்கிறார் என்று கூறி கழகத்திலிருந்து நீக்கி வைத்திருப்பதில் எந்த நியாயமும் இல்லை என்றும், எனவே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் இக்கமிட்டிக் கேட்டுக் கொள்கிறது.

28-4-96ல் இக்கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானத்தை தென்சென்னை இளைஞர் அணி பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து இளைஞர் அணி தோழர்களும் ஒருமனதாக ஆதரித்து கையெப்பம் இடுகின்றோம்.

✪ ✪ ✪

திராவிடர்கழகம் கட்டுப்பாடு கொண்ட ஒரு இயக்கம் என்பதில் இருவித கருத்துகளுக்கு இடமில்லை. 1948ஆம் ஆண்டு தூத்துக்குடியில் தந்தை பெரியார் கழகக் கட்டுப்பாடு குறித்து நிகழ்த்திய உரை- வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. வெவ்வேறு காலகட்டங்களில் திராவிடர் கழகத்தில் பிரச்சனைகள் தோன்றும் போதெல்லாம் தந்தை பெரியாரின் இந்த தூத்துக்குடி உரையை திராவிடர் கழகத் தலைமை எடுத்துக் காட்டுவதும், அதை விடுதலையில் வெளியிடுவதும் வழமையான ஒன்று. அதேபோல் தி.க. பொதுச்செயலாளர் பெரியாரின் தூத்துக்குடி உரையை அமெரிக்காவிலிருந்து எடுத்துக்காட்டி விடுதலைக்கு ஒரு அறிக்கை அனுப்பினார். சில திராவிடர் கழகத் தோழர்கள் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு ஏவுகணையாகி விட்டதாகவும், அதில் குற்றம் சாட்டினார். தொடர்ந்து தூத்துக்குடியில் பெரியார் ஆற்றிய உரையையும் "விடுதலை" வெளியிட்டது. அந்த நிலையில் தூத்துக்குடி உரையை தோழர்களுக்கு தெளிவுபடுத்தி தமிழகம் முழுவதும் உள்ள கழகப் பொறுப்பாளர்களுக்கு 5-596 அன்று மு. பாலகுரு அனுப்பிய சுற்றறிக்கை இது.

லட்சியம் காக்கவே கட்டுப்பாடு !!

அறிவு ஆசான் தந்தைபெரியாரின் தூத்துக்குடிப் பேருரை வழிகாட்டுகிறது!

மானமிகு கழகத் தோழர்களே!

1948-ல் நமது அறிவு ஆசான் தந்தை பெரியார் அவர்கள் தூத்துக் குடியில் கழகக் கட்டுப்பாடு குறித்து ஆற்றிய உரை, என்றென்றும் நமக்கு வழி காட்டக்கூடிய காலப்பெட்டகம். நமது அறிவு ஆசான் அந்த உரையிலே சுட்டிக்காட்டியிருப்பது போல் நாம் இந்த இயக்கத்தின் தலைமை தரும் கட்டளைகளைக் கண்களை மூடிப் பின்பற்றுகிறவர்கள் தான். அப்படித்தான் நாம் இதுவரை நடந்து காட்டி வருகிறோம்.

தூத்துக்குடி உரையிலே நமது அறிவு ஆசான் திட்டவட்டமாக சுட்டிக்காட்டி இருக்கும் இந்தப் பகுதியைப் பாருங்கள்:

"சிலருக்கு நான் ஏதோ சர்வாதிகாரம் நடத்த முற்படுகிறவன் என்று தோன்றலாம். இது ஓரளவுக்கு சர்வாதிகாரம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், தோழர்களே! சிந்திக்க வேண்டும். இந்த சர்வாதிகாரம் எதற்காகப் பயன்படுகிறது, என்று என்னுடைய சர்வாதிகாரத்தைக் கழக லட்சியத்தின் வெற்றிக்காக, பொது நன்மைக்காகவே பயன்படுத்துகிறேனே தவிர, எந்தச் சிறு அளவுக்கும் எனது சொந்தப் பெருமைக்காகவோ ஒரு சிறு கடுகளவாவது சொந்த நன்மைக்காகவோ பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து

கொள்ள வேண்டுகிறேன்."

-இதுதான் நமது அறிவு ஆசான் பேச்சில் நாம் சிந்திக்க வேண்டிய பகுதியாகும். கழக லட்சியத்துக்குப் பயன்படும் சர்வாதிகாரம் தான் தந்தை பெரியார் நமக்கு காட்டிச் சென்றிருக்கும் அணுகுமுறை.

தந்தை பெரியார் மேலும் அந்த உரையில் கூறுகிறார்:

"என்னைப் பொறுத்தவரையில் என்னைப் பின்பற்றி நடந்து வருபவர்கள் புத்திசாலியாய் இருக்கவேண்டுமென்ற கவலை எனக்குக் கிடையாது. என் லட்சியத்தை நிறைவேற்றக் கூடிய ஆட்கள் தாம் எனக்குத் தேவை" – என்கிறார் தந்தை பெரியார்.

தந்தை பெரியாரின் அடிப்படை லட்சியங்களில் முக்கியமானது பார்ப்பன எதிர்ப்பு அல்லவா? பார்ப்பனத் தலைமையை ஆதரிப்பது - தந்தை பெரியார் லட்சியத்துக்கு செய்யப்படும் துரோகம் அல்லவா? தந்தை பெரியாரே பார்ப்பனர்களை ஆதரித்துள்ளார் என்று ஆதாரங்களைக் காட்டிக் கழகத் துணைப் பொதுச்செயலாளர் பேசுவது தந்தை பெரியாரைக் கொச்சைப்படுத்துவது ஆகாதா?

தந்தை பெரியார் அதே உரையில் மேலும் கூறுகிறார்:

"கசாப்புக் கடையில் வேலை பார்க்க ஒப்புக்கொண்டவன் அந்த ஆட்டை வெட்டுடா என்றால், அய்யோ என் மனசாட்சி மாட்டேன் என்கிறதே; நான் என்ன செய்யட்டும் என்று கூறினால், ஏண்டா மடப்பயலே முன்னாடியே இது உனக்கு தெரியாமல் போனது என்னடா? என்று கேட்பானா இல்லையா அவன்?"

என்று தந்தை பெரியார் ஒரு உதாரணத்தை மிகச் சரியாக சுட்டிக் காட்டியிருக்கிறார். கசாப்புக் கடையில் வேலைக்கு சேர்ந்தவன் ஆட்டை வெட்டு என்றால் வெட்டத்தான் வேண்டும். அதுதான் சரி; ஆனால் ஆடு வெட்டும் வேலைக்கு சேர்த்துக் கொண்டு, அடுத்து வீட்டுக்காரனைப் போய் வெட்டிவிட்டு வா என்றால் அப்போது ஏன் என்று கேட்கத்தானே வேண்டும். ஆட்டை வெட்டும் லட்சியத்துக்குத்தான் அவன் வேலைக்கு சேர்ந்தவனே தவிர, அடுத்த வீட்டுக்காரனை வெட்டுவதற்கு அல்ல.

பெரியார் இன்னும் கேட்கிறார்:

"ஒரு டிஸ்ட்ரிக்ட் சூப்பிரின்டெண்ட் சுடு என்று போலீஸ்காரனுக்கு உத்தரவு போட அவன், என் மனசாட்சி அதற்கு இடங் கொடுக்கவில்லையே என்று கூறினால் அந்த சூப்பரின்டெண்ட் கதி என்னாவது?"

என்று மிகச்சரியாகக் கேட்கிறார் தந்தை பெரியார். தனது கடமையை செய்யும் நோக்கத்தில் சுடு என்றால் போலீஸ்காரர் சுட

வேண்டியதுதான். ஆனால், சூப்பரின்டெண்ட், தனது மேலதிகாரியைப் பிடிக்கவில்லை என்பதற்காக அவரைப் போய் சுடு என்று கூறினால், போலீஸ்காரர் அதை செய்ய முடியுமா?

கழகக் கொள்கைகளை நன்றாக சிந்தித்து அதை ஏற்றுக்கொண்டால் இயக்கத்துக்கு வாருங்கள்; இயக்கத்துக்கு வந்த பிறகு கொள்கைக்காக தலைமை கூறுவதைக் கண்களை மூடிப் பின்பற்றுங்கள் என்றார் தந்தை பெரியார். அப்படித்தான் நாமும் பின்பற்றி வருகிறோம். ஆனால் கொள்கைக்கு எதிராகவே செயல்படும் போது அதையும் கண்மூடித் தனமாகப் பின்பற்ற வேண்டும் என்பது தந்தை பெரியார் கொள்கைக்கு செய்யும் துரோகம் ஆகிவிடாதா?

அதே உரையில் தந்தை பெரியார் கூறுகிறார்:

“காந்தி அடிகள் ஆரியர்களை ஆதரித்தார். அதனால் நான் அவரை எதிர்த்தேன். அவர் ஆரியர்களுக்கு எதிராக மாறியதால் ஆரியரால் சுடப்பட்டார். எனவே அவர் சாவில் நான் துக்கப் படுகிறேன்”

ஆக அய்யா கருத்தின் படி ஆரியரை யார் ஆதரித்தாலும் அவர்கள் பெரியாருக்கு எதிரி; நாங்கள் கேட்பது எல்லாம், திராவிடர் கழகமே பெரியாருக்கு எதிரி ஆகலாமா?

திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுவிலே எந்த திராவிட கட்சிகளுக்கு வேண்டுமானாலும் ஓட்டுப் போடலாம் என்று தீர்மானம். ஆனால் மாநில இளைஞரணி செயலாளர் ஒரத்தநாடு குணசேகரன் தமிழ் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அ.இ.அ.தி.மு.கவின் பார்ப்பனத் தலைமைக்கே ஓட்டளிக்கக் கோரியதும், அதுவே பொதுச்செயலாளரின் விருப்பம் என்று கூறியதும் கட்டுப்பாட்டுக்கு உரிய செயல்தானா? இதற்காக குணசேகரன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

தோழர்களே! நமது அறிவு ஆசான் தந்தை பெரியாரின் தூத்துக்குடி உரை நமக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு.

தந்தை பெரியார் லட்சியத்தை வெற்றி பெறச் செய்வதற்குத்தான் கட்டுப்பாடு என்ற கவசத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். கட்டுப்பாடு மட்டுமே ஒரு லட்சியம் ஆகிவிடமுடியாது. கட்டுப்பாடு மட்டும் தான் லட்சியம் என்றால் தேசிய சாரணர் படையோ அல்லது ஆர்.எஸ்.எஸ். அமைப்பிலேயோ கூட இருந்து விட்டுப் போகலாமே!

கொள்கையைக் கொண்டு செல்வதற்கு நாம் ஏற்றுக் கொண்டுள்ள கட்டுப்பாட்டை கொள்கையை ஒழிப்பதற்கும் பயன்படுத்த வேண்டுமா?

தந்தை பெரியாரின் தூத்துக்குடி உரையை மீண்டும் மீண்டும் படியுங்கள். இந்தக் கேள்விகளுக்கு தெளிவான விடை கிடைத்துவிடும்!

தோழர்களே!

கலை - கலைக்காக அல்ல; அது மக்களுக்கு!

அதுபோல கட்டுப்பாடு கட்டுப்பாட்டுக்காக அல்ல - அது பெரியாரின் லட்சியத்துக்கு!!

அதுதான் தந்தை பெரியார் கூறும் "லட்சியத்துக்கான சர்வாதிகாரம்"!

மீண்டும் தந்தை பெரியார் கூறியதை நினைவுபடுத்துவோம்:

என்னுடைய சர்வாதிகாரத்தைக் கழக லட்சியத்தின் வெற்றிக்காக, பொது நன்மைக்காகவே பயன்படுத்துகிறேனே தவிர, எந்தச் சிறு அளவுக்கும் எனது சொந்தப் பெருமைக்காகவோ ஒரு சிறு கடுகளவாவது சொந்த நன்மைக்காகவோ பயன்படுத்திக் கொள்ளவில்லை.

மானமிகு கழகத் தோழர்களே! தந்தை பெரியார் லட்சியம் நம் கண் முன்னே சிதைக்கப்பட்டு திரிக்கப்படும் நிலை உருவாகியிருப்பதை நாம் தட்டிக் கேட்காமல்விட்டால் எதிர்கால சந்ததி நம்மை பழிக்கு ஆளாக்கிவிடாதா? அருள் கூர்ந்து சிந்தியுங்கள்.

✪ ✪ ✪

மறைந்துபோன கைலாசம் அறக்கட்டளை சொற்பொழிவு

அருப்புக்கோட்டை கைலாசம் என்ற பெரியார்பற்றாளர், தனது சொந்தப் பணத்தில் ஒரு அறக்கட்டளையே உருவாக்கினார். "ஒவ்வொரு ஆண்டும் பெரியார் பற்றி ஆய்வு சொற்பொழிவு நடத்தி, சொற்பொழிவாளருக்கு "பெரியார் பேருரையாளர்" பட்டம் தரப்பட்டு அந்த உரையை நூலாக வெளியிடவேண்டும்" என்பது இந்த அறக்கட்டளையின் நோக்கம். முதல் நான்கு ஆண்டுகள் மட்டுமே இந்த ஆய்வுரை நடந்தது. கடந்த பல ஆண்டுகளாக இந்த ஆய்வுரை நிகழ்ச்சி நடக்கவே இல்லை; திரு. கைலாசமும் முடிவெய்திவிட்டார்.

கழகத்தில் இருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, மு.பாலகுரு தி.க. பொதுச் செயலாளருக்கு எழுதிய கடிதம்

சென்னை
14-5-96

கழகப் பொதுச்செயலாளர் அவர்களுக்கு,

பத்தாண்டுகாலமாக இந்த இயக்கத்தின் கொள்கைகளுக்காக எனது உழைப்பை எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் கொடுத்து வந்த ஒரு பெரியார் தொண்டன் நான். கொள்கையைக் கேட்டதற்காக நான் வெளியேற்றப்பட்டுள்ளேன். நான் வெளியே போவதற்கு முன் அதற்குரிய காரணங்களைக் கூறிவிட்டு செல்வதுதான் முறை என்பதால் இதனை எழுதுகிறேன். நியாயத்தின் பக்கம் நின்ற 200க்கும் மேற்பட்ட திராவிடர் கழக இளைஞர்களையும் 'விடுதலை' ஏட்டின் மூலம் ஒரே வரியில் கழகத்தை விட்டு நீக்கி அறிவித்துவிட்டீர்கள். கடைசிப் பெரியார் தொண்டன் வரையிலும் ஒவ்வொருவராக நீக்கும்வரை நீங்கள் ஓயவே மாட்டீர்கள் போல் இருக்கிறது. எதற்காக இந்த ஒருவாரமாக தஞ்சாவூரிலிருந்து 20 அடியாட்களை கூட்டி வந்து வைத்திருக்கிறீர்கள். ஏன் அவ்வளவு பயம்? தவறு செய்தீர்கள் பயப்படுகிறீர்கள். என்ன தவறு? பெரியாருக்கு எதிராக - கொள்கைக்கு எதிராக செயல்பட்டீர்கள் பயம் வந்துவிட்டது; அடியாட்கள் தேவைப்படுகிறது!

நாங்கள் எழுப்பிய கொள்கைரீதியான கேள்விகளுக்கு ஏன் பதில்சொல்ல தயங்குகிறீர்கள்? தொண்டனுக்கு தொண்டன் என்று பத்திரிகைகளில் எழுதிக்கொண்டு, தலைவருக்கு தலைவராக இருக்கவே நீங்கள் ஆசைப்பட்டீர்கள். இல்லாவிட்டால் பெரியாருக்கு மட்டுமே சொந்தமான தமிழர் தலைவர் என்ற பட்டத்தை போட்டுக் கொள்வீர்களா? அது தவறல்லவா? அதை ஏன் நிறுத்தவில்லை. உங்களுக்கே அந்த ஆசை வந்து விட்டது. நீங்களே பெரியார் ஆகி விட்டீர்கள். உங்களைச் சுற்றி நிற்பவர்களெல்லாம் ஆமாம் சாமிகளாகவே இருக்க வேண்டும். அவர்களைத்தான் உங்களுக்குப் பிடிக்கும். உண்மையைச் சொன்னால் உடனே துரோகி 'கட்டம் கட்டல்' மாறுபட்டுப் பேசினால் ஏன் அப்படி கோபம் வரவேண்டும்.

தேர்தல் முடிவுகள் வந்தபிறகு உங்களால் தைரியமாக தலைநிமிர்ந்து நிற்க முடியவில்லையே - பாப்பாத்திக்கு துணை போனதுதானே காரணம்? ஏதோ ஒரு அரசியல்கட்சிக்கு ஏவுகணையாக போனதுதானே காரணம்? ஏதோ ஒரு அரசியல் கட்சிக்கு ஏவுகணையாக செயல்படுவதாக எங்களைக் குற்றம்சாட்டிவிட்டு நீங்கள் அ.இ.அ.தி.மு.க.வின் பார்ப்பன ஜெயலலிதாவுக்கு ஏவுகணையாக மாறி நிற்கிறீர்கள். அதனால்தான்

மத்திய கமிட்டி தீர்மானத்தை நீங்களே எழுதி அனுப்புகிறீர்கள். அதற்கு எல்லோரும் கட்டுப்படவேண்டும். அதற்கு எதிராக யாரும் பேசக்கூடாது என்கிறீர்கள், அதுதான் கட்டுப்பாடு. தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கூட எதிராக செயல்படவில்லை. பிறகு அதற்கெதிராகவே ஓரத்தநாடு குணசேகரனை அனுப்பி ஜெயலலிதாவிற்கே ஓட்டுப் போடும்படி கூறி நீங்களே அனுப்புகிறீர்கள். இது தவறா, இல்லையா? அதைக்கேட்டால் துரோகியா? கட்சிக் கட்டுப்பாட்டை மீறியும் பெரியார் கொள்கைக்கு எதிராகவும் நடந்து கொண்டீர்கள்.

ஏவுகணையாக செயல்பட்டது நீங்களா? நாங்களா? உங்களுக்கு ஒரு நீதி - தொண்டனுக்கு ஒரு நீதியா?

நீங்கள் ஜெயலலிதாவுக்கு வீராங்கனைப்பட்டம் கொடுத்தீர்கள். அதன்பிறகு பெரியார் விருதை. தரச்சொல்லி நீங்களே யோசனை கூறிவிட்டு அந்த முதல்விருதை நீங்களே வாங்கி மகிழ்ச்சியடைந்தீர்கள்! எனக்கு வேண்டாம் - வேறு யாருக்காவது கொடுக்கச் சொல்லி பெரியாருக்கு பெருமை சேர்த்திருக்க வேண்டாமா?

அந்தப் புகழ் மயக்கத்தில் நாக்கு குழறிப் போய் பேசவார்த்தையே வராமல் தவித்து, வாழ்நாள் முழுவதும் துரோகம்செய்யமாட்டேன் என்று கூட்டத்தின்முன் உறுதி கொடுத்தீர்கள். உங்களுக்கு புகழும் பெருமையும் கிடைத்து விட்டால் உடனே இயக்கத்தைக் கொண்டுபோய் அடகு வைத்துவிடுவதா? பெரியார் இப்படி புகழுக்கு ஆசைப்பட்ட தலைவராகவா இருந்தார்? பார்ப்பான் கையில் உள்ள பெருமையும், குஷ்டரோகி கையில் உள்ள வெண்ணெய்யும் ஒன்று என்பது உங்களுக்கு மட்டும் பொருந்தாதா?

ஒரு கட்சியின் தலைவர் வெளிநாட்டிலிருந்து வருகிறார், வரவேற்க ஒரு கட்சிக்காரன் கிடையாது. தஞ்சாவூர் அடியாட்கள் 20 பேர் மற்றும் கருப்புத்துணிக்கட்டி வேஷம் போட்ட நிறுவன வேலைக்காரர்கள். கையிலே கருப்புக் கயிறு நெற்றியிலே குங்குமம், கட்டியிருப்பது கருப்புத்துணி. நிறுவனத்தில் வேலை செய்யும் இரண்டு பார்ப்பன பெண்களுக்கும் கறுப்புத் துணி - பார்ப்பனர்கள் எப்போது தி.க.வில் சேர்ந்தார்கள். வாழ்க பெரியார்!

கட்சிப் பணி என்பதே இப்போது கல்வி நிறுவனப்பணி, அல்லது உங்களுக்கு தொண்டு செய்வதாகி விட்டது. கல்லூரிக்கு நிதி திரட்டுவதற்கும், என்ஜினியரிங் காலேஜிக்கு நிதி வசூலிப்பதற்கும், உங்களுக்கு கார், வேன் நிதி வசூல் செய்வதற்கும் தான் பெரியார் தொண்டன் கட்சியில் சேர்ந்தானா?

கழக மாநாடு என்றாலே இந்த கல்லூரிகளில் படிக்கும் பிள்ளைகளை சுற்றுலா போவதாக அழைத்து வந்து ஊர்வலத்தில் நிற்க

வைத்து கூட்டத்தைக் காட்டுகிற அளவுக்கு இயக்கம் கீழே போய்விட்டது. உங்களுக்கு சலாம்போட்டு, புகழ்ந்து, புகழ் மயக்கத்தில் உங்களை மூழ்கடிக்கும் இந்த கல்லூரி ஆசிரியர்களின் முகஸ்துதியில் நீங்கள் பேரின்பம் அடைகிறீர்கள்! பெரியாரின் எளிமை என்ற தலைப்பில் இப்போது உங்களால் பேச முடியுமா? எளிமையான வாழ்க்கையை உபதேசிக்க உங்களால் முடியுமா?

சைக்கிளில் போகிறவனெல்லாம் காரில் போக ஆசைப்படும்போது துரோகியாகி விடுகின்றான் - என்று, உங்களின் அமெரிக்க டாக்டரை வைத்து விடுதலையில் அறிக்கை விடுகிறீர்கள். இங்கே கொடிகட்டி, கூட்டம்போட்டு, கடைக்குக் கடையாகச் சென்று காசு வசூலித்து, கஷ்ட நஷ்டம் பட்டு ரத்தத்தை சிந்தி உழைக்கும் தொண்டர்களை அவமானப்படுத்த யார் உரிமை கொடுத்தது அந்த டாக்டருக்கு? நாளைக்கு உங்கள் ஆடிட்டரையும், குடும்ப வக்கீலையும் வைத்துகூட உங்களுக்கு ஆதரவாக அறிக்கைவிடச் சொல்வீர்களோ? உங்களது நிலை அவ்வளவு பரிதாபமாகிவிட்டதா? இயக்கத்திற்கு வருமுன் உங்கள் நிலை என்ன? இன்றைய உங்களின் தலைமைப் பதவி, வசதி வாய்ப்புக்கள், உலகத் தொடர்புகள், எல்லாமே தந்தை பெரியாரால் உங்களுக்கு உண்டாயிற்று. ஆனால் இன்று அந்த பெரியாரின் கொள்கைக்கே கேடு விளைவிக்க துணிந்துவிட்டீர்கள்.

பார்ப்பானை வெறு-என்பது பெரியார் கொள்கை. ஆனால் பாப்பாத்தியுடன் நட்பு வைத்துக் கொள் என்பது உங்களின் புதிய கொள்கையா?

பார்ப்பனத் தலைமையை ஏற்றுக்கொண்டது பெரியாருக்கு இழைக்கும் துரோகமா இல்லையா.

உலகமே ஏற்றுக் கொள்ளக்கூடிய தமிழ் சமுதாயத்திற்கு தலைவராக இருக்க வேண்டிய நீங்கள் ஜெயலலிதாவுக்கு துரோகம் செய்யமாட்டேன் என்று பேசலாமா? அது யாருக்கு கேவலம்? உங்களுக்கு அல்ல- தந்தை பெரியாரின் உண்மைத் தொண்டர் களுக்குத்தான்.

திராவிட பார்முலா என்று கூறி திராவிட அரசியல் கட்சிகளை இணைக்கப் போவதாக இப்போது கூறுகிறீர்கள். ஆனால் நாடாளு மன்றத்தில் திராவிடக் கட்சிகள் காங்கிரசுக்கு இடம் கொடுக்காமல் கூட்டணி வைத்துக் கொள்ளலாம் என்பதுதானே நீங்கள் கூறிய திராவிட பார்முலா?

ஆனால் இப்போது தலைகீழாக மாறிப் போய் எல்லா கட்சிகளையும் இணைப்பதுதான் திராவிடப் பார்முலா என்று பேச கிளம்பியிருப்பது சந்தர்ப்பவாதமல்லவா?

திராவிடக் கட்சிகளை இணைப்பதற்கு முன், சிதறிக் கிடக்கும் பெரியார் அமைப்புகளை இணைக்க முயற்சிப்பதுதானே - இதையே செய்யமுடியாத நீங்கள் திராவிடக் கட்சிகளை இணைப்பது பற்றி பேச என்ன உரிமை இருக்கிறது?

மத்திய கமிட்டி தீர்மானத்தை பல்லாயிரக்கணக்கில் நோட்டீஸ் போட்டு பரப்பச் சொன்னீர்களே எந்தத் தொண்டனாவது அதை வாங்கிப் போய் மக்களிடம் கொடுத்தானா? கொடுக்கத்தான் முடியுமா? கட்டுகட்டாக அச்சடித்து சீந்துவாரின்றி கிடக்கிறது. இதுதான் உங்களுக்குள்ள மரியாதை. காரணம் கொள்கையில்லாத கூடாரம்தான் உங்கள் கட்சி என்றாகிவிட்டதே! யாரும் இந்த கட்சியை சட்டை செய்யவில்லை. அவ்வளவு கேவலமாக ஆக்கிவிட்டீர்கள்! இது வரலாற்று துரோகம்.

இந்த தேர்தலில் தி.க.வின் முடிவு என்ன என்பதை எவனும் சட்டை செய்யவில்லையே!

வினாயகன் ஆபாசங்களை விளக்கும் நோட்டீஸ்களை தலைமைக் கழகமே அச்சடித்து கொடுத்தது. அதை காசு கொடுத்து வாங்கி மக்களிடம் விநியோகித்த தொண்டர்களை காவல்துறை கைது செய்து சிறையில் தள்ளியது. பத்து நாள் சிறைவாசத்திற்குப்பின் நீதிமன்றத்தில் அபராதத் தொகை கட்டியபிறகுதான் வெளியே வர முடிந்தது. இதைக் கேட்டபோது தீவிரத் திட்டத்தை அறிவிக்கப் போகிறேன் - பொறுத்திருங்கள் என்று சொன்னீர்கள்.

என்ன அந்தத் தீவிர திட்டம்? பாப்பாத்திக்கு ஓட்டு போடு என்பதுதானா?

நீங்கள் பேசுகிற மேடையில் உங்களுக்கு பின்னால் - பிரதமருக்கும், முதலமைச்சருக்கும் செய்வதைப்போல் பாதுகாப்புக்காக ஒரு ஆளை நிற்கவைத்து ஒரு பந்தா காட்டப்படுகிறது. அப்படி கடும் எதிரிகள் வருமளவுக்கு நீங்கள் எதை புரட்சிகரமாக செய்திருக்கிறீர்கள். இந்த 'பந்தா'க்கள் எல்லாம் உங்களுக்கு வெட்கமாக இல்லையா?

இலட்சியத்திற்காக - தொண்டர்களை திரட்டுவதாய் கூறி பயிற்சியளித்து, சீருடையெல்லாம் போட்டு கடைசியில் அவர்களை உங்களுக்கு 'சல்யூட்' அடிப்பதற்கும், கார் கதவினை திறப்பதற்கும்தானே பயன்படுத்தினீர்கள்?

உங்கள் வீட்டில் ஒட்டடையடிப்பதற்கும், பாத்ரூம் கழுவுவதற்கும் கூட அவர்களைப் பயன்படுத்தினீர்களே இதுதான் தொண்டர்களை மதிப்பதா?

சென்னையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்தபோது பத்திரிகைகளில் தரப்பட்ட விளம்பரத்தில் கருஞ்சட்டை தொண்டன் பிடித்திருந்த கொடி

எப்படி அண்ணா தி.மு.க. கொடியானது? அதைக் தட்டிக் கேட்டீர்களா? தி.க.வை அ.தி.மு.க.வாக்க முயற்சி செய்கிறீர்களா?

நல்லவேளையாக நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த ஜெயலலிதா ஆட்சி வராமல் போய்விட்டது. வந்திருந்தால் மத்திய கமிட்டியில் பாப்பாத்தி ஜெயலலிதாவுக்கு எதிராக பேசிய வக்கீல் துரைசாமி, கலி.பூங்குன்றன், அருள்மொழி, கு.வெ.கி.ஆசான், பேரா.இறையன், பேரா.இராமநாதன், ஆனூர் ஜெகதீசன் மற்றும் பெருவாரியான மாவட்ட பொறுப்பாளர்கள் மீதெல்லாம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருப்பீர்கள்.

தந்தை பெரியாரின் அடிப்படை கொள்கையான, பார்ப்பன எதிர்ப்பை ஏன் கைவிட்டீர்கள்? என்று கொள்கை அடிப்படையில் கேட்டால் அது தீவிரவாதமாம். பார்ப்பாத்தியை முதலமைச்சராக்க சமரசமாக போவது, முயற்சிப்பது, கொள்கைவாதமாம். அந்தோ பரிதாபம்!

இப்போது நீங்கள்தான் சோகம்தாங்க முடியாமல் தவிக்கிறீர்கள். ஆனால் நாடே மகிழ்ச்சியடைந்துள்ளது **'பீடை ஆட்சி ஒழிந்தது'** என்று!

அமெரிக்க டாக்டர் இளங்கோ எழுதியதைப் போல், உங்களுக்கு வசதியும் வாழ்வும் வந்தவுடன் பெரியாருக்கு துரோகம் செய்து விட்டீர்களே!

ஆயிரம்தான் செய்திருந்தாலும் பாப்பாத்தி புகழ் பாடலாமா? அப்படிப் பாடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்தால் கட்சியை விட்டு நீங்கள்தானே வெளியே போயிருக்க வேண்டும்? கட்சியின் பெயரைக்கூட 'பிராமணர் திராவிடர் கழகம்' என்று மாற்றிவிட்டால் ஒரு பிரச்சனையும் இருக்காது.

உங்களுக்கு இப்போது கட்சிக்காரர்கள் எல்லாம் தேவை இல்லை. தஞ்சாவூர், திருச்சி கல்லூரி ஆசிரியர்கள் இருந்தாலே போதும் என்ற முடிவுக்கு வந்து விட்டீர்கள். உங்களுக்கு தேவை சலாம் போடும் ஆட்கள் தானே? இந்த ஆசிரியர்கள் போராட்டத்திற்கு வரமுடியுமா? கல்வி நிறுவனத்தை வைத்து கட்சி நடத்த முடியாது - அது ஆதித்தனார் கட்சி போல் ஆகிவிடும்!

கட்சி மேடைகளை கட்டுப்படுத்தும் உரிமை இந்த சம்பளம் வாங்கும் ஆசிரியர்களுக்கா? கட்சித் தொண்டர்களுக்கா?

இப்போது தி.மு.க. ஆட்சிக்கு வந்துவிட்டது. இந்த கட்சி நாளைக்கு மத்தியில் பா.ஜ.க.வை ஆதரித்தாலோ அல்லது சோ, 'இந்து' ராம், சாவி போன்ற பார்ப்பனர்கள் பேச்சைக்கேட்டு நடந்தாலோ அதைத் தட்டிக் கேட்கும் உரிமையை நீங்கள் இழந்து விட்டீர்களே!

பாப்பாத்தி முதலமைச்சராவதை ஆதரித்த உங்களுக்கு ஏது உரிமை என்று திருப்பிக் கேட்கமாட்டார்களா?

தந்தை பெரியார் கொள்கையான பார்ப்பன எதிர்ப்பை நீர்த்துப் போக செய்துவிட்டீர்களே? இது வரலாற்றுத் துரோகம் இல்லையா?

பா.ஜ.க., இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ்.-ம் வேகமாக வளர்ந்து வருகிறதே என்றால் அதை ஜெயலலிதா பார்த்துக் கொள்வார் என்று கூறுவதா? "இதுவரை ஆட்சியிலிருந்த கட்சிகள் எல்லாம் தி.க.வை வைப்பாட்டியாகவே வைத்திருந்தன'' என்றும், ''ஜெயலலிதா அம்மையார்தான் தி.க.வுக்கு மரியாதை கொடுத்து அங்கீகரித்தார்'' என்றும் 75 ஆண்டுகால வரலாறு உடைய கட்சியின் பொதுச் செயலாளர் வெட்கமில்லாமல் இப்படிச் சொல்லலாமா?

பாப்பாத்தியின் அங்கீகாரம் கிடைத்ததுதான் பெரியார் இயக்கத்துக்கு கிடைக்கும் பெருமையா?

சோவியத் ரஷ்யாவில் கோர்ப்பசேவ் கொள்கையை மாற்றி ஒரு சோசலிச நாட்டையே சீரழித்து விட்டார். அதைபோல் பெரியார் இயக்கத்தை ஒழிக்க வந்த இன்னொரு கோர்ப்பசேவ் ஆகிவிட்டீர்கள். இது மிகப்பெரிய துரோகம். கோடான கோடி பார்ப்பனரல்லாத மக்களுக்குச்செய்த மாபெரும் இனத்துரோகம்!

பாப்பாத்தியை நீங்கள் ஆதரித்ததன் மூலம் அவமானத்தால் தலைகுனிந்து கிடந்த எங்களுக்கு இப்போது அந்த அவமானம் நீங்கியது. இதையெல்லாம் எழுதக் காரணம் எங்களைப் பலியிட்டாவது உங்களைத் திருத்தத்தான். இவன் யார் புத்தி சொல்ல என்று நினைத்தால் அது பெரியாருக்கு செய்த துரோகம்! நாங்கள் வெளியேறிவிட்டதால் துணிந்து எழுதி விட்டோம். ஆனால் எல்லா தொண்டர்களின் எண்ணமும் இதுதான். வேறு வழியில்லாமல்தான் தி.க.வில் அவமானத்தை தாங்கிக்கொண்டு இருக்கிறார்களே தவிர உங்களுக்காக அல்ல!

ஆத்திரப்படாமல் அமைதியாக உங்கள் உள்ளத்தை திறந்து வைத்து யோசியுங்கள்.

இதுதான் இந்த பெரியார் தொண்டன் விடுக்கும் வேண்டுகோள்.

✪ ✪ ✪

திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழு கூடி முடிவு எடுத்த பிறகு ஒரு மாவட்ட இளைஞரணி கூடி அதை மறுபரிசீலனை செய்யக் கோரி தீர்மானம் நிறைவேற்ற ஏது உரிமை என்ற கேள்வியை சிலர் எழுப்பி யதைத் தொடர்ந்து அதற்கு பதிலளிக்கும் வகையில் கழகப் பொறுப் பாளர்களுக்கு 30-5-96 அன்று அனுப்பிய அறிக்கை இது.

(தி.க. பொதுச்செயலாளர் திரு. கி.வீரமணி ஒரத்தநாடு குணசேகரன் வழியாக அ.தி.மு.கவுக்கு ஓட்டுப் போடுமாறு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து தீரன் சின்னமலை மாவட்ட திராவிடர் கழகம் சார்பில் வெளியி டப்பட்ட வேண்டுகோள் துண்டறிக்கையையும் இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டது.

தந்தை பெரியார் கொள்கை மத்திய கமிட்டிக்கு கட்டுப்பட்டதா? அல்லது மத்திய கமிட்டி தந்தை பெரியார் கொள்கைக்கு கட்டுப்பட்டதா?

தந்தை பெரியார் கொள்கைக்குதான் மத்திய கமிட்டியும், அனைத்து பொறுப்பாளர்களும் கட்டுப்பட்டவர்கள் !!

மானமிகு கழகத் தோழர்களுக்கு, தலைமையால் கலைக்கப்பட்ட தென் சென்னை மாவட்ட திராவிடர் கழக இளைஞரணியினரின் வணக்கம்.

ஒவ்வொரு தோழர்களின் உள்ளத்திலும் எதிரொலித்துக் கொண்டிருந்த, ஆனால் கேட்பதற்குத் தயங்கிக் கொண்டிருந்த கேள்வியைத்தான் நாங்கள் கழகத் தலைமையிடம் கேட்டோம். பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு கொள்கைதான் உயிர் நாடி. அதையே விட்டுவிட்டால் இயக்கமே உயிரிழந்து போய் விடுமே என்று தான் நாங்கள் தலைமைக்கு சுட்டிக் காட்டினோம். கடைசியாக எங்களையே நீக்கிவிட்டார்கள். கொள்கைக்காக பலிகடாவானதில் எங்களுக்கு முழு நிறைவு தான். ஆனால் என்ன பிரச்சாரம் செய்யப்படுகிறது?

மத்திய கமிட்டி நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தை ஒரு மாவட்டக் கமிட்டி மறுபரிசீலனை செய்யச் சொல்ல உரிமை இருக்கிறதா? என்று கேட்கிறார்கள். அப்படியானால், தந்தை பெரியார் கொள்கைக்கு எதிராக மத்தியக் கமிட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற உரிமை இருக்கிறதா? பார்ப்பன அம்மையார் கட்சியை திராவிட கட்சியாக அங்கீகரித்து அந்தக் கட்சிக்கும் ஓட்டுப் போடலாம் எனத் தீர்மானம் போட்டால் தமிழ்நாட்டுக்கு முதலமைச்சராக ஒரு பார்ப்பன அம்மையார் வருவதை

அங்கீகரிக்கிறோம் என்று தானே அர்த்தம்? இது பெரியார் கொள்கைக்கு எதிரானது அல்லவா?

கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் சாமிதுரை பெரியார் பார்ப்பனர்களை ஆதரித்திருக்கிறார் என்று, ஆதாரங்கள் இதோ என்றெல்லாம் பேசுகிறாரே, இது பெரியாரை இழிவுபடுத்துவது ஆகாதா? அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா என்று கேட்டோம். மத்திய கமிட்டி தீர்மானத்துக்கு எதிராக ஒரத்தநாடு குணசேகரன் பொதுச் செயலாளர் பெயரைப் பயன்படுத்தி தமிழகம் முழுதும் சென்று இரட்டை இலைக்கு ஓட்டுப்போடுமாறு கூறியது மத்திய கமிட்டி தீர்மானத்துக்கு எதிரானது அல்லவா என்று கேட்டோம். சாமிதுரை மீதும், குணசேகரன் மீதும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. இவைகளுக்கு எந்த விளக்கமும் தராமல் ஒரே வரியில் நீக்கிவிட்டதாக அறிவித்தது ஏன்?

தந்தை பெரியார் அவர்கள் நான் கொள்கைக்காரனே தவிர, கட்சிக்காரன் அல்ல என்றார். தந்தைபெரியார் கொள்கையை அமுல் படுத்துவதற்குத்தான் மத்தியக் கமிட்டியும், மாவட்டக் கமிட்டியும், பொதுச் செயலாளரும், பொறுப்பாளர்களுமே தவிர, பெரியார் கொள்கைக்கு எதிராகத் தீர்மானம் போடுவதற்கு அல்ல.

தந்தை பெரியாரின் புரட்சிகர கொள்கைகளை ஒவ்வொன்றாக தலைமை பலவீனப்படுத்தி வந்துவிட்டது. கடைசியில் எஞ்சியிருந்தது அடிப்படையான பார்ப்பன எதிர்ப்பு தான். அதுவும் இப்போது சமாதிக்குப்போய் விட்ட நிலையில், இன்னமும் மத்திய கமிட்டி, மாவட்டக் கமிட்டி என்று விதிகளைப் புரட்டிக் கொண்டிருந்தால், அது பெரியாருக்கு செய்யும் துரோகம் ஆகாதா?

குணசேகரன் மீதோ, சாமிதுரை மீதோ, பொதுச் செயலாளர் எந்த நடவடிக்கையையும் எடுக்காதது ஏன்? இந்தத் துரோகச் செயலுக்கு அவரும் உடந்தையாக இருந்ததாலா? அப்படி முறை தவறி பார்ப்பன ஜெயலலிதாவை - ஆதரிக்கும் அளவுக்கு ஏன் துடிக்க வேண்டும்? வழமைக்கு விரோதமான இந்த நடவடிக்கைகள் - பல வித சந்தேகங்களை எழுப்பவே செய்கிறது. இப்போது இயக்கம் பெரியார் இயக்கமாகவா இருக்கிறது? பொதுச் செயலாளர் வீரமணிக்கு யார் யார் வேண்டியவர் களோ, யார் யார் அவரைப் புகழ்கிறார்களோ, யார் யார் அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் வேண்டியவர்களோ அவர்களுக்காக கொள்கை களையும் திட்டங்களையும் அறிவிக்கும் இயக்கமாகி விட்டது. இது பெரியார் கொள்கை இயக்கமா? அல்லது அவரது குடும்பச் சொத்தா?

1925ல் பெரியார் காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டிலிருந்து - வகுப்புரிமைக்காக போர்க் கொடி உயர்த்தி வெளியேறினாரே அது கொள்கைக்காகத்தானே! அதற்காக பெரியாரை - கட்டுப்பாட்டுக்கு

எதிரானவர் என்று குற்றம் சாட்ட முடியுமா? கொள்கை உணர்வாளர்கள் யாராக இருந்தாலும் அப்படித் தானே செயல்படுவார்கள்.

அயோத்தியிலே - பாபர் மசூதியை இடிப்பதற்கு பா.ஜ.க.வினர் கரசேவை நடத்தக் கிளம்பினார்களே, அந்தக் கரசேவைக்கு அனுமதி தரவேண்டும் என்று முதலமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய பா.ஜ.க-வைச் சாராத ஒரே முதலமைச்சர் ஜெயலலிதாதான் அதற்காக-அத்வானி உடனே சென்னைக்கு பறந்து வந்து ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்துப்போனார். ஜெயலலிதாவே - தனது கட்சி ஆட்களை அயோத்திக்கு கரசேவைக்கு அனுப்பியதாகக் கூட செய்திகள் வந்தன. அந்த ஜெயலலிதாவுக்கு ஓட்டுப்போடவேண்டும் என்று கூறிவிட்டு- இப்போது மத்தியில் பா.ஜ.க. ஆட்சி வரக்கூடாது என்று எதிர்த்துப்பேச நமக்கு தார்மீக உரிமை உண்டா? இந்தக் கேள்வியை நம்மைப் பார்த்து கேட்கிறார்களே, நாம் என்ன பதில் சொல்வது?

ஒவ்வொருநாளும் - இந்தத் தலைமையின் கீழ் நாம் கொள்கை ரீதியாக நலிந்துபோய், இப்போது **வீரமணி தலைமையில் இருக்கிறேன் என்று சொல்வதற்கே வெட்கப்படும் நிலையை நமது பொதுச் செயலாளர் உருவாக்கி விட்டார்**. இதுதான் - அவர் நமக்கும் தந்தை பெரியாருக்கும் சேர்த்துத்தந்துள்ள “பெருமை”. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகி வருகிறது. எனவே நமக்கென்ன என்று விட்டு ஒதுங்கிக் கொண்டு “கட்டுப்பாட்டோடு” கொள்கைத் துரோகத்துக்கு உடன்படப் போகிறீர்களா? அல்லது பெரியார் தொண்டன் என்ற உணர்வோடு கொள்கையைத் தட்டிக் கேட்கப் போகிறீர்களா?

நீங்கள் உண்மையான பெரியாரிஸ்டுகளாக இருந்தால் கமிட்டியைக் கூட்டி தீர்மானம்போட்டு கேளுங்கள். எங்களுக்காகக்கூட நீங்கள் ஆதரவு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டாம். பார்ப்பன எதிர்ப்பு கொள்கை பறிபோய்விட்டதே? சாமிதுரை மீதும், குணசேகரன் மீதும் என்ன நடவடிக்கை என்று தீர்மானம் போட்டுக் குரல் கொடுங்கள்.

மான அவமானம் பாராமல் இந்த இயக்கத்துக்கு தொண்டு செய்ய வந்தவர்கள் நாம். நாம் கொள்கைக்காக மானத்தைக் கூட இழந்திருக்கிறோம். அதில் பெருமை தான். அதற்காக கொள்கையை இழந்து மானத்தை இழப்பது - தலைகுனிவு அல்லவா? நாம் வாழ்வின் சுகதுக்கங்களை மறந்து இந்த இயக்கத்துக்காக உழைக்கிறோம். ஏன்? கொள்கைக்காக. அரசியல் சட்டத்தை எரித்து விட்டு 6 மாதம் முதல் 3 ஆண்டு வரை சிறைத்தண்டனை அனுபவித்து விடுதலையாகி வந்தவுடன் வீடு வாசல்களை எல்லாம் இழந்த கருப்பு மெழுகுவர்த்திகளின் அந்தக் கொள்கை உறுதியை எண்ணிப்பாருங்கள். கொள்கைக்காக எண்ணற்ற தோழர்களை உயிர்ப்பலி கொடுத்தோமே!

சாகும் நேரத்திலும் உங்களை சூத்திரராக விட்டு விட்டுச் சாகிறேனே என்று வேதனையோடு கூறிவிட்டு மறைந்தார் நமது அறிவு ஆசான்! ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நமது அறிவு ஆசான் நமக்குத் தேடி வைத்து விட்டுப் போன **ஒரே சொத்து கொள்கை தான்**. அதுவே நம்மை தலை நிமிரவைத்தது. அதுவே எதிரிகளுக்கு சிம்மசொப்பன மானது. இப்போது அந்தக் கொள்கையையே நம்மிடமிருந்து பறித்து - தலைகுனிய வைத்துவிட்டார்களே! இதை யாரிடம் போய்ச் சொல்லி அழுவது? தேம்பித் தேம்பித் திரிவதா? அல்லது கண்ணீரைத் துடைத்துவிட்டு - இந்தத் துரோகத்தைத் தடுத்து நிறுத்துவதா?

நாங்கள் கேட்பது எல்லாம் இதுதான். நீங்கள் பெரியார் கொள்கைக்கு செய்யப்படும் துரோகத்துக்கு உடன்பட்டு நிற்கப் போகிறீர்களா? அல்லது எதிர்கால இயக்க நலனுக்காக சமுதாய நலனுக்காக - தவறை சுட்டிக் காட்டித், தட்டிக் கேட்கப்போகிறீர்களா?

“தவறுகள் நடப்பது உண்மைதான்: ஆனால் நாம் வேறு எங்கே போவது?” என்பதுதான் நம் தோழர்கள் உள்ளத்தைக் குடையும் கேள்வி, நாம் வேறு எங்கும் போக முடியாது என்பதற்காக தலைமை எப்படி வேண்டுமானாலும் இயக்கத்தை நடத்த நாம் தொடர்ந்து அனுமதித்துக் கொண்டே போனால் - அது எங்கே போய்முடியும்? தந்தை பெரியார் கொள்கைக்கு பச்சைத் துரோகம் செய்யும்-இந்த நேரத்திலாவது நாம் தட்டிக் கேட்காவிட்டால் நாம் தன்மான இயக்கத்திலே இருப்பதற்கே தகுதியற்றவர்கள் அல்லவா?

இதுவே நாங்கள் உங்கள் சிந்தனைக்கு வைக்கும் கேள்வி.

✪ ✪ ✪

திராவிடர் கழகத்துக்குள் இந்தக் கொள்கைப் போராட்டம் தேர்தல் நடப்பதற்கு முன்பே துவங்கி நடந்து கொண்டிருப்பதை வாசகர்களுக்கு சுட்டிக்காட்டுகிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு எழுப்பட்ட பிரச்சனைகள் அல்ல இவைகள். அதோடு கொள்கை ரீதியாக திராவிடர் கழகத்துக்குள் கேள்வி எழுப்பட்டதும் இதுவே முதல் முறை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். இதனால் தி.க. பொதுச்செயலாளர் தமிழகம் முழுவதும் மாவட்டக் கமிட்டிகளைக் கூட்டி தோழர்களை சந்திக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானார். ஆனால் அந்தக் கூட்டங்களில் நாங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு எந்த பதிலும் தராமல் தனிமனிதத் தாக்குதல்களே நடத்தப்பட்டன. உண்மைக்கு மாறான தகவல்கள் பரப்பப்பட்டதோடு கொச்சைப்படுத்தியும், கீழ்த்

தரமாகவும் சிலரை பேசவைத்தனர். சென்னையில் 30-5-96 அன்று பெரியார் திடலில் தென் சென்னை, வடசென்னை மாவட்ட திராவிடர் கழக கமிட்டி பொதுச் செயலாளர் கி.வீரமணி தலைமையில் நடந்தது. அதில் பேசப்பட்ட கருத்துக்கள் வெளியே செல்ல வேண்டாம் என்று பொதுச் செயலாளர் கமிட்டியில் கேட்டுக் கொண்டார். ஆனாலும் நடந்த உண்மைகள் தோழர்களுக்கு தெரியவேண்டும் என்பதற்காக பொறுப்பாளர்களுக்கு 8-6-96 அன்று அனுப்பப்பட்ட அறிக்கை இது. தி.மு.க ஆட்சி ஏற்பட்ட பிறகும் திராவிடர் கழக அணுகுமுறையில் கொள்கைப் பார்வை இல்லாமல் இருப்பதை இந்த அறிக்கை வெளிச்சத்துக் கொண்டு வருகிறது.

சென்னை
8-6-96

பெரியார் இயக்கம் கொள்கைக்காகவா? அல்லது தனிமனிதருக்காகவா?

பெரியார் லட்சியத்தில் உறுதி கொண்ட பேரன்பு மிக்க கழகத் தோழர்களே!

கொள்கையைப் பேசியதற்காக ஒதுக்கித் தள்ளப்பட்டு துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்ட தென் சென்னை மாவட்ட கழகத் தொண்டர்களின் பணிவான வணக்கம்!

தொடர்ந்து சுற்றறிக்கைகளா என்று கேட்கிறீர்களா?

பெரியார் கொள்கைகள் நமது காலத்திலே நம் கண் முன்னாலேயே அழிந்துவிடக்கூடாது என்ற உணர்வால்தான் மீண்டும் மீண்டும் நாங்கள் உங்களோடு கருத்துகளை பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

தந்தை பெரியார் லட்சியத்திற்காக அர்ப்பணித்துக்கொண்டு அதற்காகவே இந்த இயக்கத்தில் சேர்ந்தவர்கள்தானே நாம்! தந்தை பெரியார் லட்சியத்தை வழிநடத்துவதற்குத்தானே - நமது பொதுச் செயலாளரை நாம் தலைவராக ஏற்றோம்; நமது பொதுச் செயலாளருக்கு நாம் பெருமை சேர்க்க விரும்பியது எல்லாம் எதற்காக? அதன் மூலம் நமது லட்சியம் பெருமை அடைய வேண்டும் என்பதால்தானே; ஆனால் பெரியார் லட்சியத்தை விட பொதுச் செயலாளர் என்ற தனிமனிதரே மேலானவர்; உயர்ந்தவர் என்ற நிலை உருவான பிறகு - அதையும் நாம் ஏற்றுக்கொண்டு பொதுச்செயலாளர் புகழ்தான் பாடவேண்டும் என்றால் பெரியார் லட்சியவாதிகளால் அதை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது தான் இப்போது உங்கள் சிந்தனைக்கு வைக்கும் கேள்வி!

கழகக் கலந்துரையாடல் கூட்டங்களில் நமது பொதுச்செயலாளர் பேசிவருவது போல் தனிப்பட்ட முறையில் நாங்கள் அவதூறுகளை வீசி - இதைக் குறிப்பிடவில்லை. திட்டவட்டமாக கொள்கை அடிப்படையில் தான் விளக்கங்களோடு இந்தக் கருத்துகளை உங்கள் சிந்தனைக்கு வைக்கிறோம். உங்கள் நாடி நரம்புகளிலே ஓடிக்கொண்டிருக்கும் பெரியார் லட்சிய உணர்வோடு இந்தக் கருத்துகளை நடுநிலையுடன் பரிசீலியுங்கள்.

1. 30-5-96 அன்று மாலை சென்னை பெரியார்திடலில் தென் சென்னை, வடசென்னை, தாம்பரம் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டத்தை பொதுச்செயலாளர் கூட்டினார். கூட்டத்திலே பேசிய பலரும் பொதுச்செயலாளரைப் புகழ்வதன் மூலம் தங்களை விசுவாசிகளாகக் காட்டிக் கொள்ள போட்டி போட்டுக்கொண்டார்களே தவிர இதுவரை - நாங்கள் எழுப்பிய கொள்கை ரீதியான கேள்விகளுக்கு எந்தப் பதிலும் தரவில்லை. கழகத் தலைமையும் இதுநாள் வரை நாங்கள் எழுப்பிய எந்தக் கேள்விக்கும் இதுவரை எந்தக் கலந்துரையாடல் கூட்டத்திலும் பதிலளிக்கவில்லை.

அன்று சென்னையில் பொதுச்செயலாளர் முன்னிலையில் - இளைஞரணிச் செயலாளர் குணசேகரன் பேசியதை நாம் சுட்டிக் காட்டியாக வேண்டும். ஒரத்தநாடு குணசேகரன் என்ன பேசினார்? “மத்திய கமிட்டி தீர்மானத்துக்குப் பிறகு தி.மு.க. பொதுச்செயலாளர் பேராசியர் அன்பழகன் திருச்சியில் பொதுச்செயலாளரை விமர்சித்துப் பேசினார். அது விடுதலையிலும் வெளிவந்தது. அந்தப் படித்தவுடன் எனக்கு கோபம் வந்துவிட்டது. பொதுச்செயலாளரைத் தாக்கி எவன் பேசினாலும் எங்களால் தாங்கிக் கொள்ள முடியாது எனவே தான் உடனடியாக நான் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து கழகத்தோழர்களை சந்தித்து தேர்தலில் அ.தி.மு.க, ம.தி.மு.க. என்று யாருக்கு வேண்டுமானாலும் ஓட்டுப்போடுங்கள். ஆனால் தி.மு.க.-வுக்கு மட்டும் போடக்கூடாது என்று சொன்னேன். நான் அப்படி தமிழ்நாடு முழுவதும் சென்று சொல்லியது உண்மை. ஆனால் இது நானே எடுத்தமுடிவு, பொதுச்செயலாளர் எனக்கு எந்த உத்தரவும் போடவில்லை.” இதுதான் குணசேகரன் பேசியது!

தோழர்களே! குணசேகரன் சந்தித்துப் பேசிய அனைத்துத் தோழர்களுக்கும் அவர் என்ன சொன்னார் என்ற உண்மை தெரியாதா? “அ.இ.அ.தி.மு.க.வுக்கு ஓட்டுப்போட வேண்டும்; இது பொதுச்செயலாளர் எனக்குத் தகவல் தந்து உங்களிடம் எல்லாம் சொல்லச் சொன்னார்” என்பதுதானே - குணசேகரன் சொன்னது!

ஆனால் இன்று உண்மையை அப்படியே மறைத்து “பொதுச் செயலாளர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை” என்று பொதுச்

செயலாளரை வைத்துக்கொண்டே பொய் சொல்கிறார். அவர் சொல்வது பொய்தான் என்பது தெரிந்தும் பொதுச்செயலாளர் அந்தப் பேச்சை ரசித்துக் கொண்டிருக்கிறார். ஒரு நாணயமான தலைவராக இருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்?

"குணசேகரனை தோழர்களிடம் அனுப்பி அ.இ.அ.தி.மு.கவுக்கு ஓட்டுப்போடச் சொன்னது நான் தான். தலைவர் என்ற முறையில் நான்தான் உத்தரவிட்டேன்." என்று நாணயத்தோடு ஒப்புக்கொண்டிருந்தால் அவர் தலைமைப் பதவியில் இருக்கக்கூடிய தகுதி படைத்தவர். ஆனால் தோழர்களிடம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தொண்டனை விட்டு பொய்சொல்ல அனுமதிப்பதுதான் ஒரு தலைமைக்குரிய பண்பா?

குணசேகரன் செய்ததில் என்ன தவறு என்று அதற்கு நியாயம் கற்பித்துப் பேசிய பொதுச்செயலாளரும் வேறுசில தோழர்களும் அதற்கு ஆதரவாக என்ன வாதத்தை இதுவரை வைத்தார்கள்?

மூன்று திராவிடக்கட்சிகளில் எதற்கு வேண்டுமானாலும் ஓட்டுப் போடலாம் என்பதுதானே மத்தியகமிட்டி தீர்மானம் என்றும் அதிலே ஒரு கட்சியான அ.இ.அ.தி.மு.கவுக்கு ஓட்டுப் போடுமாறு குணசேகரன் சொன்னது எப்படி மத்திய கமிட்டி தீர்மானத்துக்கு எதிரானதாகும் என்றுதானே நியாயம் பேசினார்கள். இப்போது சென்னையில் குணசேகரன் என்ன பேசியிருக்கிறார்? இதற்கு நேர்மாறாக, மத்திய கமிட்டி ஓட்டுப்போட உரிமையளித்த மூன்று கட்சிகளில் ஒன்றான தி.மு.கவுக்கு ஓட்டுப்போடக்கூடாது என்று தான் சொன்னதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஆக, மத்தியகமிட்டி ஓட்டுப்போடலாம் என்று தோழர்களுக்கு உரிமை அளித்த ஒரு கட்சிக்கு ஓட்டுப் போடக்கூடாது என்று குணசேகரன் தமிழகம் முழுவதும் போய் தோழர்களிடம் சொன்னது மத்திய கமிட்டி தீர்மானத்துக்கு எதிரானது அல்லவா? குணசேகரன் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த பொதுச்செயலாளர் இது "கட்சி விரோதப் போக்கு" என்று கூறி அதே இடத்தில் நடவடிக்கை எடுத்து அறிவித்திருக்க வேண்டாமா?

ஆனால் அந்தப்பேச்சை வரவேற்று ரசித்துக்கொண்டிருக்கிறார். பெரியார் கொள்கைக்கு எதிராக பார்ப்பனர் தலைமையிலான ஒரு கட்சியை திராவிடக்கட்சியாக எப்படி அங்கீகரிக்கலாம் என்று கொள்கை ரீதியாக கேள்விகேட்டால் அவர்கள் கட்சித் துரோகிகள் என்று கூறி கட்சியை விட்டு நீக்குகிறார்கள். ஆனால் பொதுச் செயலாளரை அன்பழகன் விமர்சித்துவிட்டார்; எனவே நான் மத்திய கமிட்டித் தீர்மானத்தை எதிர்த்து செயல்படுவேன் என்றால் "சபாஷ்" நீதான் உண்மையான தொண்டன்" என்கிறார்கள். ஆக

பொதுச்செயலாளர் என்ற தனி மனிதருக்காக கட்சிக்கட்டுப் பாடுகளை எப்படி வேண்டுமானாலும் மீறிக்கொள்ளலாம். அதற்கு உரிமை உண்டு.

ஆனால், பெரியார் கொள்கை அடிப்படையில் கேள்வி கேட்டால் கட்டுப்பாட்டுக்கு எதிரானவர்கள் என்கிறார்கள் எனவேதான் கேட்கிறோம், "**திராவிடர் கழகம் லட்சியத்துக்காக இருக்கிறதா? அல்லது வீரமணி என்ற தனி மனிதருக்காக இருக்கிறதா?**"

2. தமிழ்நாட்டில் இப்போதுள்ள சட்டசபையில் ஒரு பார்ப்பனர்கூட கிடையாது என்பது பெரியார் கொள்கைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி அல்லவா?

அ.இ.அ.தி.மு.க வெற்றி பெற்றிருக்குமானால் நான்கு பார்ப்பனர்கள் இடம் பெற்றிருப்பார்கள்; முதலமைச்சரும் பார்ப்பனராகவே இருந்திருப்பார்.

பார்ப்பனர் இல்லாத அமைச்சரவையை அண்ணா அமைத்தபோதே அதைப் பாராட்டி வரவேற்ற தலைவர் பெரியார். இப்போது பார்ப்பனரல்லாதார் சட்டமன்றமே வந்துள்ள போது - பெரியார் இயக்கம் அதை வரவேற்றுப் பாராட்டியிருக்க வேண்டாமா? பொதுச்செயலாளர் அதைச் செய்தாரா? இல்லையே - ஏன்?

தன்னை தி.மு.க. மதிக்கவில்லை என்பதுதான் அவருக்கு முக்கியமாகப் போய்விட்டதே தவிர, பெரியார் லட்சியம் வெற்றி பெறுவது அவருக்கு முக்கியமல்ல? எனவே தான் கேட்கிறோம். "திராவிடர் கழகம் லட்சியத்துக்காக இருக்கிறதா? அல்லது வீரமணி என்ற தனி மனிதருக்காக இருக்கிறதா?"

3. தி.மு.க. அமைச்சரவையில் தமிழ் வளர்ச்சி மற்றும் கலாச்சாரத்துக்காக ஒரு தனித்துறை அமைக்கப்பட்டு அதற்கு தனி அமைச்சரும் நியமிக்கப்பட்டார் என்றவுடன் துக்ளக் பார்ப்பனர் "சோ" அதைக் கடுமையாக கண்டித்து துக்ளக் பத்திரிக்கையில் (24-5-96) கடுமையாக எழுதுகிறார். ஜூனியர் விகடன் பார்ப்பன ஏடு கேலி கிண்டல் செய்து எழுதுகிறது.

மத்திய பார்ப்பன ஆட்சி செத்த மொழியான சமஸ்கிருதத்துக்கு தனி நிதி ஒதுக்கீடு செய்வதையோ, சங்கராச்சாரி சமஸ்கிருதத்தைத் தூக்கிப் பிடிப்பதையோ கண்டிக்காத பார்ப்பன ஏடுகள் தமிழ் வளர்ச்சிக்கு தனித்துறை அமைவதைக் கண்டு கொதித்துப்போய் எழுதுவதை நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது. ஆனால் பெரியார் இயக்கமும் இதே கருத்தை எதிரொலிக்கலாமா?

தமிழ் வளர்ச்சிக்கு என்று தனித்துறை தேவை இல்லை என்று

பொதுச்செயலாளர் "விடுதலை" ஞாயிறு மலரில் பதில்கூறி (26-5-96) பார்ப்பனர்கள் கருத்தையே எதிரொலிக்கிறார். இதுதான் பெரியார் பார்வையா?

பிற்படுத்தப்பட்டோருக்கு தனித்துறை அமைக்க வேண்டும் என்று கடந்த கால தி.மு.க. ஆட்சியில் கேட்டது திராவிடர் கழகம் தானே! எல்லா துறைகளிலும் பிற்படுத்தப்பட்டோர் நலனைக் கவனிக்க வேண்டுமே தவிர, அதற்கென தனித்துறை தேவையில்லை என்று அப்போது சொன்னோமா? இப்போது தமிழுக்கு தனித்துறையை அமைத்துள்ள தி.மு.க. ஆட்சியைப் பாராட்டக்கூட வேண்டாம்? பார்ப்பனர்களோடு சேர்ந்து கண்டிக்காமல் இருக்கக்கூடாதா? ஏன் இப்படி ஒருநிலை எடுக்கிறார், தி.மு.க. தன்னை மதிக்கவில்லை என்பதால்தானே! எனவேதான் கேட்கிறோம். **"திராவிடர் கழகம் லட்சியத்துக்காக இருக்கிறதா? அல்லது வீரமணி என்ற தனிமனிதருக்காக இருக்கிறதா?"**

4. மத்தியில் தி.மு.க. பாரதிய ஜனதாவைத்தான் ஆதரிக்கப்போகிறது என்று தன்னை சந்திக்கவரும் தோழர்களிடம் எல்லாம் பிரச்சாரம் செய்துகொண்டு வந்தார் பொதுச்செயலாளர். தனது அறிக்கைகளிலும், இதை இடைவிடாமல் குத்திக் காட்டியே வந்தார். எப்படியாவது தி.மு.க. - பாரதிய ஜனதாவை ஆதரித்துவிட்டால் தேர்தலுக்கு முன் தாம் எடுத்த நிலையை நியாயப்படுத்திவிடலாம் என்பதே பொதுச்செயலாளரின் திட்டம். பெரியார் தொண்டர்கள் இப்படி நினைக்கலாமா? எதிரிபக்கம் போகிறவர்களை போகவிடாமல் தடுத்து - பெரியார் பாதைக்கு திருப்பிவிடுவதுதான் பெரியர் அணுமுறையே தவிர எப்படியாவது எதிரியின் பக்கம் அவர்களைத் தள்ளிவிட நினைப்பது அல்ல! பிறகு ஏன் பொதுச்செயலாளர் இப்படி ஒரு நிலை எடுத்தார்?

"தன்னை தி.மு.க. மதிக்கவில்லை என்பதால்தானே! எனவேதான் கேட்கிறோம், **திராவிடர் கழகம் லட்சியத்துக்காக இருக்கிறதா? அல்லது வீரமணி என்ற தனிமனிதருக்காக இருக்கிறதா?**

5. நாடாளுமன்றத்தில் வாஜ்பாய் அரசின் மீதான நம்பிக்கை ஓட்டுகோரும் தீர்மானத்தின் மீது தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் முரசொலி மாறன் ஆற்றிய உரை நாடாளுமன்ற வரலாற்றிலே குறிப்பிடத்தகுந்த உரையாகும்.

"வடநாட்டுக் கலாச்சாரம் ஆரிய கலாச்சாரம்; தென்னாட்டுக் கலாச்சாரம் திராவிடக் கலாச்சாரம் இரண்டும் வெவ்வேறானது - ஒன்றாகக் கலக்க முடியாது. ஆரியக் கலாச்சாரத்தையும் திராவிடக் கலாச்சாரத்தையும் ஒன்றுதான் என்று இணைக்கும் "இந்துத்துவா" கோட்பாட்டை நாங்கள் ஏற்க முடியாது. நாங்கள் பெரியார், அண்ணா வழி வந்தவர்கள். "இந்துத்துவா" என்பது மனுதர்மம் தான்" என்று

நாடாளுமன்றத்திலே முரசொலி மாறன் பேசி பதிவு செய்தாரே; இந்தப் பேச்சை விடுதலை பெரிய அளவில் வெளியிட்டிருக்க வேண்டாமா? பொதுச்செயலாளர் இதைப் பாராட்டியிருக்க வேண்டாமா?

இது பெரியார் குரலின் எதிரொலி அல்லவா? ஆனால் பெரியார் கொள்கை நாடாளுமன்றத்தில் எதிரொலிப்பதைவிட தன்னை மதிக்கிறார்களா இல்லையா என்பதுதானே பொதுச்செயலாளருக்கு முக்கியம் - எனவேதான் கேட்கிறோம், திராவிடர் கழகம் லட்சியத்துக்காக இருக்கிறதா? வீரமணி என்ற தனி மனிதருக்காக இருக்கிறதா?

6. சென்னையிலே நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் வடசென்னை மாவட்ட திராவிடர்கழக இளைஞரணி தலைவர் தோழர் கேசவன் பார்ப்பனர் தலைமையிலான ஒரு கட்சியை எப்படி திராவிட கட்சியாக அங்கீகரிக்க முடியும் என்று கேட்டார்.

தோழர் கேசவன் தலைமையிடம் நேரில் விளக்கம் கேட்டார் என்பதற்காகவே அதே கூட்டத்தில் அவரிடமிருந்து இளைஞரணித் தலைவர் பதவி பறிக்கப்பட்டது.

அதே போல் தாம்பரம் மாவட்ட இளைஞரணித் தலைவர் தமிழ்மணி விளக்கம் கேட்டார். அதே கூட்டத்தில் அவரிடமிருந்தும் இளைஞரணித் தலைவர் பதவி பறிக்கப்பட்டது. கொள்கை தொடர்பாக விளக்கம் கேட்டதே குற்றமா?

தென் சென்னை திராவிடர் கழக இளைஞரணி கூட்டத்தை நாங்கள் கூட்டி கொள்கை ரீதியான விளக்கம் கேட்டு தீர்மானம் நிறைவேற்றிய போது தலைமையில் இருக்கிறவர்கள் என்ன சொன்னார்கள்? "பொதுச்செயலாளர் வந்தவுடன் நேரில் கேட்கலாம், ஏன் கமிட்டியைக் கூட்டிக் கேட்கவேண்டும்'' என்று கேட்டார்கள். இப்போது பொதுச்செயலாளர் கூட்டிய அவர் தலைமைதாங்கிய கமிட்டியில் விளக்கம் கேட்ட தோழருக்கு என்ன கதி ஏற்பட்டிருக்கிறது? எனவேதான் கேட்கிறோம், திராவிடர் கழகம் லட்சியத்துக்காக இருக்கிறதா? வீரமணி என்ற தனி மனிதருக்காக இருக்கிறதா?

7. சென்னையில் நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் பேசிய பொதுச்செயலாளர், கொள்கை வேறு, அணுகுமுறை வேறு, என்று கூறியிருக்கிறார் உண்மைதான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

கொள்கை மாறாதது.

அணுமுறை மாறக்கூடியது.

ஆனால் மாறக்கூடிய அணுகுமுறைக்கூட கொள்கையின் அடிப்படையில் தான் தீர்மானிக்கப்பட வேண்டும். ஜெயலலிதாவை ஆதரிப்பது

ஒரு அணுகுமுறையே தவிர கொள்கை அல்ல என்கிறார் பொதுச் செயலாளர்.

கொள்கைக்கு மாறான ஒரு அணுகுமுறைதான் பெரியார் அணுகுமுறையா என்று கேட்கிறோம்.

அதே நிகழ்ச்சியில் பேசிய பொதுச்செயலாளர் "1938 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஆதரித்த பெரியார், 1965ஆம் ஆண்டு நடந்த போராட்டத்தை ஆதரிக்கவில்லையே" என்று பேசியிருக்கிறார், உண்மைதான். 1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு கிளர்ச்சி பார்ப்பனர்களின் தூண்டுதலால் நடந்த காலித்தனம் என்பதுதான் தந்தை பெரியார் கருத்து இப்போது 1965ஆம் ஆண்டு கிளர்ச்சியில் பெரியாருக்கு உடன்பாடு இல்லை என்று கூறும் பொதுச்செயலாளர் சென்னை பெரியார் திடலில் இந்தி எதிர்ப்பு மாநாட்டைக் கூட்டி 1965ஆம் ஆண்டு போராட்டத்திலே ஈடுபட்ட (சசிகலா) நடராசனுக்கும், ஏனையோருக்கும் பெரியார் விருது வழங்கி சிறப்பித்தாரே, அது பெரியார் கொள்கைக்கு எதிரான நடவடிக்கை அல்லவா?நடராஜனைப் பெருமைப்படுத்து வதற்காகவே அவரது ஆலோசனை பெயரில் பொதுச்செயலாளர் கூட்டிய மாநாடு அது; நடராஜன் தனக்கு நெருக்கமானவர் என்பதற்காக பெரியார் ஆதரிக்காத எதிர்ப்பு தெரிவித்த ஒரு போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு திராவிடர் கழகம் சார்பில் மாநாடு கூட்டி பெரியார் விருது வழங்கியது பெரியாருக்கு செய்யப்படும் துரோகம் அல்லவா? எனவேதான் கேட்கிறோம், **திராவிடர் கழகம் லட்சியத்துக்காக இருக்கிறதா? வீரமணி என்ற தனி மனிதருக்காக இருக்கிறதா?**

8. சென்னை கலந்துரையாடல் கூட்டத்திலும் தமிழகம் முழுவதும் நடக்கும் கலந்துரையாடல் கூட்டங்களிலும் இன்றைக்கு தலைமைக்கு ''விசுவாசியாகி'' பேச்சாளராகக் கிளம்பியிருக்கிறவர் - சேலம் அருள்மொழி.

கடந்த 5 ஆண்டுகாலமாக தி.மு.க. தலைமையுடன் நெருக்கமாக இருப்பவர் அருள்மொழி.

கலைஞருக்கும், நமக்கும் கடுமையான கொள்கை மோதல் நடந்து கொண்டிருந்த காலங்களில் நாங்கள் கழகப் பேச்சாளர்களை அழைத்து தென்சென்னை முழுவதும் பட்டி மன்றங்களையும், வழக்காடு மன்றங்களையும் நடத்தி கலைஞரின் கொள்கை முரண்பாடுகளை வீதி வீதியாக அம்பலப்படுத்தினோம். அந்த காலகட்டத்தில் வழக்கறிஞர் அருள்மொழி "இளங்கோ மன்றம்" என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, தனது தலைமையிலே கலைஞரை அழைத்துப் பேச வைத்தவர் அவர். இப்போது தலைமையின் "விசுவாசி" எங்களுக்கு தரப்படும் பட்டமோ தி.மு.கவுக்கு விலை போய்விட்டோம் என்று!!

பொதுச்செயலாளரின் உதவியாளராக இருந்த சிங். குணசேகரன், பொதுச் செயலாளரிடமிருந்து விலகிய பின் அவர் நேராக சேர்ந்த இடம் "அண்ணா அறிவாலயம்". முரசொலியில் வேலை பார்த்து பிறகு கலைஞருக்கு உதவியாளராக மாறியவர்; இப்போது அவர்தான் பொதுச்செயலாளருக்கு பின்நிற்கும் உதவியாளர். இவர்கள் எல்லாம் தலைமையின் விசுவாசி, நாங்கள் எல்லாம் தி.மு.கவுக்கு விலை போய்விட்டவர்களா? பொதுச்செயலாளருக்கு தனிப்பட்ட முறையில் நெருக்கமாக இருப்பதுதான் கட்சிக் கட்டுப்பாடா? கடந்த காலங்களில் எவ்வளவு துரோகத்தையும் செய்துவிட்டு கடைசியில் பொதுச் செயலாளருக்கு விசுவாசியாக மாறிவிட்டால் "பாவமனிப்புகள்" கிடைத்துவிடுமா?

எனவேதான் கேட்கிறோம், திராவிடர் கழகம் லட்சியத்துக்காக இருக்கிறதா? வீரமணி என்ற தனிமனிதருக்காக இருக்கிறதா?

9. சென்னை கூட்டத்தில் பேசிய அருள்மொழி தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. எதுவானாலும் பெரியார் கொள்கைக்கு முன் எந்தக் கட்சிதான் கொள்கையில் நிற்க முடியும்? என்றும் இவர்களுக்குள் என்ன வேறுபாடு இருக்கிறது என்றும் கேட்டார். இவைகள் எல்லாமே கொள்கை விட்ட கட்சிகள்தானே என்கிறார். உண்மைதான் - ஆனாலும் ஒவ்வொன்றுக்கும் கொள்கையை விட்டதில் கூட வித்தியாசமும், வேறுபாடும் இருக்கிறதே. நாம் கேட்பது எல்லாம் - இந்தத் திராவிடக்கட்சிகள் எல்லாம் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டு விட்டன என்பதற்காக பெரியார் இயக்கமும் கொள்கையை விட்டுவிடலாம் என்று நியாயப்படுத்தலாமா?

அவர்களிடம் என்ன கொள்கை இருக்கிறது; எனவே நமக்கும் கொள்கை வேண்டாம் என்பது பித்தலாட்டமான வாதம் அல்லவா?

10. சேலம் அருள்மொழியும், பொதுச்செயலாளருக்கு துதிபாடும் தோழர்களும் ஒரு கருத்தை மீண்டும் மீண்டும் கூறுகிறார்கள். அதாவது-பொதுச்செயலாளர் எடுக்கும் முடிவுகள் - இப்போது நமக்குப் புரியாதாம் காலம் செல்லச் செல்லத்தான் அது புரியுமாம்! பகுத்தறிவு இயக்கத்தில் உள்ளவர்கள் இப்படிப் பேசலாமா? எந்த ஒரு முடிவுக்கும் காரண காரியங்கள் இல்லாமலா இருக்க முடியும்? அவைகளை விளக்கப்படுத்தி தெளிவுபடுத்துவதுதானே பகுத்தறிவு இயக்கத்தின் அணுகுமுறையாக இருக்க முடியும்? அதைப் புரிந்து கொள்ளும் திறன் பெரியார் தொண்டர்களுக்கு இருக்காதா?

"இவர் முக்காலத்தையும் உணர்ந்த மகான். எதிர்காலம், கடந்த காலம் எல்லாம் இவருக்குத்தான் தெரியும்; நீங்கள் ஞானத்தை அடையும் காலத்தில்தான் அது உங்களுக்குப் புரியும்" என்று பக்தர்களிடம் சாமியார்கள் பிரச்சாரம் செய்வதுபோல் ஒரு பகுத்தறிவு இயக்கத்திலும் பிரச்சாரம் நடக்கலாமா? பொதுச்செயலாளர் எல்லா காலத்தையும்

உணர்ந்து முடிவெடுக்கக்கூடிய சக்தி படைத்தவர் என்பது உண்மை யானால் இந்தத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. படுதோல்வியைத் தழுவப்போகிறது, என்று தமிழ் நாட்டில் உள்ள சாதாரண குடிமகனுக்குக் கூட தெரிந்த உண்மை - பொதுச்செயலாளருக்கு எப்படி தெரியாமல் போனது? தோல்வி அடையப்போகும் கட்சிக்கு-கொள்கையைப் பலி கடாவாக்கி- முட்டுக்கொடுக்கப்போய் - இன்று கொள்கை இழந்தவர் களாக மக்கள் மன்றத்தில் அவமானப்பட்டு நிற்கும் நிலையை உருவாக் கியதுதான் "முக்காலத்தையும்" உணர்ந்து எடுக்கும் முடிவா?

11. சென்னைக் கலந்துரையாடல் கூட்டத்தில் முதுகெலும்போடு பேசியவர் உண்டு என்றால் அது ஆனூர் ஜெகதீசன் அவர்கள் தான்.

"தலைமையில் உள்ள நாம் செய்த தவறுதான் இவை எல்லா வற்றுக்குமே காரணம். பொதுச்செயலாளர் அமெரிக்கா போவதற்கு முன்பே அ.இ.அ.தி.மு.கவை ஆதரிப்பது என்று முடிவெடுத்துவிட்டார். பிறகு எங்களிடம் ஏன் கருத்து கேட்க வேண்டும்? எங்கள் மீது நம்பிக்கை இல்லை என்பதால்தானே! இப்போது பாலகுரு தவறு செய்து விட்டதாக இங்கே பேசுகிறீர்களே, உங்கள் உள்ளத்தைத் தொட்டுப் பாருங்கள். நீங்கள் எல்லாம் விமர்சிக்கவில்லையா? எல்லோரும்தான் விமர்சித்தீர்கள்; பலிகடாவானது பாலகுருவும், அவரது தோழர்களும்; அதுதானே உண்மை! யாரோ பின்னாலிருந்து தூண்டிவிடுவதாக பொதுச் செயலாளர் கூறிக்கொண்டிருக்கிறார். யார் தூண்டிவிடுவது என்று திட்ட வட்டமாகக் கூறுங்கள். ஏன் ஒளிவு மறைவு? - என்று ஆணித்தரமாகக் கேட்டார் ஆனூரார். அவரது நெஞ்சுரத்தையும், நேர்மையையும் பாராட்டுகிறோம். அந்த உணர்வுதான் ஒவ்வொரு பெரியாரிஸ்டுக்கும் இன்றைய தேவை.

12. கடைசியாக ஒன்றைக்கூறி முடிக்கிறோம். சென்னை கலந்துரையாடல் கூட்டத்தில் பொதுச்செயலாளர் முன்னிலையில் பேசிய இளைஞரணிச் செயலாளர் ஒரத்தநாடு குணசேகரன், "பொதுச்செயலாளரை விமர்சிக்கும் எவனாக இருந்தாலும் அவனை நாங்கள் கொலை செய்வோம். நாங்கள் அடியாட்கள் மட்டும் அல்ல, கொலையாளிகளாகவே மாறுவோம்" என்று பேசியிருக் கிறார்.

பொதுச்செயலாரும் இந்தக் கருத்துக்கு மறுப்பு ஏதும் தெரிவிக்க வில்லை.

எனவே நானோ, கலைச்செல்வனோ, பத்ரியோ அல்லது எங்கள் தோழர்களோ எந்த நேரத்திலும் கொலை செய்யப்படலாம்! நாங்கள் அந்த சாவை மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். பெரியார் லட்சியத்தைக் காப்பாற்றுவதற்காக எங்களது உயிர் போகிறது என்றால் அதைவிட பெருமைக்குரிய

மரணம் வேறு இருக்க முடியாது. எங்கள் பிணம் போன பிறகாவது நீங்கள் - பெரியார் தொண்டர்கள் லட்சியத்தை விடாமல் சுயநல சந்தர்ப்பவாத சக்திகளிடமிருந்து, லட்சியத்தைக்காக்க வேண்டும் என்பதே எங்களின் மரணசாசனம்.

கழகத் தோழர்களே! நாங்கள் எழுப்பியுள்ள வாதங்களை உங்கள் உள்ளத்தைத் திறந்து வைத்து சிந்தியுங்கள்.

இப்போது பெரியார் கொள்கைக்கு எதிரான ஒரு போராட்டத்தை பொதுச்செயலாளர் வீரமணி துவக்கியிருக்கிறார்.

நீங்கள் பெரியார் கொள்கையின் பக்கம் நிற்கப்போகிறீர்களா? அல்லது பெரியார் கொள்கைக்கு துரோகம் இழைப்போர் பக்கம் நிற்கப் போகிறீர்களா?

உங்கள் உடம்பில் ஓடுவது பெரியாரின் தன்மான ரத்தம்தான் என்றால் கூனிக் குறுகாதீர்கள்; நிமிர்ந்து நில்லுங்கள். கலந்துரையாடல் கூட்டங்களுக்கு வரும் பொதுச் செயலாளரிடம் இந்தக் கேள்விகளை கேளுங்கள்.

"அய்யோ இதைவிட்டால் வேறு எங்கே போவது?" என்று உங்களுக்கு நீங்களே சமாதானம் செய்து கொண்டு பெரியார் கொள்கைக்குத் தெரிந்தோ தெரியாமலோ துரோகமிழைத்து விடாதீர்கள்.

இதுவே எங்களின் உரிமையான வேண்டுகோள்.

வணக்கம்!

✪ ✪ ✪

எல்லாமே அறிவிப்புக்கள் தான்!!

(அறிவிப்புகளையும், திட்டங்களையும் அறிவிப்பதில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்களை மிஞ்சுவதற்கு எவரும் இல்லை. ஒவ்வொரு கூட்டத்திலும், மாநாட்டிலும் அவரது கேள்வி-பதில் பகுதியிலும், புதிய புதிய அறிவிப்புகள் ஆவேசமாக வரும். அடுத்தநாள் "விடுதலையில்" தலைப்புச் செய்தியாகும். அதோடு சரி - பிறகு அந்த அறிவிப்பை மறக்கடிக்கும் வகையில் மற்றொரு அறிவிப்பு வரும். ஆனால் எந்த அறிவிப்புக்கும் செயல் வடிவம் தான் இருக்காது! இதற்கு பலநூறு உதாரணங்களை எடுத்துக் காட்டமுடியும். "விடுதலை" ஞாயிறு மலர்களில் "ஆசிரியர்

விடையளிக்கிறார்" என்ற பகுதியில் அவரால் பிரகடனப் படுத்தப் பட்டு செயல்வடிவம் பெறாத அறிவிப்புகளின் ஒரு சுருக்கமான தொகுப்பு இது).

கேள்வி: ஒரு நல்ல தலைவர் எப்படி இருக்க வேண்டும்?

பொன். முருகானந்தம், மதுரை - 625 009.

பதில்: "தன் காலத்திற்குப் பிறகு 50 ஆண்டுகள் கழித்து எப்படிப்பட்ட நிலைமைகள் என்பதை அறிந்து செயல்படுபவனே சிறந்த தலைவன்" என்றார் காண்டேகர்.

அடுத்த தேர்தலைப்பற்றி சிந்திப்பதைவிட அடுத்த தலை முறையைப் பற்றி சிந்திப்பவராக இருக்க வேண்டும்.

துன்பம் உரவரினும் துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை செய்யும் தலைவராக இருக்கவேண்டும்.

சொல்வதைச் செய்வது; செய்வதை மட்டும் சொல்வது என்பதை வாழ்க்கை நெறியாக கொண்டிருக்க வேண்டும். போதுமா?

- 1-9-91

சொன்னதை செய்தாரா? செய்வதை சொன்னாரா?

கேள்வி: பெரியார் சிந்தனைகள் கூட்டுத்தொகை நூல்வரிசையாக (Collected works) நமது கழகம் முயற்சி மேற்கொள்ளுமா? அது எவ்வளவு காலத்தில் முடியும்?

பொன். முருகானந்தம், மதுரை 625 009.

பதில்: இதுவரை 5 தொகுதிகள் (கடவுள் - 2 தொகுதிகள்; மதம் 2 தொகுதிகள்; பெண் உரிமை 1 தொகுதி வந்துள்ளன. பெண் உரிமை 2வது தொகுதி வரும் செப்படம்பரில் வரும்.

எனவே இந்த 6 தொகுதிகள் போக எஞ்சிய தொகுதிகள் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 3 வீதம் தொடர்ந்து எவ்வளவு தேவையான தலைப்புகளில் வெளிவரவேண்டுமோ அந்த அளவு தொடர்ந்து வெளிவரும்.

1-9-91

(கூட்டுத்தொகை நூல்வரிசை என்பது ஆண்டு வாரியாக எழுத்துகளையும், பேச்சுகளையும் எடுத்து வெளியிடுவதாகும்.

மார்க்ஸ், லெனின், காந்தியார், அம்பேத்கர் போன்ற தலைவர்களின் கூட்டுத்தொகை நூல்வரிசை அப்படித்தான் வந்திருக்கிறது.

13 ஆண்டுகளுக்கு முன்பே 50 பெரியாரிஸ்டுகள் திருச்சி பெரியார் மாளிகையில் 3 கோடை விடுமுறைகளில் கடுமையாக உழைத்து பெரியாரின் எழுத்துகளையும், பேச்சுகளையும் ஆண்டு வாரியாகத் தொகுத்து திரு. கி.வீரமணியிடம் ஒப்படைத்தனர். இந்த பெரியார் கருத்துக் கருவூல தொகுப்பு (Collected works) பணியைப் பாராட்டி 2-3-83 ஆம் தேதியிட்ட விடுதலையில் அறிக்கையையும் வெளியிட்டார் (இந்த அறிக்கை தனியே தரப்பட்டுள்ளது). இதுவரை அதை வெளியிட எந்த முயற்சியும் மேற்கொள்ளப் படவில்லை. களஞ்சியம் என்ற தலைப்பில் வெளிவந்துள்ளதாக திரு. வீரமணி கூறுகூது கூட்டுத்தொகை நூல்வரிசை ஆகாது. இது தலைப்புகளின் கீழ் தேர்வு செய்யப்பட்ட (selected works) கட்டுரைகள் மட்டுமே அடங்கும். இதைக்கூட திரு. வீரமணி மேற்குறிப்பிட்ட பதிலில் சொல்லியதைப் போல செய்திருந்தால் 1995 ஆம் ஆண்டுவரை குறைந்தது 15 தொகுதிகள் வெளி வந்திருக்க வேண்டும். ஆனால் 6 தொகுதிகள் மட்டுமே வந்திருக்கிறது. அதுவும் 1991ஆம் ஆண்டோடு நின்று போய்விட்டது).

கேள்வி: மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சியை ஒளிப்பேழையாக (வீடியோ கேசட்) வெளியிட்டு சாய்பாபா போன்றோரின் முகத்திரையைக் கிழித்தாலென்ன?

இர. இராசாராம், திருவெறும்பூர்.

பதில்: *நன்றி! செய்யலாம் - செய்வோம்!!*

13-10-91

கேள்வி: மத சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிறுவனங்கள், பார்ப்பனர்கள் நடத்தும் வித்யாலயாக்கள் மத சம்பந்தப் பட்ட கல்வியைப் புகுத்துவது போல நமது அறக்கட்டளை சார்பில் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் தந்தை பெரியாரியலை இனி ஒரு பாடமாக வைத்தால் என்ன?

ப. தமிழ்ச்செல்வன், லால்குடி

பதில்: *நன்றி. வரும் கல்வி ஆண்டிலிருந்து அப்படி ஒரு ஏற்பாட்டை செய்ய அதிதீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.*

22-3-92

(ஆண்டு அய்ந்தும் உருண்டோடிவிட்டது. இன்னமும் அதிதீவிரமாக சிந்திக்கிறார்கள்.)

கேள்வி: பெரியாரின் சிந்தனைகளை நுண்படம் (Micro Film) எடுக்கும் பணியை துவங்கிவிட்டீர்களா?

இர. ராசாராம், திருவெறும்பூர்.

பதில்: *இடைவெளி விட்டுவிட்டு அப்பணி நடைபெறுகிறது. 1993க்குள் முடிவுறும். அது உறுதி.*

8-11-92

(பணி நடந்தால்தானே... முடிவதற்கு)

கேள்வி: சந்திரசேகர பாவலர் எழுதிய ரா்மாயணம் பற்றிய பழைய வெளியீடுகள் வெளிவரும் என்று சொன்னீர்களே – எப்பொழுது வெளிவரும்?

பதில்: *ஆயத்தநிலை முடிந்து, அச்சுப்பணி தொடங்க வேண்டும். ஏராளமான பக்கங்கள் கொண்ட தொகுப்புகள் - விலைபற்றியும் யோசிக்கவேண்டும் என்றாலும் 94ஆம் ஆண்டு இறுதிக்குள் நிச்சயம் கிடைக்கும்.*

31-7-94

கேள்வி: ஆரியமாயை, தீ பரவட்டும், நீதிதேவன் மயக்கம், நாளும் ஏடும் போன்ற அண்ணாவின் சமுதாய விடுதலை ஏடுகளை சுயமரியாதை இயக்க வெளியீடு அல்லது விற்பனை வாயிலாகவாவது நாடெங்கும் கிடைக்கச் செய்யப்படுமா?

பதில்: *அச்சிட்டுப் பரவலாக்கும் திட்டம் இன்னமும் ஓரிரு மாதங்களில். அதுபோலவே புரட்சிக் கவிஞரின் நூல்களும் கூட உங்களுக்குக் கிடைக்கும்.*

26-3-95

(எல்லாம் அறிவிப்புதான்)

கேள்வி: பொதுத்தொண்டு செய்ய வந்துவிட்ட பிறகு புகழ், விளம்பரம், பதவி இவற்றை எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும்?

சா. துரைய்ப்பன், மேலூர், மதுரை.

பதில்: *எதிர்பார்ப்பது என்பது கூட அல்ல நண்பரே பொதுத் தொண்டே அவைதான் என்ற போக்கு அல்லவா பெருகு கின்றது?*

22-8-93

(உண்மை தான். உதாரணத்துக்கு அவரே ஒரு சாட்சி)

சொல்தான் - செயல் இல்லை!!

"நான் உங்கள் நம்பிக்கையின் அளவுக்கு ஏற்ப எனது ஆற்றலுக்கு பாடுபட முடியுமா என்று உறுதியாக சொல்ல முடியாது. ஆனால் ஒன்றைச் சொல்லிக் கொள்வேன் உங்கள் இறுதி மூச்சு நிற்கும் வரையில் எந்த கொள்கை இந்த நாட்டில் இருக்க வேண்டுமென்று விரும்பினீர்களோ, எந்த பணியை செய்ய வேண்டும் என்று என்னை ஊக்கப்படுத்தினீர்களோ...

அதற்கு எள்ளளவும் துரோகம் செய்யாத நிலையில் என் இறுதி மூச்சு அடங்கும் வரையில் தமிழ்ச்சமுதாய அடிமையாக, சொல்லடிமையாக, தமிழ்ச் சமுதாயம் எஜமான் என்ற நிலையில் நான் உண்மையான பணியாளனாகத் தொண்டாற்றுவேன் என்று மட்டும் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

(கடலூர் அய்யா பிறந்தநாள் விழாவில் 22-11-81)

கேள்வி: கேரள மக்கள் கோயிலுக்குள் சென்று வழிபடும் உரிமையை பெரியார் பெற்றுத்தந்தார். நாமும் நமது மக்களும் கோயில் கருவறைக்குள் செல்லும் போராட்டம் துவக்கம் எப்போது?

மே.அ. பொன்முகிலன், பெ.மேட்டுப்பாளையம்.

பதில்: கேரளத்தில் நடந்த வைக்கம் போராட்டம் தெருக்களில் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் - நடக்க உரிமையை பெற்றுத் தந்த போராட்டமாகும்.

கோயில் கருவறைப் போராட்டத்திற்கு பக்குவமான ஒரு கட்டத்தில் தொடங்கப்பட வேண்டும் அது பற்றி சிந்திப்போம்.

8-9-91

கேள்வி: தந்தை பெரியார் காலத்தில் பிள்ளையார் சிலை உடைப்பு, இராமன் பட எரிப்பு என்பது போன்ற போராட்டங்கள் நடத்தப்பட்டன. இப்போதெல்லாம் அத்தகைய போராட்டங்களை தாங்கள் நடத்தாது ஏன்?

வி. வேணுகோபால், காட்பாடி.

பதில்: போராட்ட வடிவங்கள் காலத்திற்கு காலம் மாறுபடும்.

பிரச்சினைகள் முன்பைவிட அதிகம். போராட்டக்காலத்தில் சிலவற்றிற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியுள்ளது. அப்படி ஒரு போராட்டம் தேவை என்ற நிலை, உந்து சக்தியானால் அது பற்றி யோசிக்கவும் இயக்கம் தயங்காது.

8-9-91

(விநாயகன் ஊர்வலம் விபரீத வடிவமெடுத்துக் கொண்டிருக்கிற போதும் இவருக்கு "உந்து சக்தி" இன்னமும் கிடைக்கவில்லையே!)

கேள்வி: அரசு போக்குவரத்து மற்றும் அரசு மருத்துவமனை, அலுவலங்களில் உள்ள கடவுளர் படம், கடவுளச்சி படத்தை அகற்ற நமது கழகம் ஏதாவது செய்ய முடியுமா?

தந்தை பெரியார் போக்குவரத்து கழகத்தில் சாமி போட்டோ வைத்து பூ போடுவது, கற்பூரம் ஏற்றுவது போன்றவற்றை தடை செய்யலாமே?

தாமோதிரன், உலகங்காத்தல்.

பதில்: அதற்கொரு போராட்டம் நடத்தினால்தான் விடிவு ஏற்படும். அதையும் நிச்சயம் செய்வோம்! அரசு, அய்யா பெயரில் உள்ள பேருந்திலாவது அதனை செய்ய வேண்டும் - குறைந்தபட்சம்.

10-11-91

கேள்வி: அண்ணாசாலை எனப் பெயர்மாற்றம் பெற்று பல ஆண்டுகளாகியும், அண்ணா சாலை என்ற சொல் நடைமுறைப் பழக்கத்திற்கு வந்துவிட்ட பின்னும் இன்றும் பார்ப்பனப் பத்திரிகைகள் 'மவுண்ட்ரோடு' என்ற சொல்லையே பயன்படுத்துவது ஏன்?

இராசாராம், திருவெறும்பூர்.

பதில்: பார்ப்பனத் திமிருக்கு நல்ல சான்று - இது பற்றி அரசுக்கு MGR முதல்வராக இருந்தபோது நாம் கடிதம் எழுதி அவரிடமிருந்தும் "ஆவண செய்யப்படும்" என்று கடிதம் வந்து பல ஆண்டுகள் ஆகின்றன. இதற்கு ஒரு அறப்போர் தேவை போலும்.

1.12.91

(பதில் வந்து பல ஆண்டுகளாகிறது... அறப்போரும் துவங்கவில்லை - பார்ப்பனத் திமிரும் அடங்கவில்லை)

கேள்வி: தமிழ்நாட்டில் கேபிள் டி.வி. என்ற முறை பரவியுள்ளது. இதன் காரணமாக நாள்தோறும் 2 திரைப்படங்கள். பிள்ளைகளோடு உட்கார்ந்து பார்க்க முடியாத அளவுக்கு படுமோசம். இந்தக் கலாச்சாரத்தைப் பரவவிட்டால் நாடு குட்டிச் சுவராக ஆகிவிடும் போலிருக்கிறதே!

கோ. அரங்கநாதன், சென்னை-20

பதில்: என்ன செய்வது? சட்டம் அதற்கு துணை போகிறது. எனவே சமூகம் விலை பேசப்படுகிறது! விழிப்புணர்வு இயக்கம் தேவை!

24-5-92

(இயக்கத்தைத் தான் காணோம்!)

கேள்வி: சாதிப் பெயர்களில் தொடர்ந்து திரைப்படங்கள் வருகிறதே? (உ.ம்.) சின்னக்கவுண்டர், பெரியதேவர்.

-தி. ஆறுமுகம், திருவாரூர்

பதில்: ஆம் - வெறுக்கத்தகுந்த போக்கு. இதனைத் தடுத்து நிறுத்த கிளர்ச்சிகள் வெடிக்க வேண்டும் - வெடிக்கும்!

16-8-92

(வெடிக்கும் - சாதிப் படங்களும், தலைவர்களையே
சாதியத் தலைவர்களாகப் பார்க்கும் மனோபாவமும்
வளர்ந்து உச்சந்தலையிலேறிய பிறகும்
"வெடிக்க வேண்டும் - வெடிக்கும்!)

கேள்வி: தொலைக்காட்சி 2ம் அலைவரிசையில் சினிமா ஆபாசம் கலாச்சாரம் ஒழிந்து இந்தி ஆதிக்கம் தலை எடுத்து விட்டதே?

-மு. பன்னீர்செல்வம், நாகை

பதில்: இதை எதிர்த்து ஒரு அதிரடிப் புரட்சி, புயல், பூகம்பம் கிளம்பும் நாள் தொலைவில் இல்லை.

5-12-93

(புரட்சி-புயல்-பூகம்பம்... நடக்கிற காரியமா?)

கேள்வி: ஆரிய மயமாகிக்கிடக்கும் மனிதப்பெயர்கள் - சமஸ்கிருதப் பெயர்கள் தமிழ்ப்படுத்த தீவிரமாக இயக்கம் நடத்தப் படுமா?

-வீ. செம்மல், பூம்புகார்

பதில்: நிச்சயம் செய்யவேண்டும், 1994 முதல் அதற்கென ஒரு தனி இயக்கம் (campaign) நடத்தப்படுவது தேவையே.

9-1-94

(96ம் ஆண்டும் பிறந்துவிட்டதே!)

கேள்வி: சட்டவிரோதமாக குழந்தைத் திருமணம் செய்யும் தீட்சிதர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்காதது ஏன்?

-இரா. இராசாராம், திருவெறும்பூர்.

பதில்: இதற்காக பெண்ணுரிமை இயக்கங்களும், நாமும் பலமுறை கிளர்ச்சி, கண்டன அறிக்கைகள் தந்துள்ளோம். என்றாலும் "அவாள்" முன் சட்டம் "ஊமையாகி" விடுகிறது. **இடைவிடாத கிளர்ச்சிகள் வெடிப்பதன்** மூலமே இதனைத் தடுக்க முடியும்!

13-3-94

கேள்வி: தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை அரசு ஏற்றுக் கொண்ட பின்பும், தமிழ்த் திரைப்படத் துறையினர் புறக்கனித்து வருகின்றனரே?

-இர. பெரியகருப்பன், சூளிக்கரை.

பதில்: இதை எதிர்த்து **பெரும் போராட்டத்தையே** நாம் துவக்க வேண்டும். நம் அரசுமட்டுமல்ல - சிங்கப்பூர், மலேசிய அரசுகள் கூட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்று நடைமுறைப்படுத்திவிட்ட நிலையில் இங்குள்ள சிலரின் "சண்டித்தனத்திற்கு" சரியான வழி காண வேண்டும்.

1-5-94

கேள்வி: இராமர் பட எரிப்பு – பிள்ளையார் சிலை உடைப்பு போன்ற புராண எதிர்ப்புப் போராட்டங்களில் கழகம் மீண்டும் ஈடுபடுமா?

-தி. அன்பழகன், திருக்களாச்சேரி.

பதில்: "கொக்கொக்கக் கூம்பு பருவத்தே" என்பதுபோல உரிய காலங்களில் உரிய - முறை **போராட்டங்களில்** கழகம் ஈடுபடும்.

1-5-94

கேள்வி: NCBH நிறுவனங்கள் போல தமிழ்நாடெங்கும் முக்கிய நகரங்களில் பெரியார் நூல் விற்பனை நிலையங்கள் துவக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

-ஆ. பன்னீர் செல்வம், திருப்பூர்.

பதில்: ஆயத்தமாகிவருகிறோம். 1994 டிச.24 முதல் படிப்படியாக செயலுக்கு வரும்.

8-5-94

(ஆயத்தமாவது - இன்னும் தொடர்கிறது போலும்)

கேள்வி: தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக இருந்தும், படிப்புச் சான்றிதழ் கூட தமிழில் கொடுப்பதில்லையே ஏன்?

-இரா. ராசாராம், திருவெறும்பூர்.

பதில்: இதற்கு ஒரு பெரும் அறப்போர் கட்சி சார்பின்றி நடை பெற்றாகவேண்டும். தமிழக ஆட்சியாளர்கள் மெத்தனம் காட்டக்கூடாது.

4-9-94

(அறப்போர் கூட தேவையில்லை இப்போதைய அரசே தனித்துறை அமைச்சர் உருவாக்கியபோது குறைந்தபட்சம் அமைதியாக இருந்து "தேவை" இல்லை என்று எதிர்க்காமலாவது இருக்கலாமே.)

கேள்வி: புதிய தமிழக அமைச்சரவையில் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை என்று புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது குறித்து தங்களின் கருத்தென்ன?

- மன்னை சித்து

பதில்: முழு ஆட்சியே அதற்காக பாடுபடவேண்டும். முன்பு பகுத்தறிவுக் கொள்கை பரப்பும் ஒரு அமைச்சர் தேவை என்று கேட்டபொழுது ஆட்சியே அதைத்தான் செய்ய உள்ளது என்று கூறப்பட்டது. எனவே தனி ஒரு அமைச்சர் தேவை இல்லை. ஒவ்வொரு துறையிலும் தமிழ்வளர்ச்சி, பண்பாட்டுத்திட்டங்கள் இருப்பதே சாலச்சிறந்தது.

26-5-96

கேள்வி: சில மாநிலங்களில் அஞ்சலட்டைகள், உள்நாட்டு மடல் போன்றவை அவரவர் நாட்டு மொழியிலேயே காணப்படுகிறது. தமிழ்நாட்டிலும் அவ்வாறு இடம்பெறப் போராட்டம் நடத்தப்படுமா?

-மே. சிவகுமார், மீமிசல்.

பதில்: உறுதியாக நடத்துவோம் - இதுபற்றி மத்திய அரசுக்கே எழுதுவோம் - மாதிரி அனுப்புங்கள்!

11-9-94

கேள்வி: காவல் நிலைய வளாகத்திற்குள்ளேயே கோவில்கள் கட்டுகின்றனரே?

-பா. வளர்மதி, செங்கற்பட்டு.

பதில்: உடனடியாக அதனை எதிர்த்து மறியல் அறப்போர் மற்றும் நீதிமன்றத் தடைகள் பெற்றாக வேண்டும். அனைத்துக் கட்சிப் பகுத்தறிவாளர்களும் ஒத்துழைக்க முன்வர வேண்டும்.

25-9-94

கேள்வி: புகைவண்டி நிலையங்களில் தினம் ஒரு வார்த்தை என்று தலைப்பிட்டு கரும்பலகையில் நாள்தோறும் ஒரு இந்திச் சொல்லை எழுதிப் போட்டு வருகின்றார்களே – கவனித்தீர்களா?

-முகிலன், சிதம்பரம்.

பதில்: இதை அழிக்கும் போராட்டத்தை அடுத்து திராவிடர் கழகம் துவக்குவது உறுதி. நாம் தொடங்கினால் மற்றவர் தானே முன்னே வருவர்.

2-10-94

கேள்வி: திரைப்படங்கள் பெயர்களில் எழுத்து சீர்திருத்தத்தை கடை பிடிப்பதில்லையே ஏன்?

-ம. சிவகுமார், மீமிசல்.

பதில்: அதற்கும் நாம் ஒரு போராட்டம் தொடங்கியாக வேண்டும் போலும்! அந்தோ தமிழ்நாடே!!

9-10-94

கேள்வி: மத்திய அரசு சில துறைகளை தனியார், அன்னிய மயமாக்கும் பொருட்டு மாநில உரிமைகள் பறிபோகின்றனவே?

-த. இளவரசன், தூத்துக்குடி.

பதில்: மாநில உரிமைகள் பற்றி மிகவும் கவலைப்பட வேண்டிய செய்திகள் நடப்புகள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் வளர்ந்த வண்ணமே உள்ளது. எனவே ஒரு பொது அரசியல் சார்பற்ற இயக்கம், விழிப்புணர்வு அவசரத் தேவை.

21-5-95

தயவுதாட்சன்யமற்ற கண்டிப்பு?

கேள்வி: பார்ப்பனர் எந்த வகையிலும் திராவிடர்கட்கு எதிரானவர் – அப்படியிருக்கும்போது செயலலிதா தலைமையில் உள்ள கட்சியை ஆதரிக்கலாமா?

-தி. வெங்கடாசலம், கோதைவேரி.

பதில்: உங்கள் கேள்வியே தவறு - நீங்கள் குறிப்பிடுவது போன்று அவரது கட்சியை ஆதரிக்கவில்லை. முதல்வராக இருந்து ஆட்சியில் உள்ள நிலையில் ஆதரிக்க வேண்டிய செயல்பாடுகளை ஆதரிக்கிறோம் கண்டிக்க வேண்டியவை களை தயவுதாட்சன்யம் இன்றி கண்டிக்கிறோம். இதுதான் நமது அணுகுமுறை. 1952இல் ஆச்சாரியார் ஆட்சியின்போது கழகமும், அய்யாவும் எப்படி நடந்தனர் என்ற பழைய வரலாற்றைப் படியுங்கள்.

3-11-91

கேள்வி: முதல்வர் ஜெயலலிதா நீண்ட இடைவெளிக்குப் பிறகு காஞ்சி சங்கரமடத்திற்கு சென்றதற்கு முக்கியத்துவம் உண்டா?

-வி.சி. வில்வம், தேவகோட்டை.

பதில்: 3 ஆண்டுகளாக தொடர்ந்து காஞ்சி மடம் இதில் வெற்றி பெற்றுள்ளது போலும். காஞ்சி மடத்துக்கு அடிக்கொரு தரம் செல்லும் பிரதமர் நரசிம்மராவிடம்தான் தமிழ்நாடு 69% இடஒதுக்கீட்டுச் சட்டம் ஒப்புதல் கேட்டோம். அதே போன்று குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மாவிடம் கையெழுத்து ஒப்புதல் கேட்டோம். பாபர் மசூதியை இடித்ததை நியாப்படுத்தி காஞ்சி மடத்துக்குச் சென்ற அத்வானியிடம் அரசியல் சட்டத் திருத்தம் கேட்டோம் - அதையும் மற்றதையும் முடிச்சுப் போடவேண்டாம்!

11-9-94

காஞ்சி சங்கராச்சாரியின் 60வது ஆண்டு பிறந்த நாள் விழாவில்....





ஜெயலலிதா சங்கராச்சாரி காலில் விழுந்ததைக் கண்டிக்காமல்
ஜெயலலிதாவிடமிருந்து "பெரியார் விருது" பெற்று
வாழ்நாள் முழுதும் உங்களுக்கு துரோகம் செய்ய மாட்டேன்
என்று பிரகடனப்படுத்திய காட்சி.

ஜெயலலிதாவுக்கு சங்கராச்சாரியின் பாராட்டு!!

தேனாம்பேட்டை காமராஜ் மைதானத்தில் கிராமக் கோயில் பூஜாரிகள் இரண்டாவது மாநில மாநாட்டில் ஜெயேந்திரர் கலந்து கொண்டு ஆசி வழங்கி அருளுரை வழங்கினார்.

அப்போது அவர் குறிப்பிடுகையில், ஏழு எட்டாண்டுகளாக கிராம தேவதை கோயில்கள் பூட்டப்பட்டு பூஜை நடைபெறாமல் இருந்தன. இப்போது மூன்று நான்கு ஆண்டுகளாக கிராம சக்திக்கு உற்சவம், பூஜை செய்யத் துவங்கியுள்ளனர். முதல்வர் ஜெயலலிதா ஆட்சி காலத்தில் இருந்து இந்த தைரியம் வந்துள்ளது. கிராம மக்களிடத்தில் கடவுள் நம்பிக்கை வளர்ந்துள்ளது. இதற்காக பாராட்டி மகிழ்கிறோம்.

எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு கும்பாபிஷேகங்கள் அதிக அளவில் நடைபெற்றுள்ளன. பலவற்றில் நானும் கலந்து கொண்டுள்ளேன் என்றார் ஜெயேந்திரர்.

10.3.96, பக்.2, தினமணி

சங்கராச்சாரி பாராட்டு: ஜெயலலிதா பூரிப்பு!!

தேனாம்பேட்டை காமராஜ் மைதானத்தில் கிராமக் கோயில் பூஜாரிகள் இரண்டாவது மாநில மாநாட்டில் ஜெயலலிதா பேசியதாவது:

இந்த சீரிய விழாவில், நல்ல இறை உணர்வையும், சமுதாய நல்லுணர்வையும் ஒன்றுபடுத்தி, ஒரு புதிய ஆன்மீக உணர்விற்கு வழிவகுத்த காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், கலந்து கொண்டிருப்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது. காஞ்சிப் பெரியவருக்கும், பாலப் பெரியவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

காஞ்சிப் பெரியவர் அருளாசி வழங்கும்போது, இதுவரை இந்த **சிறியவள்** ஆட்சியில் செய்த பணிகளைப் பாராட்டினார்கள். இதை என் வாழ்வில் நான் பெற்ற பெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

10.3.96, பக்.7, தினமலர்

"பார்ப்பனர் எதிர்ப்பு பெரியார் கொள்கை அல்ல?"

கேள்வி: வடவர் எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, பார்ப்பனர் எதிர்ப்பு, கடவுள் மறுப்பு இவற்றை திராவிட இயக்கத்தின் முக்கிய கொள்கைகள் என்று சொல்லலாம். இந்த நான்குமே இன்றைய சமுகத்தில் நடைமுறையில் மழுங்கி தேய்ந்து போய்விட்டதா?

வீரமணி பதில் : ஒரு திருத்தம் நான் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த நான்கும் பெரியாருடைய கொள்கைகள் அல்ல. பெரியாருடைய லட்சியம் சுயமரியாதை, பகுத்தறிவு, மனித நேயம், சமத்துவம். நீங்கள் சொன்ன நான்கும் அந்த லட்சியங்களை அடைய ஒவ்வொரு காலகட்டத்திலும் பெரியார் கையாண்ட வழிமுறைகள்.

விமானத்தில் போவது, பஸ்ஸில் போவது, நடந்து போவது மாதிரி, போர் முறைகளில் முப்படை இருக்கிறது. அந்த மாதிரி போர் முறைகள் இந்த போர் முறைகள். இந்த முறைகளைப் பொறுத்தவரையில் அந்த லட்சியங்களுக்கு ஒரு கால கட்டத்தில் முக்கியத்துவம் வரும், ஒரு காலகட்டத்தில் முக்கியத்துவம் குறையும்.

(லட்சியம் என்பது இலக்கு; அந்த இலக்கை அடைவதற்குத்தான் கொள்கைகள் ஒரே லட்சியத்தைக் கொண்ட பல கட்சிகள் நாட்டிலே உண்டு. ஆனால் அதை அடைவதற்கான கொள்கைகள் வேறுபட்டவை என்பதால்தான் வெவ்வேறு கட்சிகளும், கழகங்களும் நாட்டிலே இருக்கின்றன. அந்தக் கொள்கையின் அடிப்படையில் தான், ஒவ்வொருவரும் ஒரு இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொள்கிறார்கள். லட்சியமும், கொள்கைகளும் மாறாதவை. கொள்கையை கொண்டு செல்லக்கூடிய அணுகுமுறைக்ள் தான் மாறக்கூடியது. ஆனால் திரு.வீரமணியோ பெரியார் கொள்கைகளான பார்ப்பனர் எதிர்ப்பு, கடவுள்மறுப்பு போன்றவற்றை அவரது கொள்கைகளே அல்ல என்று "தினமணி" ஏட்டுக்கு அளித்த பேட்டியில் கூறி - அதைப் பதிவும் செய்துவிட்டார்)

(ஆதாரம்: 23-9-94 தினமணி ஏட்டில் அன்றைய ஆசிரியர் மாலனுக்கு கி.வீரமணி அளித்த பேட்டி)

இது என்ன குழப்பம்?

69 சதவித இடஒதுக்கீடு பிரச்னையில் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா - உச்சநீதிமன்றத்தில் சரியாக வாதாடத் தவறிவிட்டார் என்பது ஒரு குற்றச்சாட்டு. இதுபற்றி "தமிழன் எக்ஸ்பிரஸ்" ஒரு பேட்டி கண்டபோது - கி.வீரமணி அளித்த பதில் இது.

'தமிழக மருத்துவக் கல்லூரிகளில் 50 சதவிகித இட ஒதுக்கீடுதான் அளிக்கவேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு கோரி சுப்ரீம் கோர்ட்டிலேயே தமிழக அரசு அப்பீல் போட முடியாது... சுப்ரீம் கோர்ட்டை மறுபரிசீலனை செய்யவைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று சொல்ல முடியாது.'

—"தமிழன் எக்ஸ்பிரஸ்" மார்ச் 6, 1996

ஜெயலலிதா அரசு தவறுசெய்துவிட்டது என்ற உண்மையைக் கூற விரும்பாத காரணத்தால், அவருக்கு ஏற்பட்டுள்ள குழப்பத்தை இந்தப் பேட்டி உணர்த்துகிறது.

அழிந்துவரும் "குடி அரசு"

இயக்க வரலாற்றில் "குடிஅரசு" இதழ் மிகவும் அடிப்படையானது - தந்தை பெரியார் நடத்திய "குடிஅரசு" "புரட்சி" இதழ்கள் தான் இயக்க வரலாற்றுக்கும் தந்தை பெரியார் கருத்துகளுக்கும் உள்ள ஒரே அடிப்படை ஆதாரம். பெரியார் நூலக ஆய்வகத்தில் பல "குடி அரசு" இதழ்கள் இல்லை; இருக்கும் இதழ்களும் சிதைந்து போய்விட்டன. பக்கம் பக்கமாக உதிர்ந்து கொண்டிருக்கும் அந்த வரலாற்று ஆவணங்களை "மைக்ரோ மிலிம்" எடுத்து பாதுகாக்க வேண்டியது திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கவலைப்படவே இல்லை. நாளந்தா பல்கலைக்கழகத்தில் புத்தரின் அறிவுக் கருத்துகளை பார்ப்பனர்கள் திட்டமிட்டு அழித்தனர். சமணர் இலக்கியங்களை பார்ப்பனியம் தீயில் எரித்தது. ஆனால் பெரியாரின் "குடிஅரசு" இதழ்கள் இயற்கையான அழிவுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது - தி.க. தலைமையால்!

வட்டிக்கடைத் திறப்பதிலும், சீட்டு நிறுவனங்களை நடத்துவதிலும் காட்டும் ஆர்வம், பெரியார் நூல்களைக் காப்பாற்றுவதில் இல்லாமல் போய்விட்டது கொடுமையிலும் கொடுமை!!

பெரியார் பிறந்தநாள் மலரில் வெளியான "அறிவிப்புகள்"

(ஆண்டுதோறும் வெளியிடப்படும் "விடுதலை" தந்தை பெரியார் பிறந்தநாள் மலரில் ஒவ்வொரு ஆண்டுக்கும் செயல் திட்டங்களை அறிவிப்பது திரு. வீரமணி அவர்களின் வழக்கம். ஆனால் அறிவிப்புகள் எதுவும் வழக்கம்போல் செயலாக்கப்படுவது இல்லை. அவைகளைப் பட்டியல் போட்டால் பக்கங்கள் நீளும்.... உதாரணத்திற்கு சில...)

1. அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டமான "மனித உரிமை சட்டத்தினை" எழுந்து நடமாடச் செய்வோம்!

2. கிறித்துவ மிஷினரிப் பிரச்சார பாணியில் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

3. '**பறக்கும் பகுத்தறிவுப் பிரச்சாரப்படை**' உருவாக்கப்படும். வரும் ஆண்டில் சாதி, மதம், மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு, பெண் விடுதலை மாநாடுகள் நடத்தப்படும்.

4. '**பிரச்சார பெண்கள் பெரும்படை**' மூலம் பெண் விடுதலை கருத்துக்கள் பரப்பியாக வேண்டும்.

5. தந்தை பெரியார் பற்றிய திரைப்படம் ஒவ்வொரு கிராமத்திலும் ஆண்டு முழுவதும் காட்டப்படும்.

6. இளைஞர்கள் "அடிமை" வேலை தேடிச்செல்லும் போக்கினை மாற்றிட வேண்டும்.

   "சுதந்திர வேலை" வாய்ப்புகள் பற்றி அறிவுரை கூறி நடத்திட குழு:

   1. திரு. பண்டரிநாதன் I.A.S. கன்வீனர்
   2. திரு. வே. பத்மநாபன், ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர்
   3. திரு. பகீரதன்

   வங்கி உதவிகளை வைத்து சிறப்பான தொழில்களை மேற்கூறிய ஆலோசனைக் குழுவின் மேற்பார்வையில் நடத்திடுவோம்.

7. தந்தை பெரியார் அவர்கள் பெயரில் "பெரியார் கூட்டுறவு நிலையம் (Periyar Industrial Co.Op) PICE "பிக்" என அழைக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

8. ஆங்கில மொழியில் பல நூல்களை குறைந்த விலையில் வெளியிடவும் முடிவு செய்துள்ளோம்!

- 1979ஆம் ஆண்டு 101வது பிறந்தநாள் மலரில்...

1. பார்ப்பனரல்லாதார் இளைஞர் சங்கம் உருவாக்கவேண்டும். *(31-7-80 விடுதலை)*

– 1980 ஆம் ஆண்டு 102வது பிறந்தநாள் மலர்.

1. அனைத்து சாதியினர் அர்ச்சகராதல் சட்டம் கொண்டுவர போராடுவோம்.
2. ''சாதி ஒழிப்பு ஆண்டு'' என 103வது பெரியார் ஆண்டு கடைபிடிக்கப்படும்.
3. (Common Civil Code) பொது சிவில் சட்டம் உருவாக்க வேண்டும்.
4. கருவறை நுழைவுப் போராட்டம் நடத்த வேண்டும்.

– 1981ஆம் ஆண்டு 103வது பிறந்தநாள் மலர்.

1. தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக கிராமங்களில் கழகப் பிரச்சாரப்பணிகள் தீவிரப்படுத்த வேண்டும்.
2. கிறித்துவ மிஷினரிகளைப் போல மருத்துவம், கல்வி மக்கள் நல்வாழ்வுப் பணிகளை பெரியார் ஆண்டு 104 முதல் தொடங்க உள்ளோம்.
3. **Seperate Economic Cell**

   தமிழ்நாட்டின் வளர்ச்சி, தமிழ் பெருமக்களது பொருளாதார நிலை உயரவும், வறுமை கோட்டிற்குள் பெரும்பாலோர் உள்ள நிலைமை மாறவும், தனியே கழகம் ஒரு ''பொருளாதார ஆய்வுப் பிரிவு'' (Seperate Economic Cell) ஒன்றினை உருவாக்கி அதில் பெரிய பொருளாதார விற்பன்னர்கள் நிர்வாக அனுபவம் பெற்ற முதியவர்கள் அறிவுரைப்படி பல செயல் திட்டங்கள் - பிரச்சாரம் முதல் ஆக்கப்பணிகள் வரை பலவற்றில் எடுத்துச் சொல்லி தமிழ்நாட்டின் வளம், தமிழகப் பெருமக்களது முன்னேற்றம் குறித்து பல செய்திகளை எடுத்து விளக்கி அவசியம் வரும்போது அவைகளை செயல்படுத்த வாதாட, போராட, கழகம் தயங்கவே தயங்காது.
4. வழிநடைப் பிரச்சாரங்கள், பகுத்தறிவுப் பிரச்சாரங்கள் பகுத்தறிவு பிரச்சார முறைகள் முதலிய பலவற்றையும் கிராமப் பகுதிகளில் ஏற்படுத்திட தீவிரமாக யோசித்து வருகிறோம்!

– 1982ஆம் ஆண்டு 104வது பிறந்தநாள் மலர்.

1. பன்னாட்டுத் தமிழர்கள் மாநாடு ஒன்றினை தமிழ்மண்ணில் 1984-1985

ஆம் நமது கழகம் முன்நின்று, நடத்தி பல்வேறு நாடுகளில் முக்கியப் பொறுப்பில் உள்ள தமிழர் தலைவர்களை, தமிழர் மாணிக்கங்களை, முத்துக்களையெல்லாம் ஒன்று திரட்டி தமிழர் பாதுகாப்புக்கும், வளர்ச்சிக்கும் பொதுத் திட்டங்களை தீட்டிட ஆக்கரீதியான வழிமுறைகளை நமது கழகம் காணுவது நம் முன்னே உள்ள பெரும்பணியாகும்.

2. தமிழர் இன உணர்வினை தமிழ்நாட்டுப் பட்டித் தொட்டிகள் எல்லாம் பரப்பி தமிழர்களை உணர்வுள்ள மக்களாக்கிட ஒரு சீரிய பெருவழிப் பிரச்சாரப் பயணத் திட்டம் ஒன்றை மேற்கொண்டு தமிழ்நாட்டில் எல்லா ஊராட்சி ஒன்றியங்கள், கிராமங்களையும் உள்ளடக்கி குமரி முதல் திருத்தனி வரை நாமே முன்னின்று ஓராண்டுக்கு முழுமையாக 1984 முதல் தொடங்கி 1985ல் முடிவடையும் வண்ணம் நடத்திடுவது நமது முக்கிய திட்டங்களில் ஒன்றாகும்.

நல்ல அருமையான இளைஞர்கள் படை அப்பணியில் பங்கேற்கும். ஒவ்வொரு நாளிலும் குறைந்தபட்சம் இரண்டு அல்லது மூன்று பஞ்சாயத்து ஒன்றியங்களில் பிரச்சாரப் பணிகள் நடைபெறும். நமது பிரச்சாரம் பரவாத கிராமமே இல்லை என்ற நிலை ஏற்படவேண்டும்.

இவ்வோராண்டுப் பிரச்சாரத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் ஒரு மாபெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திட முயலவேண்டும். இது தொடர்பான விரிவான திட்டங்களை கழகப் பொதுக்குழு டிசம்பரில் அறிவிக்கும்.

–1983 ஆம் ஆண்டு 105வது பிறந்தநாள் மலர்.

1. மறைவு நிகழ்ச்சிக்கான வழிகாட்டும் நூல் வெளியிடப்படும் ஒவ்வொரு ஆண்டும் பின்வரும் தேதிகளில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும்....

நவ-26	சாதி ஒழிப்பு வீரர்களுக்கான வீரவணக்க நாள்
தை1	தமிழர் திருநாள்
பிப் 3	மாநில உரிமைக்காப்பு நாள்
மார்ச் 16	சுயமரியாதை சுடரொளிகள் நாள்
ஏப் 14	ஒடுக்கப்பட்டோர் உரிமைக்காப்பு நாள்
மே 1	தொழிலாளர் உரிமை நாள்
ஜுன் 30	வகுப்புரிமை நாள் (முத்தையா முதலியார் மறைவு)

ஜுன் 15 கல்வி புரட்சி நாள் (காமராசர் பிறந்த நாள்)

ஜுன் 27 பகுத்தறிவு திருநாள் (திராவிடர் கழகம் தோற்றம்)

–1984 ஆம் ஆண்டு 106வது பிறந்தநாள் மலர்.

1. பிரச்சாரமானது எழுத்து, சொல், மின்னணு முறை என்று புதிய உத்திகள் பயன்படுத்தப்படும்.

2. ஒவ்வொரு இல்லத்தின் முன்பும் "பெரியார் இல்லம்" என்றும் அதற்குப் பிறகு அவரவரவர்கள் விரும்பும் பெயரை இணைத்துக் கொள்ள வேண்டும்.

3. ஒவ்வொருவர் வீட்டிலும் கழகக்கொடி பறக்கப்பட விடவேண்டும்.

4. தந்தை பெரியார் மழலைப் பள்ளிகள், தந்தை பெரியார் தொழில் நுட்பக் கூடங்கள், தொழிலகங்கள், படிப்பகங்கள், நூலகங்கள், வாசகர் வட்டங்கள் குடும்ப நல மய்யங்கள், புதுவாழ்வு மய்யங்கள், முதியோர் நல்வாழ்வு கூடங்கள் நாடு முழுவதும் ஏற்படுத்தப்படும்.

5. 1935-இல் அய்யா ருஷியா சென்றபோது, வருங்கால சமூகம் பற்றி அந்த நாட்டு (ருஷ்ய) கல்வியகத்தில் 3 பக்கத்திற்கு எழுதினார். அதை வைத்து 150 பக்கத்திற்கு "காலின்ஸ்" என்பவர் எழுதியுள்ளார். அதை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவோம்.

6. இந்தி திணிப்பு கைவிடப்படாவிடில் இந்தி சினிமாக்கள் ஓட முடியாத அளவுக்கு கிளர்ச்சி உருவாகும். (24.10.84 விடுதலை)

7. **ராமேசுவரம் மீனவர்கள் படுகொலை:**

   பாதிக்கப்பட்ட மீனவர் அல்போன்சின் 5 குழந்தைகட்கு சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் சார்பில் கல்வி வசதிக்கும் - பேசும் வழியற்ற 10 வயதுக் குழந்தை ஒன்றுக்கும் உரிய வைத்தியம் செய்யப்படும். (9-1-85 விடுதலை)

8. அய்யாவுக்கு பெண்கள் "பெரியார்" என்று பட்டம் தந்த நாளை ஒவ்வொரு ஆண்டும் "பெண்கள் விழிப்பு நாள்" எனக் கொண்டாடிடுவோம். (9-2-95 திருச்சி மத்திய நிர்வாகக்குழு தீர்மானம்)

–1985ஆம் ஆண்டு 106வது பிறந்த நாள் மலர்.

1. மூடநம்பிக்கை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, பெண்விடுதலை ஆகிய செயல்பாடுகளுக்கு கழகத் தலைமை திட்ட அறிக்கை தரும்.

2. கல்லூரி வாயில் கூட்டங்கள் நடத்தப்படும்.

3. முதியோர் ஆதரவு இல்லங்கள் (இலவச விடுதி)களை முதலில்

சென்னை, தஞ்சை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் ஏற்படுத்த திட்டமிட்டு வருகிறோம். வரும் 2 ஆண்டுகளில் துவங்கப்படும். அதில் குழந்தைகள் இல்லம், படிப்பகம், நூலகம், விதவைகள், கைவிடப் பட்ட பெண்கள் இல்லம் உள்ளிட்டவைகளை அமைக்க திட்ட மிட்டுள்ளோம். (Periyar Centre for Eradication of Illiteracy in the rural areas)

4. தில்லி வித்தல்பாய் மண்டபத்தில் பல மாநில முக்கியப் பணிகள் கூட்டம் நடந்தது. இதில் வடபுலத் தலைவர் சந்திரஜித் யாதவ், ஓம் பிரகாஷ் ஒத்துழைப்போடு அய்யாவின் நூல்கள் "இந்தியில்" வெளியிடப்படும் என்று பொதுச்செயலாளர் உறுதி அளித்தார். *(7.12.85 விடுதலை)*

–1986 ஆம் ஆண்டு 108வது பிறந்தநாள் மலர்.

1. பெரியார் மழலைப்பள்ளிகள் அமைய நிலம்உதவி, பொறுப்பு, உழைப்பு ஆகியவற்றைத் தர முன்வருவோருக்கு அனைத்து வகை உதவியினையும் கழகம் செய்யும்.

2. சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட "எழுத்தறிவிக்கும் முதியோர் கல்வி மய்யப்பணி" நமது கிராமங்களில் இவ்வாண்டு வேகமாய் பரவிட கீழ்க்காணும் அறிஞர் பெருமக்கள் தம் உழைப்போடு ஆலோசனைக் குழுவின் பணிகள் மிகவும் வேகமாக நடைபெற உள்ளன.

மத்திய அரசின் ஒப்புதலோடு இதுபோன்ற பணிகளை இவ்வறிஞர் குழுக்கள் செயல்படுத்தும்.

ஆலோசனைக்குழு

தலைவர்: ஜஸ்டிஸ் பி. வேணுகோபால் (சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி)

துணைத் தலைவர்கள்: 1. டாக்டர் நெ.து. சுந்தரவடிவேலு (சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர்) 2. எஸ்.வி. சிட்டிபாடி (அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்) 3. டி.எஸ். மாணிக்கம் (பாரதியார் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர்)

குழு உறுப்பினர்கள்: 1. கே. மோகனரங்கம் (ஓய்வு) கல்லூரி கல்வி இயக்குநர். 2. எஸ்.எஸ். சொக்கலிங்கம் (ஓய்வு) தமிழ்நாட்டு பாடநூல் நிறுவன தலைவர். 3. டி. கங்கப்பா அய்.ஏ.எஸ் (ஓய்வு) 4. ஆர். பண்டரிநாதன் அய்.ஏ.எஸ் (ஓய்வு) 5. பேரா. ஞான அய்யாசாமி (ஓய்வு) பொறியாளர்

இயக்குநர், திட்ட அலுவலர்:

1. பேரா. டாக்டர் மா. நன்னன் (ஓய்வு) தமிழ்வளர்ச்சி இயக்குநர்
2. கண்வீனர் கி.வீரமணி (செயலாளர் பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம்)

3. அச்சுத்துறையில் Photo Type Composing முறையைப் புகுத்தி

1. குழந்தைகள் ஏடுகள் 2. பெண்கள் ஏடுகள் 3. மாணவர்கள் ஏடுகள் 4. இளைஞர் ஏடுகள் 5. நூல்கள் பலவற்றை கொண்டுவர முடிவுசெய்து அதற்கான துவக்கப்பணிகள் நடைபெறுகின்றன.

4. தந்தையின் கருத்துகள் வடபுலத்திற்கும் மற்றும் அகில உலகின் பற்பல பகுதிகளுக்கும் தேவை என்பதால் "தந்தை பெரியார் பன்னாட்டு தத்துவக் கொள்கை பரப்பு மய்யம்" சார்பில் பல மொழிகளில் அய்யாவின் நூல்கள் மொழியாக்கம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. 1988 ஆம் ஆண்டு சனவரியில் அப்படிப்பட்ட மொழி பெயர்ப்பு நூல்கள் வெளிவரும்.

5. அய்யாவின் அறிவுரைகளை மிகநேர்த்தியாக வண்ண ஆப்செட்டில் அச்சிடப்பட்டு கண்ணாடிபோட்டு மாட்டும் அளவில் அடக்க விலைக்கு விற்கப்படும். இது எல்லார் வீட்டிலும் இருக்க வேண்டும்.

6. ஊர்தோறும் மகளிர் மன்றம் அமைப்போம்.

7. பெரியார் மணியம்மை வாழ்வியல் மய்யம் ஜஸ்டிஸ் திரு. வேணுகோபால் அவர்கள் தலைமையில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் இயங்கி பற்பல குடும்பங்களின் சிக்கல்கள் தீர்க்கப் படுகிறது.

–1987ஆம் ஆண்டு 109வது பிறந்தநாள் மலர்.

1. கிராமப்புற பிரச்சாரதிட்டம் தீவிரப்படுத்தப்படும் (Carry Forward this Periyar year)

2. அய்யாவின் வாழ்க்கை வரலாற்றையும், கழக முக்கிய நிகழ்ச்சிகளையும் வீடியோ படத்தொகுப்பாக்கி "தனி குழுமத்தையே" ஏற்படுத்த வேண்டும்.

அதற்கான சில தனி ஏற்பாடுகள், முயற்சிகள் தேவைப்படும். அதையும் செய்து மாதம் ஒரு முறை வீடியோ செய்தி மலராக போடலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டத்திலும் போடலாம்.

3. பெரியார் எழுத்தறிவு மய்யத்தின் பணிகளுக்கு இன்னமும் பச்சைவிளக்கு நமக்கு கிடைக்காத்தால் சென்ற ஆண்டே

துவக்கப்பட்டிருக்கவேண்டிய 300 மய்யங்களின் பணி இன்னமும் செய்யப்படாமல் இருக்கிறது. விரைவில் இவ்வாண்டு துவக்கப்படும்.

4. ஏழை எளிய நமது கிராம மக்களில் - நகர ம்க்களில் பலர் புற்று நோய்க்கு மிகவும் ஆளாகி வருகிறார்கள் அதைத் தடுக்க புற்றுநோய் ஆய்வு பெரியார் மய்யம் (Periyar Centre for Caner Detection) நமது அறக்கட்டளை சார்பாக அமைக்கப்படும்.

(குறிப்பு: பெரியார் திடலில் இதன் பெயர்ப்பலகை மட்டுமே உள்ளது)

தற்போது பம்பாய் கல்கத்தா போன்ற நகரங்களில் மட்டும்தான் இவை இருக்கின்றன. அதன் சார்பில் தமிழ்நாட்டில் பல முகாம்களை நடத்தி ஏழை எளிய மக்கள் பயனடைய ஏற்பாடு செய்யப்படும்.

5. குழந்தைகளுக்குத் "தங்கத் தாத்தா" நூல் கவிஞர் பூங்குன்றன் எழுதியுள்ளார். அவர்கள் எழுதியுள்ள பாடல்களுக்கு நல்ல இசையுடன் கூடிய கேசட்டுகள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு விற்கப்படும்.

6. ஒவ்வொரு கூட்டத்திலும் வரைபடங்கள், படங்கள் வைக்க வேண்டும். பேச்சு முறையில் மாற்றம் செய்து சில சிலைடுகள் மூலம் விளக்கப்பட வேண்டும்.

–1988 ஆம் ஆண்டு 109வது பிறந்தநாள் மலர்.

1. கிராமப்புற பிரச்சாரம் தீவிரப்படுத்தப்படும்.
2. பெரியார் பிஞ்சுகள் அணி உருவாக்கப்பட வேண்டும்.
3. "இல்லந்தோறும் பெரியார்" தலைப்பில் கேசட் விரைவில் வெளியிடப்படும்.
4. சாதி மறுப்புத் திருமணம், விதவை மறுமணம், கைவிடப்பட்ட பெண்களுக்கு புதுவாழ்வு தரும் திருமணம் செய்வோர்க்கு "பெரியார் வாழ்வியல் விருது" வழங்கப்படும்.

–1989ஆம் ஆண்டு 110 வது பிறந்தநாள் மலர்.

1. பெரியாரின் நூல்களை பலமொழிகளில் வெளியிட: ஆங்கிலத்தில் அதனைச் செய்ய மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற சிறப்பான ஆங்கிலப் பேராசிரியர் டாக்டர் சச்சிதானந்தன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படுகிறது.

தென்னக மொழிகளிலும், சமூக நீதி கருத்துகளை இந்தியாவில் உள்ள

இந்தி பேசும் மக்களுக்கும் போய்ச்சேர இந்தியிலும், பிரெஞ்ச் போன்ற மொழிகளிலும் செய்ய பல்வேறு முயற்சிகளில் நமது இயக்கம் ஈடுபட்டுள்ளது.

நமது அச்சு இயந்திரம் 24 மணி நேரமும் முழு வீச்சில் செயல்பட பணிகள் மலைபோல் உள்ளன.

2. சோவியத் புத்தக நிலையங்களைப் போல பல்வேறு நகரங்களில் அமைக்கும் திட்டம் அய்யா அவர்களின் 112வது ஆண்டில் தொடங்கிக் கொண்டிருக்கும். 1. நகரும் பகுத்தறிவு நூலகம் 2. நகரும் திராவிட இயக்க கண்காட்சி 3. நகரும் மருத்துவமனை இவைகள் கிராமங்களுக்கும் செல்லும்.

3. பெரியார் விழிக்கொடை இயக்கம் சார்பாக 10,000 முடித்து நீதிக்கட்சியின் 75ஆம் ஆண்டு விழாவிற்கு வரும் நம் முதல்வர் கலைஞர் அவர்களிடம் கழகம் வழங்கும்.

4. இளைஞரணி, மாணவரணி அதன் பணிகளைத் தங்கு தடையின்றி செய்து ஒரு சிறப்பான இளைய தலைமுறையினை உருவாக்கிட ஆங்காங்கே மாதந்தோறும் பயிற்சி வகுப்புகள் - முற்றிலும் புதிய விஞ்ஞான முறையில் 1. சிலைடுகள் 2. வீடியோ 3. வீடியோ காட்சிகளுடன் விறுவிறுப்பாக நடத்தப்படும்.

5. எங்கும் "பெரியார் உண்டியல்" வைத்திட வேண்டும்.

6. உறுப்பினர் சேர்க்கை ஒவ்வொரு ஆண்டும் இனி செப்டம்பர் அய்யா விழாவில் தொடங்கி அய்யா நினைவு நாளில் முடிந்திட வேண்டும்.

7. சென்னை அருங்காட்சியகத்தில் அய்யாவின் குரல் ஒலிக்க ஏற்பாடு செய்யப்படும்.

–1990 ஆம் ஆண்டு 111வது பிறந்தநாள் மலர்.

1. ஆங்கிலத்தில் அய்யாவின் நூல்கள் வெளியிடப்படும்.
2. பெரியார் விழிக்கொடை இயக்கம் நடத்தவேண்டும்.
3. பெரியார் வேலைவாய்ப்பு ஆலோசனை மய்யம் ஒன்று நிறுவப்படும் (Self Respect with self employment)

– 1991ஆம் ஆண்டு 112வது பிறந்த நாள் மலர்.

1. அனைவரது வீட்டிலும் பாதுகாக்குமளவிற்கு அய்யாவின் நூல்கள் "பாக்கெட்" வெளியீடுகளாக வெளியிடப்படும்.

2. அய்யாவின் நூல்கள் ஆங்கிலத்தில் வெளியிட குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

1. கோபால கிருஷ்ணன் 2. சி. ஆளவந்தார் 3. பேரா. கு.வெ.கி.ஆசான் 4. முருகு. சுப்ரமணியம் 5. முல்லை முத்தையா 6. குருசாமி 7. சுந்தரராசன்

3. சந்திரஜித் யாதவ் மூலமாக இந்தியில் வெ்ளியிடப்படும்.

4. மற்ற மொழிகளில் வெளியிட வெளிமாநிலத் தோழர்கள், அறிஞர்கள் மூலமாக வெளி நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும்.

5. அதிகாரப்பூர்வமான பெரியார் வாழ்க்கை வரலாற்று நூல் தயாரிக்கும் பணி (Task force) பணிக்குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அந்தப் பணி 3 மாதங்களுக்குள் முடிவடையும் என எண்ணுகிறேன்.

ஒருங்கிணைப்பாளர்: டாக்டர் பு. ராசதுரை எம்.ஏ.பிச்.டி.

1. பேரா. ந. ராமநாதன் 1937-44
2. கலி.பூங்குன்றன் 1945-49
3. இறையன் 1950-67
4. கு.வெ.கி. ஆசான் 1968-1973
5. இமயவரம்பன்
6. நம். சீனிவாசன்
7. "விடுதலை" ராசேந்திரன்

இலக்குவனார் இலக்கியப் பேரவை
நாள்..................
அம்பத்தூர், சென்னை-53

ஆகியோர் அக்குழுவில் உள்ளனர். வடநாட்டு, வெளிநாட்டு அமைப்புகளுடன் தொடர்புகொண்டு தகவல்களைத் திரட்ட பணிகளைக் கவனிக்க தொடர்பு பணிக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஞான. அய்யாசாமி, சி. ஆளவந்தார் -அதன் உறுப்பினர்கள்.

– 1992 ஆம் ஆண்டு 113வது பிறந்தநாள் மலர்.

1. உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மட்டத்தில் தந்தை பெரியாரின் இனமான பகுத்தறிவு சமூக நீதிக் கருத்துகளை பரப்புதல் வேண்டும்.

துண்டறிக்கைகளை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கான திட்டம் தயாரிக்கப்படும். அதன் பொறுப்பாளர்கள் தீவிரமாகச் செயல்பட ஊக்குவிக்கப்படுவார்கள்.

(தலைமைக்கழகம் வெளியிட்ட பிரசுரங்களை வினியோகித்த சென்னை தோழர்கள் 20 நாள் சிறையிலடைக்கப்பட்டு அபராதமும் கட்டினார்கள். கழகம் எந்த நடவடிக்கையிலும் இறங்கவில்லை)

2. அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்தி பகுத்தறிவுப் பிரச்சாரம் இனி நேரிடையாக எல்லா ஊர்களுக்கும் வருவதற்குப் பதில் ஆடியோ, வீடியோ பிரச்சார சாதன முறைகளைப் பெரிதும் அறிவியல் ரீதியாக பயன்படுத்த வேண்டும் சிறு சிறு நாடகங்கள், பாடல்கள், கலை நிகழ்ச்சிகள், மூட நம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சிகள் ஆகிய எல்லாவற்றையும் வீடியோவாக்கி பிரச்சாரத்தினை தீவிரப்படுத்த வேண்டும்.

அறிவியல் மனப்பான்மையைப் பரப்பும் பகுத்தறிவுப் பேரொளி வீச்சாக அமைந்திட தலைமைக்கழகம் தனி முயற்சிகளை இவ்வாண்டு மேற்கொள்ளும்.

2 ஆண்டுகளில் இதற்கென, ஆப்செட் ஆச்சு இயந்திரம், கம்ப்யூட்டர் எழுத்துக் கோர்த்தல் போன்றவைகளை செய்தது போல் - "தனி ஸ்டுடியோவை தக்க மின்னணுவியல் முறையில் ஒலி,ஒளி நிபுணர் களைக் கொண்டு ரூ.50 லட்ச செலவில் மாற்று அமைப்பது பற்றி நாம் கலந்துபேசி முடிவு எடுக்க வேண்டும்.

அமெரிக்க பகுத்தறிவாளர்கள், மனித நேய அமைப்பைச் சார்ந்தவர் கள் பல ஆண்டுகளுக்கு முன்பே மக்களிடையே நன்கொடை பெற்று இதனை செய்துள்ளனர்.

3. "விடுதலையை" ஒரு முழு செய்தித்தாள் வடிவத்துடன் கழகச் செய்திகளோடு கூடுதலாக ஒரு சில பக்கங்களோடு கொண்டு வரும் திட்டமும் ஒருங்கிணைந்து ஆய்வு செய்யப்படுகிறது.

4. கழக வெளியீடுகள், விற்பனை நிலையம் திடலில் உள்ளதுபோல் பல ஊர்களில் தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் அமைத்திடவும், ஒரு தனி நகரும் விற்பனை நிலையத்தை உருவாக்கி பற்பல ஊர்களுக்கு அதனை அனுப்பிடவுமான திட்டமும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

நமது வெளியீடுகள் மட்டுமின்றி உலகப் பகுத்தறிவாளர்கள் முதல் உள்ளூர் பகுத்தறிவாளர்கள், இன உணர்வாளர்கள், சமூக நீதியாளர்கள் நூல்கள் பலவற்றையும் இதில் இணைத்து கடைகளை ஏற்பாடு செய்யவும் திட்டமிட்டுள்ளோம்.

5. "நல்ல நூலைப்படிப்போர்" என்ற ஒரு அறிவியக்கத்தை (Book Campaign) நாடு தழுவிய அளவில் துவக்குவோம்.

6. பெரியார் பன்னாட்டு மய்யம்: உலகின் பற்பல பகுதிகளில் உள்ள பெரியார் சிந்தனையாளர்களை ஒருங்கிணைத்து Periyar International Foundation என்ற பெரியார் பன்னாட்டு பெருமய்யம் ஒன்றைத் தொடங்கிட அமெரிக்காவின் டாக்டா இளங்கோவன், தனி.சேரன், அரசு, லக்குமணன் தமிழ். லண்டன் நண்பர்கள் சங்கரமூர்த்தி,

ரா. செல்வநாயகம். மலேசிய திருச்சுடர் கே.ஆர். ராமசாமி. சிங்கப்பூர் நண்பர் எம்.ஆர். சந்திரன் ஆகியோரிடமும் கலந்து பேசி வருகிறோம். வரும் ஆண்டில் அது உருவாக்கப்படும்.

7. பெரியார் வாழ்க்கை வரலாறு தயாரிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சேகரிப்பும் நடைபெற்று வருகிறது.

-1993 ஆம் ஆண்டு 114வது பிறந்தநாள் மலர்.

1. ஆடியோ வீடியோ மூலம் சாதனைகளின் தொகுப்பு செய்வதுடன் மக்களின் அறியாமையை, போதை வேட்கைகளைப் பயன்படுத்தி சினிமா, கடவுள், மத, சோதிட மூட நம்பிக்கைகளைப் பரப்பிடும் தமிழ்நாட்டு தனியார் தொலைக்காட்சிகளின் தொல்லையிலிருந்து மீட்டு பகுத்தறிவு வாழ்வியலை அறிவியல் ரீதியில் ஆக்கப்பூர்வ சிந்தனைச் செம்மையைச் செய்திட "பெரியர் டி.வி" நிறுவிட அமெரிக்கா தமிழ்நாடு அறக்கட்டளை தலைவர் திரு. சி. கே. மோகனம் அவர்கள் தஞ்சை வேன் அளிப்பு விழவில் இந்த அரிய யோசனையைக் கூறினார்.

2. **ஈழத்தமிழர் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தக் கோரி அய்.நா. அவை மனித உரிமைக் கமிஷனுக்கு அனுப்பி வைக்க 1 கோடி கையெழுத்து இயக்கம் கழக சார்பில் இன்று துவங்கியது. இத்திட்டம் 31-9-95 அன்று முடிவடையும். -(1-8-95 விடுதலை)**

(இந்த கையெழுத்துக்கள் கிடப்பில் கிடக்கின்றன.)

-1995 ஆம் ஆண்டு 116வது பிறந்தநாள் மலர்

பாராட்டுதான் - செயல் இல்லை!!

(பெரியார் கூட்டுத் தொகுப்பு நூல்வரிசை வெளியிடும் நோக்கத்தோடு திருச்சி பெரியார் மாளிகையில் 3 கோடை விடுமுறைகளில் அமர்ந்து - பெரியாரிஸ்டுகள் பெரியாரின் எல்லா எழுத்துக்களையும் ஆண்டுவாரியாகத் தொகுத்து எழுதி முடித்தார்கள். அதைப் பாராட்டி தி.க. பொதுச்செயலாளர் திரு. கி.வீரமணி 2-5-83 அன்று "விடுதலை"யில் வெளியிட்ட அறிக்கையின் ஒரு பகுதி. பாராட்டோடு முடிந்து விட்டது - கூட்டுத்தொகுப்பு நூல் வரிசை வெளியிடும் எந்த முயற்சியும் கடந்த 13 ஆண்டுகளாக மேற்கொள்ளப்படவில்லை)

பழைய "குடிஅரசு, "பகுத்தறிவு", "புரட்சி" ஆகியவற்றில் 1925 முதல் அய்யா அவர்கள் எழுதிய எழுத்துக்கள், பேச்சுக்கள், குறிப்புக்கள் ஆகியவற்றை ஆண்டுவாரியாகத் தொகுக்கும் அரிய பணி திருச்சியில் துவங்கியது.

பகுத்தறிவுப் பேராசிரியர்களும், ஆசிரியர் அணி நண்பர்களும், பெரியார் நூற்றாண்டு வளாகக் கல்வி நிலையங்களின் செயலாளர் புலவர் கோ.இமயவரம்பனின் ஒத்துழைப்போடு இப்பணியை நடத்தினர்.

பெரியார் கருத்துக் கருவூலத் தொகுப்புப் பணியில் ஈடுபட்ட மானமிகு தோழர்கள்.

புலவர் கோ. இமயவரம்பன்,

பெரியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதல்வர்
கோ. கலியராஜுலு

திருச்சி பேராசியர் க. நெடுஞ்செழியன்

பேராசியர் திருமதி சக்குபாய் நெடுஞ்செழியன்

பகுத்தறிவு ஆசிரியர் அணி செயலாளர் நண்பர்
மெ. ஆரோக்கியசாமி

பேராசிரியர் செ.அ. வீரபாண்டின்

திருச்சி ந. வெற்றியழகன்

புதுக்கோட்டை வீ. செல்லப்பன்

தஞ்சை பெ. மருதவாணன்

தஞ்சை பகுத்தறிவாளர் கழகச் செயலாளர் இரா. இரத்தினகிரி

தஞ்சை இரா. பாண்டியன்

லால்குடி ப. ஆல்பர்ட் ஆகியோர் தலைமையில் (சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து) கீழ்க்கண்ட தோழர்கள் உதவியாளர்களாகப் பொறுப்பேற்று செம்மையான பணியாக குடியரசிலிருந்து பெயர்த்து எழுதும் பணி நடைபெற்றது.

புதுக்கோட்டை வி. அருள்செல்வன், கு. மலர்க்கண்ணன், இரா. நடராசன் திருச்சி தாளக்குடி ஆஃபி விக்டர், கோமாகுடி பா. இராசேந்திரன், அ. வெற்றிவேந்தன், க. ராமகிருட்டிணன், ஆறு. இராமலிங்கம், ப. சரவண்ணன், இரா. உமாபதி, லால்குடி பேரின்பச் செல்வன், துறையூர் ஏ. ஜான், புள்ளம்பாடி ஆர் ஜான் ராஜ், தாளக்குடி ஆர். தனபாலன், ப. நடராசன், இர. அருள்மொழித்தேவன், அ. திருமாவளவன், பி.எம். கரிகாலன், திருச்சி ஆர். திருமாவளன், தஞ்சை ஆசிரியர் ந. ஆறுமுகம், வேதாரண்யம் க. நடராசன், வேதாரண்யம் ஆசிரியர் சி. புகழேந்தி, புல்லவராயன், குடிகாடு ஆசிரியர் ச. அறவானந்தன், பாப்பநாடு வெ. சின்னையன், தஞ்சை ம. லெனின், கடன்குடி இரா. இளங்கோவன், சின்னசேலம் கு. மாரிமுத்து, சேலம் உழவர்பட்டி ந. மதிவாணன், தெங்கிய்நந்தம் ஏ. கலைமன்னன், புள்ளிம்பாடி ஆசிரியை நவமணி, வேதாரண்யம் செல்லத்துரை.

- கி.வீரமணி அறிக்கை (2-5-83 விடுதலை)

கி.வீரமணி தலைமையிலிருந்து பிரிந்து வந்த தோழர்களிடம் கேட்கப்படுகிற கேள்விகளுக்கான விளக்கங்களை, கேள்வி-பதில் வடிவத்தில் இங்கு தருகிறோம்.

கேள்வி: வீரமணி கொள்கையை கைவிட்டு விட்டார் என்பது இப்போதுதான் உங்களுக்கு தெரிந்ததா?

பதில்: வீரமணி தலைமையில் உள்ள திராவிடர் கழகத்தில் நாங்கள் இதுவரை உழைத்தது, பெரியார் கொள்கையைப் பரப்புவதற்கு இதைவிட வலிமையான அமைப்பு இல்லை என்ற காரணத்தால் தான்.

குறிப்பாக - பெரியாரின் அடிப்படையான பார்ப்பன எதிர்ப்பு கொள்கையில் முழுமையான நம்பிக்கை கொண்டிருந்த நாங்கள் - அதைச் சொல்வதற்கு இந்த இயக்கம்தானே ஓரளவு வலிமையாக இருக்கிறது என்று இதில் இணைந்து செயல்பட்டோம். பார்ப்பனர் ஜெயலலிதா முதல்வரான பிறகு, அந்த ஆட்சியை சமுதாய நலனுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எங்களிடம் கூறினார்கள். அதிலே எங்களுக்கு இப்போதும் முழு உடன்பாடு உண்டு. இது தொடர்பாக நாங்கள் தொடர்ந்து கழகப் பொறுப்பாளர்களிடம் விளக்கங்கள் கேட்டபோது "இது கழக அணுகுமுறை; கொள்கை அல்ல" என்று விளக்கியதோடு "அணுகுமுறை" என்ற தலைப்பில் தனியே பயிற்சி வகுப்பு நடத்தி எங்களுக்கு விளக்கமளித்தார்கள். அதன் பிறகுதான்

''அணுகுமுறை'' எனும் தலைப்பே தமிழகம் முழுவதும் பயிற்சி வகுப்புகளில் சேர்க்கப்பட்டது. ஆட்சியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோமே தவிர பார்ப்பனர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்தத் துணை போகமாட்டோம் என்று திராவிடர்கழகத் தலைமை கூறியதோடு, பழனி, ராணிப்பேட்டை மயிலாப்பூர் இடைத்தேர்தல்களில் அ.இ.அ.தி.மு.கவை திராவிடர்கழகம் ஆதரிக்காத நிலையை எங்களிடம் எடுத்துக்கூறினார்கள். பார்ப்பன ஆட்சியைப் பயன்படுத்திக் கொள்கிறோம் என்று, இந்த சம்பங்களைக் காரணமாகக் காட்டினார்கள்.

கடைசியில் மீண்டும் பார்ப்பன ஜெயலலிதாவே முதலமைச்சாரக வரவேண்டும் என்று திராவிடர் கழகம் அதிகாரப்பூர்வமாக முடிவெடுத்த போதுதான், இத்ற்குப் பிறகு மக்களிடம் பார்ப்பன எதிர்ப்பையோ, பார்ப்பனிய எதிர்ப்பை யோ, பேசும் தார்மீக உரிமையை திராவிடர் கழகம் இழந்துவிட்டது என்று கருதி நாங்கள் கொள்கைப் போராட்டத்தை கழகத்துக்குள் நடத்திவிட்டு வெளியே வந்திருக் கிறோம்.

கேள்வி: தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்ற பிறகுதான், நீங்கள் வீரமணியின் ஜெயலலிதா ஆதரவுப் போக்கைக் கண்டிப் பதாகக் கூறப்படுகிறதே..

பதில்: இது அப்பட்டமான பொய்ப் பிரச்சாரம். திராவிடர் கழகத்துக்குள் நாங்கள் இந்த கொள்கைப் பிரச்சனையை எழுப்பியது தேர்தலுக்கு முன்பேதான். தேர்தல் முடிவுவந்து தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு நாங்கள் எழுப்பிய பிரச்சனை அல்ல இது.

கேள்வி: கடந்த காலங்களில் திரு.வீரமணியைப் புகழ்ந்து கொண்டிருந்துவிட்டு இப்போது அவரை திடீரென விமர்சிப்பது சரியா?

பதில்: திரு. வீரமணி அவர்களை நாங்கள் தனிமனிதராகப் பார்க்காமல் பெரியார் கொள்கையை வழிநடத்தும் ஒரு தலைவராகவே பார்த்தோம். எனவேதான் திரு. வீரமணி அவர்களுக்கு ''கொள்கையின் அடிப்படையில் புகழ் சேர்ப்பதன் மூலம்'' கொள்கைக்கு செல்வாக்கை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டோம். அதே நேரத்தில் திரு. வீரமணியை கொள்கையிலிருந்து பிரித்து தனிமனிதன் என்ற கண்ணோட்டத்தில் நடந்த செயல்பாடுகளில் தென்சென்னை திராவிடர் கழக இளைஞரணி ஒதுங்கியே இருந்திருக்கிறது. உதாரணமாக வீரமணிக்கு கார் வழங்க நிதி திரட்டியபோதும், வல்லத்தில் பெரியார் மணியம்மை கல்வி அறப்பணிக்கழகம் நடத்தும் பெண்கள் பொறியியல் கல்லூரிக்கு நிதிதிரட்டும் போதும், நாங்கள் ஒதுங்கி நின்று இவைகளில் பங்களிப்பை வெளிப்படையாக தரமறுத்து விட்டோம். திரு.வீரமணிக்கு பிறந்தநாள் விழா நடத்தியதும் எங்களுக்கு உடன்பாடு இல்லை என்பதால், அந்த நிகழ்ச்சிகளைப் புறக்கணித்தே வந்திருக்கிறோம்.

''தமிழர் தலைவர்'' என்ற பட்டம் தந்தை பெரியாருக்கு மட்டுமே உரியது என்பதால் திரு.வீரமணி அவர்களை அழைத்து நடத்திய எந்த நிகழ்ச்சிக்கான விளம்பர சுவரொட்டியிலும் - அந்தப் பட்டத்தைக் குறிப்பிடுவதை நாங்கள் தவிர்த்தே வந்தோம்.

எங்களது பார்வை பெரியார் கொள்கையோடு தலைமையை இணைத்துப் பார்ப்பதாகவே இருந்தது. இப்போது பெரியார் கொள்கையை திரு.வீரமணி தன்னிடமிருந்து வெளிப்படை யாகத் துண்டித்துக் கொண்டுவிட்டதால், நாங்கள் அவரது தலைமையிலிருந்து துண்டித்துக்கொண்டு விமர்சனத்துக்கு உள்ளாக்கி வருகிறோம். இதுகூட கொள்கையின் அடிப்படை யான விமர்சனமே தவிர, தனிப்பட்ட மனிதர் மீது அல்ல.

கேள்வி: தனி அமைப்பைத் துவக்கி நடத்துவது இயலக் கூடியதா?

பதில்: தனி அமைப்பைத் துவக்கவேண்டும் என்பதோ அதில் தலைவர் களாக வரவேண்டும் என்பதோ, எங்களின் நோக்கமோ, விருப்பமோ அல்ல, பெரியார் கொள்கைக்கு கடும் ஆபத்து உருவாகி விட்டநிலையில் அதைக்காப்பாற்ற வேண்டிய வரலாற்றுக்கடமையை நாங்கள் செய்தாக வேண்டும் என்று கருதுகிறோம். பெரியாரியலுக்கு புதிய சவால்கள். புதிய முகாம்களிலிருந்து கிளம்பியிருக்கும் ஆபத்துகளை தத்துவரீதியாக முறியடிக்கவும், பெரியார் காலத்துக்குப் பிறகு - அவர் சுட்டிக் காட்டிய எதிரிகள் புதிய வடிவங்களில் உருமாற்றம் பெற்றிருப் பதை அடையாளம் கண்டு அவைகளை பெரியாரியல் கண்ணோட்டத்தில் அம்பலப்படுத்த வேண்டியதும், அழிந்து கொண்டு வரும் பெரியார் நூல்கள் வெளிவர வேண்டியது மான அவசியமான காலகட்டம் இது என்பதாலும் நாங்கள் இந்தக் கடமையையாற்ற முன்வந்திருக் கிறோம். தேர்தலில் நின்று ஆட்சியைப் பிடிக்கப்போகிறவர்கள் அல்ல நாங்கள் என்பதால், வெற்றி தோல்வி பற்றி நாங்கள் கவலைப்பட

வில்லை. பெரியார் தத்துவத்துக்கான தேவையும், பயன்பாடும் சமூகத்தில் இருக்கும்வரை அதைக் காப்பாற்றவும், நிலை நிறுத்தவுமான இயக்கங்கள் உருவாவது வரலாற்றுக் கட்டாயம் ஆகும்.

கேள்வி: உங்கள் அமைப்பு வீரமணி தி.க.வுக்கு போட்டி அமைப்பா?

பதில்: நிச்சயமாக இல்லை; திரு.வீரமணியை எதிர்ப்பதற்காக ஒரு அமைப்பைத் துவக்கி நடத்த வேண்டிய அவசியமுமில்லை. பெரியாரியலுக்கு ஆதரவாக பெரியாரியல் அமைப்புகள் எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும், இந்த அமைப்பு ஆதரித்து நிற்பதும் பெரியாரியலுக்கு துரோகம் செய்யும் சக்திகளை கொள்கை அளவில் அம்பலப்படுத்துவதும் பெரியாரியல் அமைப்புகளோடு ஒருங்கிணைந்து செயல்படுவதும் எங்களது அணுகுமுறையாக இருக்கும்.

✪ ✪ ✪

கி. வீரமணி தலைமையின் கீழ் அணிந்திருந்த கருப்புச் சட்டை பார்ப்பனிய மயமாகிவிட்டது என்று அறிவித்து அதை கழற்றி விட்டு தந்தை பெரியாரின் லட்சிய கருஞ்சட்டை அணியும் போராட்டக் காட்சிகள்.

(நாள் 25-6-1996 இடம் : அண்ணா சாலையில் தந்தை பெரியார் சிலை, சென்னை)



பார்ப்பனியத்திற்கு துணை போனது யார்?

இந்த வகையில் பார்ப்பனியத்திற்குத் துணை போவதும், பிற்போக்கு சக்திகளுக்குப் பால் ஊற்றுவதும், தந்தை பெரியார் கொள்கையை குழி தோண்டி புதைத்த வேலையல்லவா? இந்த சதி வேலைக்கு துணை போனது தலைமையா? நாங்களா?

446 - அனைத்து கழகப் பொறுப்பாளர்களுக்கும் அனுப்பியது.

திராவிடர் கழகத் தோழர்களுக்கு அன்பு வேண்டுகோள்!

அன்புடையீர் வணக்கம்,

தந்தை, பெரியாரின் அறவுறுமுறைப்படியும் தலைமைக்கழக வேண்டுகோளின்படியும் வருகின்ற **27-4-96**ல் நடைபெறும் சட்டமன்ற நாடாளுமன்ற தேர்தலில் தலைமைக்கழகம் முடிவின்படி

ஆளும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக வேட்பாளர்களுக்கு

இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க **வேண்டுகிறோம்**

மாவட்ட நகர ஒன்றிய கிளைக் கழக தோழர்கள், இளைஞரணி, மாணவரணி, தொழிலாளரணி, மகளிரணி, ப. க., ப. க., ஆசிரியரணி ஆகிய தோழர்கள் கழக ஆதரவாளர்களும் தலைமைக்கழக வேண்டுகோளின்படி செயல்பட வேண்டுகிறோம்.

ஏ. சங்கரன்
க. செல்லத்துரை
மாவட்ட செயலாளர்கள்

இப்படிக்கு,
கருமலை ஏ. வே. ஜெயபதி
மாவட்ட தலைவர்.
திராவிடர் கழகம்
தீரன் சின்னமலை மாவட்டம் கரூர்

[illegible]

தேர்தல் பிரச்னை அல்ல: கொள்கை பிரச்னையே!

பெரியாரின் அடிப்படையான கொள்கை பார்ப்பன எதிர்ப்பு. ஆனால் ஒரு பார்ப்பனரே, மீண்டும் முதலமைச்சராகலாம் என்று திராவிடர் கழகம் தீர்மானித்து செயல் பட்டதால், மக்களிடையே எதிர்காலத்தில் பார்ப்பன எதிர்ப்பைப் பேசும் தார்மீக உரிமையையே இழந்து நிற்கிறது. எனவே இது தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற பிரச்சனை அல்ல, அடிப்படையான கொள்கைப் பிரச்னை.

இந்நூலின் உள்ளே.....

- ❐ திராவிடர் கழகத்துக்குள் நடத்திய கொள்கைப் போராட்டம்
- ❐ நடந்து முடிந்த தேர்தலில் தி.க. பொதுச்செயலாளர் வீரமணியின் 'இரட்டை வேடம்'.
- ❐ வீரமணியின் செயல்வடிவம் பெறாத - அதிரடி அறிவிப்புகளின் பட்டியல்.
- ❐ கொள்கை துரோகங்கள் பற்றிய அ[illegible]ப்பூர்வ விளக்கங்கள்.